And you've created whales to guard them!
Is it fair? Tell me please!

4. என்னஇது? நஞ்சுமிழும் நாகத் திற்கே
எழிலான படமுகத்தை அளித்து விட்டுப்
பொன்னான இசையெழுப்பும் குயிலுக் கிங்கே
போய்க்கரிய நிறமளித்தே அநீதி செய்தாய்!
தின்னுதற்கே இயலாத பழம்எட் டிக்குச்
செந்நிறத்தில் வனப்பான வண்ணம் தந்தாய்!
கன்னல்நேர் பலாப்பழத்தின் மேனி யெல்லாம்
கைவலிக்கும் முள்படைத்துக் கொடுமை செய்தாய்!

5. உலகத்தின் பெரும்பகுதி நீராய் வைத்த
உன்திறமை பாராட்ட முனைவோம் என்றால்,
பலனற்ற உவர்நீரைப் படைத்து விட்டுப்
பசித்தாகம் தீர்ப்பதற்குத் தடைஏன் போட்டாய்?
விலங்குகளில் மனிதருக்கே அறிவை வைத்து
விஞ்ஞானச் சாதனைகள் புரிய வைத்தாய்!
அலங்கோலப் பாழ்படைப்பே! எங்க ளுக்கேன்
அண்டத்தில் பறப்பதற்கே இறக்கை இல்லை?

6. தங்கத்தை, வைரத்தை, கஞ்ச னைப்போல்
தரைக்குள்ளே வெகுதொலைவில் புதைத்து வைத்தாய்!
அங்கத்திற் கழகூட்டும் மாலை யாக
அணிவதற்குத் தந்தத்தைக் தேடும் போதோ
வெங்கொடுமை யானையிடம் தந்தாய்! எங்கள்
வேதனைகள் விளையாட்டோ உன்ற னுக்கே!
பொங்குகின்ற குளிர்அருவி படைத்த நீயா
பூகம்பம் படைத்திங்கே பாழ்செய் கின்றாய்?

7. மத்தாப்பு மழைபொழிய வைக்கும் போதோ
வைரஒளி மின்னலெனும் தோர ணத்தைக்
கித்தாப்பாய்க் காட்டுகின்றாய்!' ஆனால் எங்கோ
கிழச்சிங்கம் கத்துதல்போல் இடியைப் போட்டே
எத்தனைபேர் விழிகளினைப் பறித்தாய்? மேலும்
ஏனிங்கே புயலாகச் சீறு கின்றாய்?
கொத்தாக உயிர்களினைப் பறிக்கும் உன்றன்
கொடுமைக்கும் தாய்மைக்கும் தொடர்பா உண்டு?


4. Why have you given a colourful hood
    to the venom-spitting cobra and at the same time
A dark hue to the cuckoos which sing
    in melodious voice? Is it not injustice?
Etti, a poisonous bitter fruit
    you've created with alluring red hue!
Sweet jack fruits you have created
    with a rough and thorny outer layer!

5. The major portion of the earth is surrounded
    by water! It is commendable indeed!
Yet you have made the sea water salty
    and useless for consumption!
You created men with wisdom and common sense
    capable of making scientific inventions!
O shabby creation! Why didn't you offer us
    colourful feathers to fly over the space?

6. Like a miser, you've buried gold and diamonds
    some fathoms deep beneath the earth!
Ivory useful for wearing as ornaments
    you've given to the wild elephants!
Hazardous is the task to get the tusk from them!
    Do you derive pleasure on our agony?
You created cool streams and at the same time
    the earthquake that causes disaster!

7. When the earth experiences lashing showers
    you exhibit a serial light of lightning
Which dazzle like glittering diamonds!
    With thunder that roars like an aged lion
You've spoiled the lives of so many persons
    And why do you cause the disastrous tempest?
Groups of human lives you swallow at a stretch!
    Is this a compassionate mother's trait?

8. சிறுஅயிரை கெண்டைக்கே தீனி! அந்தச்
சேற்கெண்டை பாம்புக்கே தீனி! பாம்போ
கறுஞ்சேவல் தொண்டைக்கே தீனி! எங்கள்
கடும்பசிக்கோ அச்சேவல் தீனி என்றே
வெறுக்கின்ற விதிச்சட்டம் வகுத்து விட்ட
வேதனைகள் சரிதானா? வயிறென் றொன்றை
மறைத்துடலில் வைக்காமல் இருந்தி ருந்தால்
மண்ணகத்தில் போராட்டம் நிகழ்வ தேது?



8. *Ayirai** variety is a prey to the *Kendai* fish!
That ***Kendai*** is a prey to the snakes!
That snake is a prey to the crowing cocks!
That cock is a dish of human beings!
Is this not a loathsome rule of law?
Is it fair? If you haven't
Created us with endless hunger,
would there be bickerings in the world?

* Loach(fish)




9. எத்தனை ஆசிரியர்!

1. பள்ளியில்தான் ஆசிரியர் உள்ளார் என்றே
பார்க்காதே, என்தோழா! அதோபார்; ஆழி
துள்ளிவரும் வெள்ளலைஓர் ஆசான்; தோயாச்
சுறுசுறுப்பை அதைப்போலே புகட்டு வோர்யார்?
வெள்ளியுடன் விழித்தெழுந்தே விடியல் தன்னை
விளம்புகின்ற காகம்ஓர் ஆசான்! நெஞ்சை
அள்ளுகின்ற புன்சிரிப்பின் மாண்பைக் கூறும்
அழகுமலர் ஒவ்வொன்றும் ஆசான் என்பேன்!

2. தன்கடமை தவறாமல் நடக்கும் ஆறோ
தடம்உணர்த்தும் பேராசான் என்பேன்; வீசும்
மென்தென்றல் ஓர்ஆசான்; தேடி வந்து
மேனிக்கே மகிழ்வூட்டும் தொண்டைக் கூறும்!
வன்னெஞ்சர் வாளாலே வெட்டி னாலும்
மாளும்வரை நிழல்தந்தே குளிர்ச்சி நல்கும்
நன்மரம்ஓர் நல்லாசான்! கூட்டுத் தேனீ
நமக்கெல்லாம் சேமிப்பை உணர்த்தும் ஆசான்;

3. சீர்வரிசை ஒழுங்குமறை செப்பும் ஆசான்
சிற்றெறும்பைப் போலுண்டா? கழிவு நீரை
வேருக்கே அளித்தாலும் தென்னை தானே
விருப்பமுடன் இனிப்பிளநீர் கொடுக்கும் ஆசான்!
ஏர்முனையால் சீர்உழவர் வதைத்த போதும்
இதமுடனே உதவும்மண் புழுவோர் ஆசான்!
பார்நண்பா! உற்றுப்பார்! உலக மெங்கும்
பல்வேறு ஆசிரியர் உள்ளார்; தேடு!



9. Countless Are The Teachers!

1. O my friend! Don't be under the illusion
that teachers are there in the schools alone!
Behold the tossing white wave which is also a teacher!
Who else has taught us to be ever busy?
The crow that gets up along with the morning star
is another teacher heralding the dawn!
Every alluring flower is a teacher
making us realize the charm of a sunny smile!

2. The river, that ceaselessly flows, teaches us
that we should be duty-bound always!
The gentle breeze is another teacher that teaches us
how to render a selfless service!
The tree is yet another teacher in the world
that yields shade even to those who cut it
By using some sharp tool! The honey-bee
is another teacher teaching us the need to save!

3. Has any other teacher taught us like the ant
to maintain discipline and march one by one?
Even though we pour dirty water to the roots,
the coconut tree yields tender coconuts!
Despite the harm inflicted through the ploughshare,
the earth worm, that helps tillers, is another teacher!
Behold my friend! Use your attentive eyes!
The world possesses countless number of teachers!



10. புல்

1. மண்மங்கை மானத்தை மூடிக் காக்க
    வந்ததொரு பட்டாடை நான்தான்! உங்கள்
கண்காணும் பசுமைஎழிற் காட்சி கட்குக்
    காரணமே நானென்றால்,என்னைத் தானா
உண்பதன்றி வேறறியா உலுத்த ருக்கே
    உவமைஎனப் பேசுகின்றீர்? சரியா? நெஞ்சம்
புண்பட்டுச் சொல்கின்றேன், மனிதர் தம்மைப்
    புல்லர்என்றே அழைத்தென்னைப் பழிக்க வேண்டாம்!

2. இருக்கின்ற கட்சிக்கே உழைக்கும் தொண்டர்
    இருப்பதுபோல் இருக்கின்றேன் நானும் சின்ன
அருகம்புல் உணவாகச் செல்வ தால்தான்
    அரும்பசுவும் நறும்பாலைக் கொடுக்கக் கண்டோம்.
இருக்கின்ற தொண்டரின்றிக் கட்சி ஏது?
    இலங்குகின்ற நானின்றேல் பால்தான் ஏது?
சுருக்கமுடன் சொல்வதெனில். வாழை, தாழை,
    சுவைமஞ்சள்,செங்கரும்பு என்இ னந்தான்!

3. தேக்குமரக் கட்டிலினை ஒருநாள் கூட
    திருவிழியால் காணாத குப்ப னுக்கே
ஆக்கிவைத்த காதல்மஞ்சம் நான்தான் ஆனேன்!
    அவனிடத்தில் வாடகைநான் கேட்ட துண்டா?
தாக்குதலைக் தாங்காமல் தப்பி ஓடத்
    தவிக்கின்ற பூச்சிகட்கே புகலி டம்நான்!
நோக்குங்கால் ஏழைக்கே ஏழை தானே
    நொடிப்போதும் தவறாமல் உதவ வேண்டும்!


10. The Grass

1. I am the silky attire that safeguards
   The honour of the Dame Earth!
   For all the colorful scenery of the word
   I'm the root cause! Yet,
   Miserable it is that you use similar terms to me
   And to mean- minded persons! Is it fair?
   With wounded heart I Make this fervent appeal!
   Don't degrade me by such similarity of word!

2. I am like a volunteer who strives hard
   For the political party to which he belongs
   Since I'm given as the cattle feed,
   You get sweet milk from the cows!
   Can any party survive without volunteers?
   Without me, can you think of getting milk?
   In short, the banana screw spine, turmeric
   Sugar-cane- all these plants belong to my group!


3. To the persons who have not slept
   On any teak- wooded cot,
   I am really a Mattress of love!
   Did I ever demand from him any rent?
   I am also an effective shield for the insects
   Trying to escape from their assaulting foes!
   Is it not true a poor man alone
   Another needy one without hesitation?

4. திருப்பதிக்குச் சென்றவன்போல் வழுக்கை யாகத்
திசைசுற்றும் மண்கோளம் இருந்த போது,
உருப்படியாய்ப் பசுமுடியாய் நானும் ஆனேன்!
ஊர்ந்துசெலாச் செல்போன்ற அரிசி தன்னை
விருப்பமுடன் என்முடியில் சுமந்தே உங்கள்
விலாவெல்லாம் நிறைக்கின்றேன்! ஆண்டுக் காண்டு
வருகின்ற பொங்கல்விழா என்வி ழாதான்;
வாதத்தை மறுப்பதற்கும் வாதம் உண்டா?



4. When the world remained barren
Like the tonsured head of a devotee,
I became its green-hued hair!
Willingly I bear rice on my crown
And yield it for human consumption!
Pongal Festival you celebrates every year!
Is it not really my festival?
Can you refute this argument of mine?

N.B:-Pullar(புல்லர்)- mean minded persons in Tamil. Pul (புல்) -means grass. Both look similar. The poet makes a dig at this similarity.




11. பேசுகிறது பனைமரம்

1. நெட்டைநெடும் பனைமரமே! என்றே மூட
நெளிவற்ற தடியருடன் ஒப்பிட் டென்னைத்
திட்டாதீர்! மங்கைஇதழ் இனிப்பைப் போன்ற
தித்திக்கும் நுங்களிப்போர் யார்?யார்? நான்தான்!
வெட்டிஎனை வீழ்த்திடினும் ஏழைக் குப்பன்
வீட்டுக்குத் தூணாவேன்; கூரை யாவேன்!
நெட்டிழைபோல் என்மட்டை ஓடு கின்ற
நீள்நரம்பைக் கயிறாக்கி உதவு கின்றேன்!

2. நீர்பாய்ச்சி, உரம்போட்டுக் களையெ டுத்தே
நீங்கள்எனை வளர்ப்பதுண்டா? மழையே காணாத்
தார்ப்பாலை வனம்போன்ற மணலில் கூடத்
தழைத்திருப்பேன்! உழைப்போரின் களைப்பை ஓட்டச்
சீர்ப்பதநீர் தந்திடுவேன்! என்றன் கொட்டை
செம்மண்ணில் புதைத்தாலும் கிழங்க ளிப்பேன்!
ஊர்ஏரிக் கரையெல்லாம் உரத்தைச் சேர்ப்பேன்!
ஓயில்சேர்ப்பேன்! எனைச்சிறுமை செய்ய லாமா?

3. இத்தனைக்கும் மேலாகச் சங்க கால
இலக்கியங்கள் உம்கையில் தந்தோர் யாராம்?
வித்தகர்நம் வள்ளுவரும் இளங்கோ போன்ற
மேன்மைமிகு புலவர்களும் என்றன் ஓலைக்
கைத்தலத்தில் வரைந்தவையே அன்றோ? அன்றைக்
காகிதமாய் ஓலைகளை அளித்தேன்! உங்கள்
சொத்தான பழஞ்சுவடிகளை மீட்ட தற்கா
சுடுசொல்லால் வதைக்கின்றீர்! வேண்டாம், அய்யா!



11. The Pang Of A Palmyra Tree

1. For chiding a foolish and worthless person
   kindly don't use my name for comparison!
   Don't I yield you sweet kernel which is
   as sweet as the lips of the ladies?
   Even if I'm felled down, I become a pillar
   to the hut of the poor! Useful I'm to the roof also!
   My nerves which act as a shield to my trunk
   I offer you for spinning ropes!

2. Did you provide me water or fertilizer?
   Did you weed out anything that marred my growth?
   I would flourish even in a sandy desert
   where there is no rain fall? My toddy sweet
   Drives away the weariness of workers!
   Even if my seed is buried in red soil
   Tuber I would surely yield! I strengthen
   The banks of tanks! Should I be disregarded?

3. "Above all, think awhile as to who is responsible
   for preserving the Sang*am* Age literature of Tamil?
   Did not **Valluvar** the peerless genius of all times
   and poets of **Ilango's** calibre use my leaves
   For writing their renowned and immortal verses?
   I offered my leaves as sheets of paper to write on!
   Do you ridicule me for having preserved
   your priceless treasure of literature? Please don't!



12. பூக்களே, பூக்களே!

1. பூக்களே! **சோலையெனும்** கவிதை ஊரின்
புன்னகைக்கும் **திருமுகங்கள்** நீங்கள் அன்றோ?
மூக்குக்கே மணவிருந்து வைப்பீர்! மேலும்
மொய்க்கின்ற ஈக்களெனும் பணியாள் மூலம்
நாக்குக்கும் விருந்துவைக்கத் தேன்ச மைத்து
நல்லுணர்வோ டனுப்புகின்ற மகளிர் நீங்கள்!
ஆக்கத்தின் **அரிச்சுவடி** நீங்கள் தானே!
ஆம்குழவி மென்மையினை எங்கே பெற்றீர்!

2. பருவத்தின் மாற்றமெலாம் காட்டு கின்ற
பலவண்ணக் கண்ணாடி நீங்கள் அன்றோ?
உருவத்தால் வண்டென்னும் காத லர்க்கே
ஒய்யாரத் தூதனுப்பி அழைக்கின் றீர்கள்!
அருமையுடன் **பலவண்ணச் சாயம்** தோய்த்தே
அற்புதமாய் **உடைநெய்தோன்** இயற்கை தானா?
பெருமைகொளும் மாதர்தலைக் கிரீடம் நீங்கள்!
பீடுடையோன் ஆண்என்றா அணுக வில்லை?

3. ஒருநாளே வாழ்ந்தோயும் உயிர்கள் நீங்கள்;
ஒப்பரிய பெருவாழ்வால் உயர்ந்து நிற்பீர்!
திருமணங்கள் முடிக்கின்றீர்; பெண்ணும் ஆணும்
திருப்பிஉமைக் கழுத்தணிந்தால் மன்றல் என்போம்!
உருமாறிச் சருகாகி எருவா னாலும்
ஒப்பற்ற மண்வளத்தைப் பெருக்கு கின்றீர்!
பெரும்பயணம் மனிதஉடல் போகும் போதும்
பிணவாடை தனைமாற்றி மணக்கச் செய்வீர்!

12. O Flowers!

1. O flowers! Are you not the smiling faces
   of the garden of verses?
   You offer feast to the nose! Then
   engaging swarming fleas as your servants
   You offer feast to the tongue
   by sending honey, which is your preparation!
   Are you not the alpha of creation?
   How did you get the softness of children?

2. Are you countless colourful mirrors
   which clearly reflect the change of seasons?
   By your charm and fragrance you solicit
   the humming bees, your endearing lovers!
   Is it not the Nature, a deft weaver that wove you
   by dipping you in colourful dyes?
   You act as a crown to the heads of women!
   Have you excluded men as they are beautiful by nature.


3. Within a day your life time is over!
   Yet it is an exalted one like a tower!
   You solemnize marriages! Exchanging garlands
   is a ritual indispensable in a wedding!
   Even after withering, you become a fertilizer
   and increase the fertility of the field!
   In the last journey of human beings, your fragrance
   chases away the stench of the corpse!

4. காய்பிறந்து கனிகுலுங்கும் காட்சிக் கெல்லாம்
கவின்மொட்டுச் சாட்சிகளோ நீங்கள்? காவில்
வாய்விட்டு நீங்களெல்லாம் நகைக்கும் போது
வரும்எழுச்சிக் கற்பனையே கவிதை என்பேன்!
சாய்ந்தாடும் உங்கள்தலை சாய வைக்கும்
சரித்திரத்தைக் காய்கதிரோன் நடத்து கின்றான்!
சேய்போன்றே சிரித்தஉமைக் கண்டு தானே
செழும்பாரி தேர்தந்து நடந்தே போனான்!

5. காதலெனும் வாணிகத்தில் காசே நீங்கள்!
கடுஞ்சினத்தோ டிருக்கின்ற தலைவி ஊடும்
மோதலினைப் போக்கிடுவீர்! தரக ராகி
முறுவலினை வரவழைப்பீர்! இந்த மண்ணில்
சாதனைகள் புரிகின்ற மேலோர் தோளில்
சரம்விரிக்கும் பட்டயங்கள் நீங்கள்! காணும்
வேதங்கள் கூறாத பாட மெல்லாம்
விளக்குகின்ற புதுமறைகள் அன்றோ நீங்கள்?

6. மனிதர்களின் நரம்போடும் குருதி யெல்லாம்
மணம்வீசி நிற்பதுண்டா? ஆனால் உங்கள்
பனிஉடலின் குருதிஎனும் அத்தர் தானே
பலவகையில் மணக்கிறது! பிழியும் போதும்
தனிமணத்தைத் தந்தன்றோ மாள்கின் றீர்கள்?
தன்னலத்து மனிதருக்கா பாடம் சொன்னீர்?
புனிதத்தின் பிறப்பிடமாய் ஆனீர்! உம்மைப்
புகழாத புலவனுக்கே பெருமை ஏது?

7. அல்லிஎன்றும் தாமரைகள் என்று மிங்கே
அகிலத்தில் பலபெயரில் விளங்கு கின்றீர்!
துல்லியநல் நிலவோனை மணக்கும் அல்லி
சுடர்உமிழும் கதிரோனைக் கண்டு விட்டால்
மெல்லிதழின் முகம்மூடிக் கற்பைக் காப்பாள்;
வியப்பூட்டும் இப்பண்பை மறப்ப துண்டா?
எல்லோர்க்கும் மகிழ்வூட்டும் மலர்க ளே!ஏன்,
இறப்பினையும் உடன்சேர்த்தே பிறக்கின் றீர்கள்?




4. Are you not the source of unripe fruits
which in course of time become ripe and sweet?
Verses are the reflections of the emotions
kindled by your scintillating smile!
The hot sun causes the tragic episode
of causing your tossing heads fall on the ground!
Your sunny smile reassembles that of tender babes!
Lured by that **Pāri** gifted his chariot and went off!

5. You are the legal tender in the trade of love!
The angry moods of the loving maids
You are capable of pacifying
and make both of them smile!
You act as a symbol of honour
when garlanded for men's rare achievements!
You play the role of holy scriptures
and offer lessons which e'en the Vedas don't!

6. Does the human blood that flows
through nerves emit a soothing fragrance?
But the blood that flows in your soft petals
smells sweet and gives us perfumes!
Even when squeezed you die emitting a sweet smell!
So, a valuable lesson you offer to selfish men!
Needed you are for all the sacred acts!
Without extolling you can any poet become famous?

7. You bloom on the earth as lilies
lotuses and in numerous such names!
The lily maid that weds the cool moon
shuts its petals as soon
As it sees the sun and safeguards its chastity!
Can we ever forget this miraculous character?
O the flowers which offer happiness to all!
Why does death come at the heels of your birth?



13. காகம் கற்பிக்கும் பாடம்!

1. காக்கைகள் சொல்லும் பாடம்
கணக்கிட்டால் ஒன்றி ரண்டா?
தூக்கத்தில் கிடக்கும் நம்மைச்
சூரியன் எழுந்தான் என்றே
காக்கைதான் குரல்கொ டுத்துக்
கடிகாரம் போல்எ ழுப்பும்;
காக்கையே கடமை தன்னைக்
கற்பிக்கும் **ஆசான்** என்பேன்.

2. இரையொன்றைப் பார்த்து விட்டால்
இனமெலாம் அழைத்துக் கூட்டி,
அருமையாய்ப் பகிர்ந்தே உண்ணும்
அற்புதம் நிகழ்த்தும்; இந்தக்
கருநிறக் காக்கைக் கூட்டம்
கற்பிக்கும் **பொதுமைப் பண்**பை
இருக்கின்ற மனிதர் எல்லாம்
எப்போது பெறப்போ கின்றோம்?

3. எச்சிலைச் சளியை எல்லாம்
எங்கெங்கோ துப்பு கின்றோம்;
முச்சந்தி யெல்லாம் செத்த
மூஞ்சூறை வீசு கின்றோம்;
கச்சித மாக வந்தே
காக்கைதான் **தோட்டி** போலே
அச்சாரம் துளிகேட் காமல்
அன்றாடம் **சுத்தம்** செய்யும்.

13. The Crows Show Us The Way

1. Is it easy to enumerate the lessons
   that we've to learn from the crows?
When we are fast asleep in the morn
   the crows announce the rising of the sun,
By raising their jarring noise
   And thus they play the role of a time piece!
I dare say that sincerity of duty
   can be learnt from crows alone!

2. When a crow comes across its prey
   it caws aloud calling the fellow birds
And shares it along with them!
   This is a marvel indeed!
The solemn lesson of common good
   is ably taught by the crows to us!
And when we men are going to learn
   that precious lesson from them?

3. Our spittle and filthy froth
   we spray all around us!
In all our street corners
   we abandon the dead mice!
The crows suddenly emerge there
   like so many scavengers
And do the task of cleaning,
   without demanding any advance from us!


4. மாலையில் குளித்தி டாமல்
மனைஅவை புகுதல் இல்லை;
சோலையில், தெருவில் நம்முன்
சோடிகள் சேர்வ தில்லை;
நூலொன்றும் படித்தி டாமல்
நுட்பங்கள் அறிந்தி ருக்கும்
கோலஇக் காக்கைக் கூட்டம்
கூறிடும் பாடம் விந்தை!

5. ஒருகாக்கை மாண்டு போனால்,
ஊர்வாழும் காக்கை யெல்லாம்
திரண்டொன்றாய்ப் புலம்பும்; சோகச்
செய்தியை உரக்கக் கூறும்;
இருக்கின்ற தமிழா! உன்றன்
இனச்சுற்றம் ஈழ மண்ணில்
அரக்கரால் மடியும் போதும்
ஆமைபோல் ஒளிதல் நன்றா?



4. In the evening, without taking bath,
    they don't settle in their nests!
No pair of crows would cohabit
    in any public place or garden!
Without going through any book,
    they've learnt this decency!
Such lessons taught by the crows
    are wonderful indeed!

5. If one crow happens to die
    all the crows living around
Would assemble, raise alarm
    and announce the tragic news aloud!
O Tamils who simply eke out your livelihood!
    When your kith and kin are hunted
By some demons in the **Eelam** soil,
    is it fair to remain like a tortoise?



14. குயிலே! குயிலே!

1. கட்டணமே கேட்காமல் சோலை யெல்லாம்
கன்னல்இசை பரப்புகின்ற குயிலே! பாழும்
துட்டொன்றே இலட்சியமாய் வாழும் தீய
சுயநலத்துத் தலைவர்கட்கா பாடம் சொன்னாய்?
எட்டாத கிளைமறைவில் கித்தாப் பின்றி,
இசைமாரி பொழிகின்றாய்! நாட்டில் வாழும்
முட்டாள்கள் சிலரிங்கே விளம்ப ரத்து
மோகத்தால் அலைதல்கண்டு நகைக்கின் றாயா?

2. கருப்புக்கே பெருமையினைத் தேடித் தந்த
கண்ணான நற்பறவை நீதான்! செம்மை
நெருப்பதுவும் அழகாகத் தோன்றும்; ஆனால்
நெருங்கியதைக் கையெடுத்தே மகிழ்வார் உண்டா?
இருக்கின்ற எட்டிமரக் கனிகள் எல்லாம்
எழிற்சிவப்பே! ஏறெடுத்தும் காண்போர் யார்?யார்?
கருஞ்சட்டை உடைகண்ட பெரியார் தானே
காலமெலாம் ஒளியூட்டும் கருத்தைச் சொன்னார்!

3. மயிலழகோ விழிகளையே ஈர்க்கும் !உன்றன்
மயக்குகின்ற மதுக்குரலில் தோய்ந்த தாலே,
குயிலென்றே தம்ஏட்டை அழைத்தார் பாட்டுக்
கோவேந்தர் பாவேந்தர்! சிலரோ மண்ணில்
முயல்போலே தம்குடலைப் பார்த்துக் கொள்வார்!
முப்போகப் பயிர்வளர்த்தே உயிரைக் காக்கும்
வயல்போல வாழ்பவரோ சிலரே! எம்மை
மகிழ்ச்சியிலே சூழ்கடிக்கும் குயிலே! வாழி!



14. O Cuckoo

1. O, cuckoo! You fill the entire garden
with your melodious notes, demand not any charge!
Do you thus teach a lesson to the greedy men
to whom minting money alone is the ambition!
Without haughty air you pour the shower
of music, hiding yourself in the branch of a tree!
Are you mocking at some worthless men here
who run after publicity and fanfare?

2. Perhaps you're the only bird that has
added fame to the black colour!
Fire would be alluring to look at , it's sure!
But, would anyone dare hold it in his palm?
Who would dare taste the poisonous *Eṭṭi* fruits
simply because they possess an enchanting shade?
Only **Periyar,** the founder of **Black Shirt Movement**
outlined the thoughts of attaining lustre

3. The beauty of peacocks would lure the eyes alone!
But, enchanted by your sweet voice
Barathidasan, the king of bards, edited
a journal and named it as **Cuckoo!**
Some in the world are self-centred like rabbits!
Some persons alone are useful to others
Like the ever-yielding fertile lands!
Hail, O cuckoo who plunges us in happiness!



15. எறும்பே நம் ஆசான்!

1. எறும்பினை அற்பம் என்றே
ஏசுவோன் எங்கே? அந்த
எறும்பதன் அறிவின் ஆழம்
எண்ணினால் ஒன்றா? முன்பே
குறிப்புடன் மழைய றிந்தே,
கூடிப்போய் உணவைச் சேர்க்கும்!
அறிவியல், விஞ்ஞா னத்தை
அவைகற்ற பள்ளி எங்கே?

2. வரிசையாய் எறும்புக் கூட்டம்
வரும்அணி வகுப்பைக் காணீர்!
ஒருவரை யொருவர் தள்ளி,
ஓடியே முந்திப் பாய்ந்து,
நெரிசலைக் களரி தன்னை
நித்தம்நாம் படைப்ப தேன்? ஏன்?
உருவத்தால் சிறிய அந்த
உயிர்சொல்லும் பண்பைக் கற்போம்!

3. உருவத்தால் கடுகும் ஈங்கே
ஒருபுள்ளி போலி ருக்கும்;
மலைபோன்ற குணத்தால் அஃதோ
மகத்தான புகழைச் சேர்க்கும்!
இருக்கின்ற எறும்பும் ஓய்ந்தே
இம்மியும் சாய்வ துண்டா?
பெருமைசேர் சுறுசு றுப்பைப்
பெறவேண்டும் கடனாய் நாமும்!


15. Ants Teach Us Many Things!

1. Who can dismiss the tiny ants
as mere triflings of the world?
Can we understand the depth of their wisdom?
From the surrounding developments of nature
They foresee the downpour of rain
and prudently store their food-stuffs!
From which school did they learn the science
of studying the weather and making the forecast?


2. Behold the disciplined march of the ants
like a parade of armed force!
But men, in their attempt to move ahead
rush fast pushing down some in the crowd
And make the venue a battle-field!
Why such a melee in our daily life?
Let us learn this culture from the ants
though they're so tiny in size!

3. The size of a mustard seed
is but a tiny dot!
But its highly useful qualities
make that stuff so famous!
Does any ant lazily lie down
as far as we have seen?
Their innate quality of briskness,
we must borrow from them!

4. எவரேனும் தவறாய்த் தம்மை
எட்டியே மிதித்து விட்டால்,
அவைஉடன் கடித்தே தத்தம்
ஆவேசம் காட்டும்! குட்டிச்
சுவர்போன்ற தமிழ னுக்குச்
சுரணையைத் தன்மா னத்தை
விவரமாய்ப் புகட்டும் ஆசான்
வேறுயார்? எறும்பே என்பேன்!



4. If anyone by chance happens
   to crush the ants, under his foot,
They would doubtlessly bite him
   and exhibit their anger!
For the Tamils who stand like mere chattels
   who else can effectively teach
The sense of shame and the self-respect!
   Ants alone can do the job – I do assert!



16. அழகுத்தீவு அந்தமான்!

1. நீலவண்ண ஆடையிலே எழிற்கு முந்தை
நெஞ்சுயர்த்திக் தவழ்வதுபோல் அன்னக் கப்பல்
கோலஅலைக் கரங்குலுக்கி வழிந டந்தாள்!
குரலஓயாக் கடல்மன்னன் செல்லமாக
காலையிளங் குமரியினைத் தட்டித் தந்தான்!
மகிழ்ந்திட்டோம் ஊஞ்சலிலே இருப்ப தைப்போல்!
வேலைப்போல் பாய்கின்ற பறக்கும் மீனும்
விளையாடும் கன்றனைய மீனும் கண்டோம்!

2. புள்ளியினைச் சுற்றிவரும் கோலத் தைப்போல்
புதுவெள்ளி அலைசூழ நெஞ்சை யெல்லாம்
அள்ளிவிடும் அந்தமான் தீவுல் நிற்கும்
அழகுதென்னை பாக்குமரம் கையை ஆட்டிக்
கொள்ளைஅன்பால் அழைத்ததெம்மை! மகிழ்ந்தோம்! வந்தே
கூடிநின்று வரவேற்றார் எங்கள் தோழர்!
'கள்ளமிலாக் கவிஞருக்கா? கொலைகா ரர்க்கா?
கவின்தீவு அந்தமான் சொந்தம்!'என்றேன்!

3. அப்பப்பா! திரும்புகின்ற திக்கி வெல்லாம்
ஆகாயம் அளக்கின்ற மரங்கள்! நல்ல
கொப்பரையால் இளநீரால் மகிழ வைக்கும்
கொடைவள்ளல் தென்னைமரம்! இலையைக் கண்டு
எப்பாயைப் பார்த்தாலும் சிறிதாய்த் தோன்றும்
எழில்வாழை மரத்தோட்டம்! அந்த வாழை
ஒப்பற்ற உயரத்தை அளப்ப தற்கே
உச்சிமுதல் தரைநீளும் தார்கள் கண்டோம்!

16. Andaman's Splendours


1. The swan-shaped ship sailed on the ocean
Greeted and tossed by the roaring waves!
It looked like a crawling kid wearing a blue attire!
Ocean, the ever-roaring king patted
On the back of the ship, a lovely maid!
We felt as if we were tossed in a swing!
A variety of fish dashing like a lance, we found
And another joyously playing like the calves!

2. Like a *kōlam* drawn around some dots
The groups of **Andaman** islands are
Surrounded by the charming and silvery waves!
The coconut and betel-nut trees.
The charm of **Andaman** wlecomed us waving their arms!
Elated we were and our friends also received us!
I asked them, "To whom does this island belong?
Is it for poets or for the prisoners?"

3. What a wonder! Wherever I turned I noticed
Sky-scarping and hefty trees galore
The coconut trees exhibited their boundless munificence
By offering us sweet coconut and tender ones!
Wherever we turned, we noticed banana than trees,
The leaves of which are broader than mats!
As if measuring the length of these trees,
Very long a the bunches of banana fruits!

4. சலசலக்கும் சிற்றோடை காட்டு மங்கைச்
சதங்கைஒலி யாய்மிளிரும்! அங்கு மிங்கும்
கலகலக்கும் பறவைகளின் இனிய ஓசை
பக்கவாத் தியங்களென ஒலிக்கும்! அங்கே
சிலுசிலுக்கும் சில்வண்டின் அணிகள் ஓசை
செம்மாந்த இவ்விசைக்கே ஒத்தாய் மாறும்!
பலப்பலவாய்ப் பாய்கின்ற மான்கள் ஓட்டம்
பாடுகின்ற கவிஞர்விழி விருந்தாய் ஆகும்!

5. தலைவெட்டி உடல்வேறாய்ப் பிரித்த தாலே
தண்டனையைப் பெற்றவர்கள் வாழ்வைப் போக்க
பலப்பலவாய் அறைஅமைந்த சிறையைக் கண்டேன்!
தளைவெட்டி விடுதலையைப் பிரிப்போம் என்று
தலைவர்களும் இங்குறைந்தார் என்னும் போழ்து
தண்மையினால் உடல்சிலிர்க்க நின்றேன்! அன்னார்
தலையெடுத்த தூக்குமரம் கண்ட போது
தலைதாழ்த்தி அம்மண்ணை முத்த மிட்டேன்!



4. Like the tinsel sound caused during the dance
    Of the tribal woman, the sound of the rippling brooks
Filled the air! The chirping noise of the birds
    Played the role of musical accompaniments!
The shrill voice of a group of cricket insects
    Seemed to play a supporting role in concert!
The group of deer that roamed about the island
    Provided a splendid feast to the eyes of bards!

5. I visited there a prison with numerous cells
    Which was intended to house
The murder convicts! Also was informed
    That some stalwarts of the Freedom Movement
Were imprisoned there in those cells!
    At this I was chilled and rudely shocked!
On seeing the gallows which hanged their heads,
    I bowed down and kissed that soil!



Literature

17. இலக்கிய இலக்கு

1. பேனாவே கூர்வாள்; நாட்டின்
பீடைகள் சாய்க்கும் போர்வாள்!
பேனாவே உளிதான்; நாளை
பீடுகள் வடிக்கும் ஆக்கம்!
பேனாவே சாட்டை; தூங்கும்
பேடியை எழுப்பும் தாக்கம்!
பேனாவே கொள்ளி; மண்டும்
பேதமை தீய்க்கும் தீ,தீ!

2. **வாழ்வியல்** இலக்கை யெல்லாம்
வள்ளுவர் குறளில் சொன்னார்!
தாழாத **பெண்வீ** ரத்தின்
தனிமாண்பை இளங்கோ சொன்னார்!
ஆழமாய் அறத்தின் சீரை
அழகாகச் **சாத்தன்** சொன்னார்!
வீழ்ந்தநம் தமிழன் 'மீண்டும்
விழிக்க' **பாவேந்தர்** சொன்னார்!

3. கால்நடைப் பயணத் திற்கும்
கட்டாயம் குறிக்கோள் தேவை!
நூல்ஒன்று குறிக்கோள் இன்றேல்
நுரையைப்போல் அழிந்தி டாதா?
'நாலடி' 'நீதி நூல்கள்'
நாவெலாம் தவழ்வ தேன்?ஏன்?
ஆல்போலே கிளைத்தி ருக்கும்
அற்புதக் கருத்தால் அன்றோ?

17. The Goal Of Literature

1. Pen is a sharp sword! A mighty weapon
   to rout all the evil forces of the world!
   Pen is a chisel! An effective tool
   to shape the future of the people!
   Pen is a whip that wakes up
   even the spineless persons!
   Pen is a burning flame that is capable
   of dispelling the ignorance of all!

2. The goals and guidelines of human life.
   Valluvar has outlined in his verses!
   The undaunted will of the womenfolk
   Bard **Ilango** has clearly portrayed!
   The greatness of *Aram* in all its depth
   Poet **Saththan** has ably described!
   For calling the fallen Tamils surge again,
   Bard **Bharathidasan** has used his mighty pen!

3. Even for a journey by foot,
   The purpose must be clear-cut!
   If any literature lacks such a goal,
   Won't it soon perish like a bubble?
   Why do **'Naladiyar'** and such wholesome literature
   well in the tongues of one and all?
   Like the props of a huge banyan tree,
   the solemn ideals act as the sustaining force!

4. 'எவனோஓர் பிரம்மன் என்போன்
எழுதினான் தலையில்' என்றே,
எவனோஓர் புளுகைக் கூறி
இதுதலை விதியே என்றான்!
அவனவன் செயலால் ஆக்கம்
அன்றாடம் வருமே யன்றித்
தவப்பயன் என்ப தெல்லாம்
சதிகாரர் சூழ்ச்சி தானே!

5. எழுக நீ தோழா! அன்னோர்
எழுத்தையே எழுத்தால் மாய்ப்போம்!
இழிவான பாதந் தன்னில்
இங்கேநாம் பிறந்தோம் என்னும்
கழிசடை நால்வே தத்தைக்
கட்டாரி எழுத்தால் சாய்ப்போம்!
பழிச்சாதி எனும்பாழ்ச் சொல்லே
பாதியில் வந்த தன்றோ?

6. இல்லாதார் பசியால் வாடி,
இரந்திங்கே கதறும் போதில்,
இல்லாத சொர்க்கத் தில்,ஓர்
இடத்தினைப் பதிவு செய்யச்
செல்வத்தை அள்ளிச் சென்றே
திருப்பதி உண்டி சேர்க்கும்
கல்லாத மடைய ருக்குக்
கவிதைதான் தாற்றுக் கோலே!

7. நல்லவர் சொல்லும் சொல்லை
நாடியே கேட்ப துண்டா?
பல்லிஓர் புழுவைப் பார்த்துப்
பசிதீர்க்கச் சத்தம் போட்டால்
இல்லத்தில் தெய்வம் வந்தே
இன்குரல் தந்த தென்னும்
பொல்லாத மௌட கத்தைப்
பொடியாக்கித் தகர்க்க வேண்டும்!

4. "Everything in human life would take place
as pre-destined by **Lord Brahma**"
Thus an anonymous person duped
and named it as **Fate**!
Evil or good, everything is the product
of his own deed or misdeed!
Attributing them to some penance or other
is nothing but a calculated conspiracy!

5. Surge up, O comrades! Let us rout
all their fads with our thoughts and words!
Born of the feet of **Lord Brahma**, we are assigned
the lowest rank in the caste ladder!
This assertion made by the outmoded **Vedas** four
let us shatter, using our pen as a dagger!
Is not the dastardly term **Caste**
a product of the middle ages?

6. While the have-nots suffer from hunger
and wail with begging bowls,
Some people are putting tons of money
in the hundis of **Tiruppati** temple,
For the purpose of securing a place
in the illusory world of heaven!
For such unlettered dunces,
verses alone are the goading rods!

7. Are we accustomed to give due attention
to the words uttered by upright persons?
For appeasing its hunger by luring a worm
if a lizard makes its usual sound
We consider it as a divine voice
that has descended to bless us!
This sort of senseless superstitions
should be shattered into pieces!

8. மையலை மயிலே என்றும்
மானென்றும் குயிலே என்றும்
ஒய்யார **அன்ன** மென்றும்
ஓயாமல் சொன்ன தெல்லாம்,
ஐய்யய்யோ போதும், போதும்!
ஆக்கங்கள் சேர்ப்ப தற்கு
நெய்கின்ற கவிதைக் குள்ளே
நெடும்புதுக் கருத்தே தேவை!

9. கோளத்தின் மேல்ஓர் சின்னக்
கோவணம் போன்ற **சப்பான்**
நாளெலாம் உழைத்த தாலே
நாடெலாம் திகைக்கும் வண்ணம்
ஆளாகித் தொழில் பெருக்கி,
அற்புதம் படைப்ப தெல்லாம்
நாள்தோறும் பேனா முள்ளால்
நம்மவர்க் குணர்த்த வேண்டும்!

10. அதோஅங்கே மொட்டாய்த் தோன்றி
அவிழ்ந்திடும் மலரும் கூட,
இதோஇங்கே இதழ்வி ரித்தே
எழில்மணம் பரப்பும்; பின்னர்
அதோஅங்கே காயாய் ஆகி
அருஞ்சுவைக் கனியாய் மாறும்!
எதோஒன்றை இலக்கே இன்றி
எழுதுதல் மடமை யன்றோ?

11. நடிகையின் விரலில் மின்னும்
நகப்பூச்சின் வண்ணம் தன்னை
அடிகளால் வியந்து பாடும்
அற்பங்கள் தேவை தானா?
'விடியாதா பொழுதும்?' என்றே
விரக்தியின் விளிம்பில் நிற்கும்
குடிமகன் நிமிரத் தீட்டும்
குறிக்கோளே கவிதை என்பேன்!



8. Enough of our eulogies on our damsels!
    We've been adoring them as peacocks and does,
As sweet-voiced cuckoos and the swans
    of alluring gait! Those similes and metaphors
Have reached a saturation point and lo!
    Let us devise the ways of making headway!
Infusing novel thoughts and ideas in our verses
    is the only way of attaining this end!

9. In the entire globe, the nation Japan
    is like a tiny piece of cloth!
Due to the tireless toil of its people,
    it is now a wonderland of the world,
Making marvellous achievements
    by its miraculous industrial growth!
Our men should be made to realise these things
    by the use of our mighty pen!

10. Have a look at that sprouting bud!
    It is bound to blossom soon
By opening its soft petals
    and spread its sweet fragrance!
Becoming then an unripe fruit first,
    it would ripe into a succulent fruit!
Is it not a foolish venture to write
    without any goal in our mind?

11. The dazzling colour of the nail polish
    glittering on the nails of cine artistes –
Should it be eulogized in our verses?
    Should we condescend to that loathsome level?
"Can't I see the dawn for ever?" – thus wails
    the layman who is in the verge of diffidence!
Unfolding the ways of enlivening his vigour
    should be the goal of a good literature!



18. ஈடில்லாக் குறள்

1. **குறள்நெறி** பரவு மானால்
குற்றங்கள் மண்ணில் ஏது?
குறள்மணம் நிறையு மானால்
குடும்பத்தில் சிக்கல் ஏது?
குறள்அறம் பெருகு மானால்
கோலாட்சி ஊழல் ஏது?
குறள்வழி தழைக்கு மானால்
குடிப்புகழ் தாழ்தல் ஏது?

2. எழுகதிர் விழித்தால், சூழும்
இருளாட்சி மாயும்! எங்கும்
உழுபடை நிறைந்தால்,வாட்டும்
உறுபசி ஓயும்! காக்கும்
மழைமுகில் எழுந்தால்,வாடும்
வயலெலாம் சிரிக்கும்! மண்மேல்
விழுமிய குறள்செ ழித்தால்
மேன்மைகள் குவியு மன்றோ?

3. எத்தனை ஆண்டு முன்னர்
இந்தநூல் முகிழ்த்த திங்கே?
எத்தனை ஆண்டா னாலும்
இந்நூலுக் கழிவும் உண்டா?
எத்தனை நாட்டார் வந்து
இந்நூலை மொழிபெ யர்த்தார்?
எத்தனை உரைநூல், சான்றோர்
இந்நூலுக் கெழுது கின்றார்?

18. The Matchless Kural

1. If the tenets of **Kural*** are strictly followed
would there be crimes on the earth?
If the domestic life is based on **Kural**
there can be no place for any complication!
If the virtue of **Kural** is widely prevalent
can there be any scandal in politics?
If the path of **Kural** does flourish everywhere,
would the citizens stoop down at any time?

2. As the sun emerges in the east
the surrounding darkness would come to an end
If an all-out cultivation is made
hunger would be easily chased away!
If the rain clouds emerge in the sky
the fields would smile and dance!
If Kural is spread all over
won't there be accomplishments galore?

3. How many years ago
did this work emerge here?
Even after the lapse of countless years,
would this work ever face an end?
How many outsiders have come
and translated this work so far?
How many scholars of erudition
have written commentaries till now?

* Tirukkural


4. தன்வாழ்க்கை, தன்குடும்பம்,
தன்மதம், தொழிலைப் பற்றித்
தன்நூலில் செந்நாப் போதார்
தவறியும் குறித்திட் டாரா?
எந்நாட்டுக் குடிக ளுக்கும்,
எக்கால மாந்த ருக்கும்,
எந்நாளும் பொருந்தும் வண்ணம்
இயற்றினார் பொதுநூல் அன்றோ?

5. சொல்லாட்சி அழகா? சொல்லும்
சுவைத்திட்பம் அழகா? ஒரி
வில்லம்பாய் நெஞ்சில் தைக்கும்
விரிபொருள் அழகா? நின்று
பல்வகை உவமை காட்டும்
பக்குவம் அழகா? கூற
எல்லையும் உண்டா? வேறோர்
இணைநூலும் குறளுக் குண்டா?



4. Has **Vaḷḷuvar** made any reference
 to his personal life and family,
To his religious faith or avocation
 in any place in his entire treatise?
Is not his unique monograph applicable
 to all persons of different nations,
To all races, creeds and times,
 the past, present and the future?

5. Is it the beauty of diction that is enchanting
 or his deft usage of words?
Is the subject that is dealt is so sharp
 like the arrows of the Ori king?
Do the similes and metaphors used
 add lustre to charm of the work?
Can anyone fully describe it?
 Is there in the world, any equal to it?



19. நூல்களே! நூல்களே!

1. நூல்களெனும் நண்பர்களே! உலகைக் காட்டும்
நுட்பமிகு சன்னல்களே! காலத் தேரின்
கால்வழிநற் சுவடுகளைப் படமாய் ஆக்கிக்
கண்முன்னால் திரையிட்டுக் காட்டு கின்றீர்!
நால்வகைப்பூ இதழ்களுக்குள் தேனீ மூழ்கி
நாவினிக்கும் **தேனடையை** உருவாய் ஆக்கும்!
வால்அறிவு பெறவேண்டின் நூல்க ளே! உம்
மடியினிலே நாங்களெலாம் மூழ்க வேண்டும்!

2. என்றைக்கோ செத்தவரை எங்கள் முன்னால்
எழுப்பிவந்து நிறுத்திவைத்தே பேச வைப்பீர்!
என்றைக்கோ நிலவினில்யாம் உலவப் போகும்
எழிற்கதையைச் சுவையுடனே இன்றே சொல்வீர்!
தென்றல்தொட இதழ்விரியும் மலர்க ளெல்லாம்
சிரிக்கின்ற காலமிங்கே ஒருநாள் தானே!
என்றென்றும் அறிவுமணம் வீச வைக்கும்
ஏடுகளே! உங்களுக்கும் மரணம் உண்டா?

3. சேரமன்னன் **குட்டுவனின்** கூர்வாள் ஓசை
செவிகளிலே விழுகிறதே உமைத்தி றந்தால்!
வீரமுள்ள **கண்ணகியின்** வாதம் என்னும்
வெடிமுழக்கம் கேட்கிறதே உமைப்பி ரித்தால்!
ஈரநெஞ்ச அறச்செல்வி மேக லைப்பெண்
இனியநகை ஒளிர்கிறதே உம்மைத் தொட்டால்!
பாரகத்துக் காட்சியெலாம் ஒளித்து வைத்த
படுமாயக் கண்ணாடி நீங்கள் அன்றோ?

19. O Books!

1. O books, my friends! You're the windows
   through which the whole world can be seen!
   By recording the footprints of Time,
   you bring them to us like a screenplay!
   Plunging into the numerous kinds of flowers
   bees store honey in their hives!
   If we aspire to become scholars, O books,
   we've to seek the warmth of your lap!


2. Even the persons dead and gone long back
   you are able to bring them and make them speak!
   You are able to make an interesting narration
   of our future journey to the moon!
   At the touch of the breeze flowers bloom!
   Their life span is only a day!
   O books! You make the fragrance of knowledge
   spread for ever! Are you not immortal?

3. When we open your leaves we hear the rattle
   of the swords of the **Chera** king **Senguttuvan!**
   When we glance through the pages, we hear
   the thunder-like argument of the valiant **Kannagi!**
   Manimegalai the embodiment of virtue and compassion
   smiles at every page of yours as we glance!
   Are you not the miraculous mirrors which've stored
   all the historic episodes of the world?

4. துன்பத்தில் ஆழ்ம்எம் இதய ஓடம்
தொலைதூரக் கரைசேர துடுப் பாய் நிற்பீர்!
மன்பதையின் தலைமுறைகள் அழிந்த போதும்
வருகின்ற தலைமுறைக்குத் தூது நீங்கள்!
மென்மையுள்ள மூளைகளைக் கூர்மை செய்யும்
மேதினியின் சாணைக்கல் நீங்கள் அன்றோ?
தின்பதெலாம் குடல்புகுந்தால் மறைந்தே போகும்;
தினம்படிக்கும் ஏட்டறிவும் மறைவ தேது?

5. நூலாடை மேனியதன் மானங் காக்கும்!
நுண்ணறிவின் காவலரோ நீங்கள்! ஏட்டுப்
பாலாடை மூலம்தான் வளரும் மூளை!
பார்எல்லாம் தெரியும்என்றே அகந்தை கொள்வோன்
நூலகமே! உமைத்திரும்பிப் பார்த்து விட்டால்
நொடிப்போதில் திமிர்வாதம் அடங்கிப் போவான்!
காலமெலாம் அழியாத கவிதைக் காட்டைக்
கண்முன்னே வளர்க்கின்ற கழனி நீங்கள்!

6. மதுக்குவளை நரம்பினில்தான் முறுக்கை ஏற்றும்!
மயக்குவிசை செவிகளுக்கே நல்கும்!
நதியோட்டம் விழிகளுக்கே மகிழ்ச்சி யூட்டும்!
நறுங்கனியோ நாவுக்கே சுவையைக் கூட்டும்!
மதியின்உலா காதலர்க்கே இன்பம் சேர்க்கும்!
மழலைமொழி இளமையில்தான் எழிலாய்க் காணும்!
எதிரில்லாப் பனுவல்களே! நீங்கள் நித்தம்
எடுத்துரைக்கும் இன்பத்திற் கீடும் உண்டா?



4. The heart is a boat tossed by pangs!
You act as a rudder and bring it to the shore!
You act as a messenger for the future
even after the passage of some generations!
Are you not the sharpening stones
of all human brains?
Eaten stuff disappears when it reaches the intestine!
What we gather from books would ne'er disappear!

5. Dress materials shield the honour of mankind!
Are you not the guardians of the sharpness of men?
Books alone can sharpen the human brain!
Persons who boast of knowing the entire world,
O library, would in a trice shed their pride
as soon as they have a glance at you!
Are you not the fertile soil that is conducive
to the emergence of some immortal verses?

6. Wine would energize our nerves alone!
Melodious music can comfort the ears alone!
The flow of river is a feast to the eyes!
Fruits are tasty to our tongues!
The moon gives happiness to lovers!
Kids make us happy at their tender age!
O peerless books! Is there any parallel
to the pleasure given by you all?



20. எது எழுத்து

1. எழுத்தென்றால் படித்தவுடன் ஆழ நெஞ்சில்
இதமாக அமர்ந்துவிட வேண்டும்! தூய
எழுத்தென்றால் படிப்போரின் வாழ்வில் நல்ல
ஏற்றங்கள் மாற்றங்கள் ஊட்ட வேண்டும்!
எழுத்தென்றால் கற்போரின் மனத்துள் தோய்ந்த
இருட்டையெலாம் நெடுந்தூரம் விரட்ட வேண்டும்!
எழுத்தென்றால் சமுதாயம் புரட்சி காண,
எழுச்சிமிகு புதுவழிகள் காட்ட வேண்டும்!

2. **வள்ளுவரின்** தெள்ளியநல் எழுத்தால் தானே
மனவயல்கள் செழித்ததிங்கே! அதுபோல் நெஞ்சை
அள்ளிவிட்ட **இளங்கோவின்** காவி யத்தால்
அறப்பாடம் நாம்படித்தோம்! அருட்பா தந்த
வள்ளல்ஒளி **இராமலிங்கர்** எழுத்தால் அன்றோ
வாய்மைதன் தூய்மையினை உணர்ந்தோம்? கொல்லும்
கள்ளிப்பால் எழுத்தினிலே கலக்க வேண்டாம்!
கள்ளமிலாப் பசுவின்பால் ஊட்ட வேண்டும்!

3. குறிக்கோளே இல்லாமல் பயணம் செய்வோன்
குருடன் என்போம்; அவன்ஊர்போய்ச் சேர்வ தில்லை
நெறிக்கொள்கை ஏதுமின்றி எழுத வந்தோர்
நெஞ்சத்தில் நின்றாரா? நிற்க மாட்டார்!
வெறிக்கொலையைப் பாலுணர்வைத் தூண்டித் தன்னை
விற்பவனின் பேனாஓர் கொள்ளிக் கட்டை!
அறிவார்ந்த சமுதாயம் சமைப்ப தற்கே
அசைந்தாடும் பேனாதான் பேனா என்பேன்!

20. Which is a Writing?

1. A piece of writing should deeply enter our hearts
and secure there a lasting place!
A piece of writing should cause elevation
in the life of its readers!
A piece of writing should dispel the darkness
engulfing the minds of its readers!
A piece of writing should make the society realize
the various paths of its resurgence!

2. Were not the enlightening words of Vlluvar
the cause of making our minds fertile?
Was not the famous epic of Ilango responsible
for making us realize the force of Ãr*am*?
Only the writings of *Saint* Ramalinganar made us realize
the value of truth and cleanliness of mind?
Let our writings be like the milk of a cow
and not like the essence of a poisonous shurb!

3. For any journey there should be a destination!
Without that we would wander like a blind person!
Those engaged in purposeless writing
won't withstand the ravages of time!
The pen that induces murderous assaults
and sensuous sentiments is a dangerous weapon!
Only the pen that is wielded with the ambition
of uplifting the society deserves that name!

4. வேலைநிதம் பாடுவதே வேலை என்று
வீணடித்தோர் வேலைஇனித் தொடர வேண்டாம்!
தோலழகை, மேலழகை, மாதர் கூட்டச்
சுவையழகைப் பாடியதும் போதும்,போதும்!
பால்நிலவைப் பரிதியினை மலையை ஆற்றைப்
பாடிவிட்டோம் பலவகையில்! இனிமேல் வேண்டாம்!
ஆலையின்வாய்க் கரும்பாக நைந்தே வாடும்
அன்றாடங் காய்ச்சிகட்காய்ப் பாட வேண்டும்!

5. சாதிகளை மதங்களினை உயர்த்திச் சொன்னால்
சண்டைகளே சச்சரவே பெருகும்! வெற்றுக்
காதலினைக் கலவியினை விரித்துச் சொன்னால்
கணக்கின்றி மக்கள்தொகை உயரும்! மாயப்
பூதமென்றும் பிசாசென்றும் புராணம் சொன்னால்
பொல்லாத பயஉணர்வே வளரும்! நாளும்
வேதனையில் சோதனையில் உழன்றே நைந்து
விம்மிடுவோர் சிரிப்பதற்கே எழுத வேண்டும்!



4. Let us not waste our time and energy
in singing psalms praising the God of our choice!
Enough of our portrayals of the charm of damsels
and the blissful pleasure of their company!
Enough of what we've sung on the sun and the moon,
on the mounts and rivers! No need for any more!
Let us sing championing the cause of the poor
who're crushed and exploited like sugar-canes!

5. If we eulogize the existing castes and creeds
conflicts would be on the increase!
If we praise love and family life
our population would be on the increase!
If we keep on writing on ghosts and monsters,
fear would engulf the minds of the masses!
Bringing smile on the face of the down-trodden
should be the writers' ambition!



21. இதழ்களே! இதழ்களே!

1. பத்திரிக்கை எனும்பெயரில் இல்லம் வந்து
பந்திவைக்கும் ஏடுகளே! நித்தம் நித்தம்
எத்திக்கும் நிகழ்கின்ற தகவல் எல்லாம்
எப்படிஎப் படித்திரட்டித் தருகின் றீர்கள்?
தித்திக்கும் தேனடைகள் சமைக்கும் தேனீ
தேகத்தின் நோய்மட்டும் ஓட்டும்! நீங்கள்
சித்தங்கள் தெளியவைப்பீர் பித்தம் தீர்ப்பீர்!
செம்மாந்த அறிவுலகத் தூதாய் ஆவீர்!

2. இருட்டினிலே நடப்பதெலாம் வெளிச்சம் போட்டே
எங்களுக்குக் காட்டுகின்றீர்; நன்றி. ஆனால்
பொருள்மோகம் கொண்டசில இதழ்கள் நாளும்
பொய்விற்றுப் பிழைப்பானேன்? வெட்கம் வேண்டாம்?
கருப்புநிற எழுத்துடைய நீங்கள், இங்கே
கயமையினால் மஞ்சள்இதழ் ஆக லாமா?
நெருப்புக்கும் துருப்பிடிக்க லாமா? உங்கள்
நேர்வழிக்கே இழிபழியும் நேர லாமா?

3. கவிதையினால் கட்டுரையால் கதை களாலே
கவர்ந்திழுப்பீர் எம்நெஞ்சை! மகிழ்ச்சி; ஆனால்
நவரசமும் தவழுகின்ற இதழ்மு கப்பில்
நடிகையரின் முகம்மட்டும் நகைப்ப தேன்?ஏன்?
தவறான பாதைக்கே இளைஞர் கூட்டம்
தனைச்செலுத்தும் பாலியலின் மர்மம் ஏன்?ஏன்?
உவர்நீரால் இனிக்கும்பால் திரிந்து போகும்;
உம்செயலால் வாலிபர்கள் பாழாய்ப் போவார்!

21. O Journals!

1. Oh, journals! You are coming home every day
And offering sumptuous feasts for us!
How do you collect the news of the events
Which take place in the entire world?
The honey stored by the bees in the **honey-cnub**
Are useful for chasing away our illess!
But you give us clarity drive away illusions!
You're indeed the real messengers of knowledge!


2. You perform the task bringing to light
So many facts that are hidden in darkness!
Yet, some journals flourish on the trade
Of falsehood everyday! Is it not shameful?
Black ink is used for printing your issues!
Should you anyway become yellow journals?
Can there be rust on the burning flame?
Should there be hurdles on the upright path?

3. With verse, eassys and short stories
You're attracting our attention I'm glad!
Should the faces of the cine actresses adorn
The wrapper of the journals! Why so?
Why do the journals appeal to the sexual instincts
Of the youth and take them on the ruinous path?
Sweet milk gets spoiled when alkaline water is added!
By your acts, won't the youth get spoiled?

4. ஏடுகளே! ஏடுகளே! உம்மை யெல்லாம்
இருகரங்கள் கூப்பியிங்கே இறைஞ்சு கின்றோம்!
நாடுயர, மொழிஉயர, சமுதா யத்தின்
நலம்உயரப் பாடுபட வேண்டும் நீங்கள்!
காடுயர,கழனியெலாம் உயர, வானக்
கார்மேக நீர்வேண்டும்! அதுபோல் எங்கள்
பிழைகளைந்து நீங்களெலாம் திகழ வேண்டும்!
பீடுயரப், பெருமையெலாம் உயர வேண்டின்



4. Journals! Oh, journals! This fervent appeal
   We make to you with folded hands!
You should strive hard for the development
   Of our land, the language and society
Rainfall is indispensable for the fertility
   Of our field and for their good yield!
Upright and honorable you should be
   If you aspire for our country's progress!



Social Problems

22. ஓ,கையூட்டே!

1. கையூட்டே! **இலஞ்ச**மெனும் கொடிய பேயே!
கடமையினை முடமாக்கும் நெடிய நோயே!
வையகத்தில் உன்கரங்கள் வலுத்த தாலே
வாழ்விழந்தே தாழ்ந்தவர்கள் கோடி! இல்லத்
தையலவள் கோபத்தைத் தணிப்ப தற்கும்
தாபத்தைப் பெறுவதற்கும் பூவாய் ஆவாய்!
பையஉள்ளே தூங்குகின்ற கோப்பை யெல்லாம்
பறக்கவைக்கும் மந்திரக்கோல் நீயாம்! பொய்யா?

2. பெட்டியிலே,பைகளிலே பயணம் செய்யும்
பேரரக்கன் உன்லீலை ஒன்றா? **சீமைப்**
புட்டிகளின் வடிவத்தில் வருகின் றாயாம்!
பொய்மாதர் உருவெடுத்துச் சிரிக்கின் றாயாம்!
அட்டிகையாய் அவதாரம் எடுக்கின் றாயாம்!
அரசியலில் **கட்சிநிதி** ஆகின் றாயாம்!
மட்டில்லா உன்கூத்தால் இந்த நாடு
மயானமென மாறிவிட்ட கொடுமை போதும்!

3. சம்பளத்தின் தனிப்பெருமை குலைக்க வந்த
சண்டாளச் **சகக்களத்தி** நீயா? உன்பேர்
கிம்பளமாம் நீநகைக்கும் பளப ளப்பில்
கிறுகிறுத்துப் போகின்றார் நல்லோர் கூட!
அம்பாலே பறவைகளை வீழ்த்து தல்போல்
அற்பர்உன்னை ஏவிவிட்டு வெற்றி கண்டார்!
வெம்புகின்ற நெஞ்சமுடன் கெஞ்சு கின்றோம்;
விளையாட்டை நிறுத்திக்கொள்! தாங்க மாட்டோம்!



22. Corruption!

1. O corruption, an evil spirit so deadly!
    O endless disease that paralyses duty!
Since your hands are strengthened in the world
    millions are now in doldrums!
In the form of a flower you would pacify
    the anger of ladies and obtain their sympathy!
You're dubbed as a magic wand that makes
    the sleeping files fly fast! Is it false?

2. You're a demon travelling in the pockets
    and brief-cases and countless are your misdeeds!
You're said to roam in the form of liquor bottles
    and laugh aloud in the shape of prostitutes!
You're said to take the incarnation of an ornament
    and in politics you become "Party funds"!
Owing to the endless acts of your devil dance
    the whole country has become a burial ground!

3. Are you a concubine who can undo
    the charm of one's monthly salary?
O corruption! In your scintillating smile
    e'en gentlemen are undone, sometimes!
As if birds are felled using bows and arrows
    using you, wicked men become successful!
We beg for your mercy with depressed heart;
    "Stop your misdeeds! We can't tolerate!"




23. வெள்ளைநிறக் கொள்ளி!

1. வகைவகையாய்ப் பலவடிவில் நெஞ்சை ஈர்க்கும்
வண்ணவண்ண நிறங்களிலே **இலைகள்** ஈங்கே
மிகைமிகையாய் நம்மண்ணில் விளையும்; எல்லாம்
விருந்தாகும்; மருந்தாகும்; உயிரைக் காக்கும்!
புகையிலையென் றோர்இலையை மேலை நாட்டான்
புதிதாகக் கொண்டுவந்தான், பாவி! அந்தப்
புகையிலையால் **புற்றுநோய், காசம்** போன்ற
பலநோய்கள் விளைகின்ற கொடுமை என்னே?

2. **கொள்ளி**என்றால் பிள்ளைவைப்பான்; அவனும் தேகக்
கூட்டில்உள்ள உயிர்போனால் மட்டும் வைப்பான்!
வெள்ளைநிறக் கொள்ளியினால் தனக்குத் தானே
வெடிவைப்போன் இருப்பானா? இருக்கின் றானே!
கள்ளிப்பால் சாவுதரும் எனத்தெ ரிந்தே
கவனமுடன் ஒதுக்குகிறான்! **சிகரெட்** டாலே
உள்இயங்கும் நுரையீரல்,இதய மெல்லாம்
உருமாறிக் கருகுவதை உணர்ந்திட் டானா?

3. **அயர்லாந்தில்** வாழ்பவரும் பனியே கொட்டும்
அலாஸ்காவில் இருப்போரும் நடுக்கம் போக்க
முயன்றாங்கே புகைபிடிப்பார்; தேவை, ஆனால்
முகம்வேகும் வெயிலிலே துடிப்போர் நாமும்
அயலவரை நகல்செய்தல் தேவை தானா?
அணுஅணுவாய் நமையேநாம் அழித்தல் நன்றா?
வயலென்றால் வாழை,தென்னை செழித்தி டட்டும்!
வாழ்வளிக்கும் **புகையிலைகள்** தழைக்க வேண்டாம்!



23. The White-Hued Monster

1. Attractive leaves of varying hues and sizes
we've seen here in large numbers
In our trees and plants! They are our dish!
Sometimes they become our drugs and save lives!
The westerner introduced tobacco leaves here-
A cursed soul! This new introduction
Has caused cancer,T.B. and such diseases!
It is a cruel inroad on human health!

2. Fire will be lit by off-spring of a person-
But only after the life is extinct!
Should man become a vitctim to this
White-hued monster?But he does!
Cautiously he keeps away from the poisonous shrubs.
Realizing the danger!Does he realize
That cigaretters cause much havoc to him
By scorching his heart and lungs?

3. Those who live **Ireland** and **Alaska**
A snow-covered land are accustomed to smoke
For shielding themselves from the chillness!
Absolute is The need for them to do so!
Should we of a tropical country imitate them
And spoil ourselves bit by bit?
Let us grow plantains coconuts in our fields!
Let us not plant the harmful tobacco plant!



24. புட்டிப் பூதம்

1. மதுவெனும் கொடிய பேயே!
மதியினைத் தீய்க்கும் தீயே!
நதிபோல நடப்போன் கூட,
நஞ்சே!நீ உள்ளே போனால்
குதிக்கின்றான் குதிரை யைப்போல்!
குரங்காக்கி ஆட்டு கின்றாய்!
மெதுவாகக் குடல்அ ரித்தே
விடைபெற வைக்கின் றாய்நீ!

2. கற்பினை எங்கள் மாதர்
கணத்திலே இழப்ப தற்கே
உற்றுணை புரிவாய்! தீய
உயிர்க்கொலை செய்வ தற்கும்
அற்பரைத் தூண்டி வைப்பாய்!
ஆசையாய்க் கட்டி வைத்த,
பொற்றாலி அறுத்து விற்கப்
போகின்றான் கணவன் உன்னால்!

3. புட்டியில் ஒளிந்தி ருக்கும்
பூதமே! இலஞ்ச மென்னும்
பெட்டிக்கும் தோழன் நீயாம்!
பீடையே! தேர்தல் நேரம்
முட்டாள்கள் பலபேர் உன்மேல்
மோகமாய் இருப்ப தால்தான்,
அட்டைபோல் சுருட்டும் தீயோர்
ஆங்காங்கே வெல்லு கின்றார்!

24. Liquor – A Deadly Monster

1. O liquor, an evil spirit most cruel!
   You're the fire that scorches our senses!
E'en a person of elegant gait like a brook,
   O poison, when you just enter his stomach
Jumps and jumps like a sturdy horse!
   You make him leap like a monkey!
By slowly eating his intestines
   you make him bid farewell soon!

2. For our ladies easily lose
   their chastity in a trice,
You do what all you can!
   You incite wicked persons
To commit the heinous sin of murder!
   Because of your evil influence
The husband snatches the *tāli* of his wife
   and hastens to dispose of it!

3. O cruel monster filled in the bottles!
   You are surely a companion
For the bundles of money given in corruption!
   O the cause of misery and tension!
Since on you, some fools have got
   an irresistible fancy and lure
Wicked persons who loot the society
   win the polls, here and there!

4. ஆற்றுநீர் பெருக்கெ டுத்தால்
    அமோகமாய் விளைச்சல் கூடும்.
ஊற்றுநீர் பெருகி வந்தால்,
    உயிர்காக்கும் தாகம் தீர்க்கும்.
சேற்றுநீர் கூட ஈங்கே
    தென்னையை வளர்க்கும்! பொல்லா
நாற்றத்தைத் தேக்கி வைத்த
    நஞ்சே!நீ அழிவ தெந்நாள்?



4. If the water flow swells in the river,
    a good harvest, we can expect!
If there is a flow of spring water,
    it would appease thirst and save lives!
Even the water soaked in mud
    would be useful for rearing coconut trees!
But, harmful odour, you've stored so much!
    O poison! When would there be an end to you?



25. எது பள்ளிப்பாடம்?

1. **விண்மீன்கள்** நெரிச லாக
விளங்கினும் வெளிச்சம் உண்டா?
தண்ணிலா ஒன்றா னாலும்
தரும்ஒளிக் கீடும் ஏது?
மண்ணிலே புகழ்கு விக்கும்
மகவொன்று பெறுவோம்; பிள்ளை
எண்ணிக்கை பெருகு மானால்
இருக்குமா இன்பம் வாழ்வில்?

2. வயல்மணி பெருகி டட்டும்;
வண்தொழில் குவிந்தி டட்டும்!
வயிறுகள், வாய்கள் மேலும்
வருவதால் வறுமை தானே!
முயல்குட்டி மிகுதி போடும்!
மொழிதற்குச் சிறப்பும் உண்டா?
உயர்யானைக் கன்றோ ஒன்றே!
உலகமே போற்றி டாதா?

3. குந்தவோர் குடிசை யின்றிக்
குமுறிடும் ஏழைக் கந்தன்
மந்தையைப் பெறுவா னானால்
மகிழ்ச்சியா மிஞ்சும்? பேற்றுப்
பந்தயம் வைத்தி ருந்தால்
பரிசைநாம் பெறுவோம்; ஆனால்
எந்திர வாழ்வும் வாழ்வா?
இருவர்க்கே ஒருவர் போதும்!

25. This Lesson – A Must!

1. Even though there are countless stars,
do they give us sufficient light?
Even if the cool moon moves alone,
can there be any match to its light?
Let us beget only one child
that earns us fame on the earth!
If we get more and more kids,
would there be happiness in life?

2. Let the yield of our fields grow!
Let the industries grow more and more!
If bellies and mouths increase more and more
poverty alone would be the net result!
Rabbits beget numerous offspring's?
Is anyone bothered about them?
The elephant gives birth to only one!
Is it not welcomed by all?

3. If a poor Kandan who wails
since he remains shelterless
Begets a number of children
would there be happiness in life?
If a bet is announced for begetting kids,
we would surely win the prize!
Do we need such a mechanical life?
One kid is enough for any couple!

4. வாழைஓர் குலைதான் ஈனும்;
வளவாழை பெருமை ஒன்றா?
தாழம்பூ ஒன்றா னாலும்
தரும்மணம் குறைவா? நாளும்
ஏழ்மையை வளர்க்கும் பிள்ளை
இரண்டுக்கு மேல்ஏன் தேவை?
தாழ்ப்பாளால் பிள்ளைப் பேற்றைத்
தடுப்பதா குற்றம் வாழ்வில்?

5. கட்டிலின் காதற் பாட்டு
காலமும் ஒலிக்க வேண்டின்
தொட்டில்தா லாட்டுப் பாட்டு
தொடர்ந்திங்கே எழுதல் நன்றா?
கட்டியே! கரும்பே! என்னும்
கணவனின் விழியின் முன்னால்
எட்டியாய் மனைவி மாறல்
ஏழ்பிள்ளை பெறுவ தால்தான்!

6. கூட்டியே பெறுவ தாலே
கூடிடும் துன்பம் ஒன்றா?
வீட்டிலே இன்பம் போகும்!
மேனியின் அழகு போகும்!
நாட்டிலே அமைதி போகும்!
நலமெலாம் அற்றுப் போகும்!
தீட்டிடும் திட்ட மெல்லாம்
தீனிக்கே எட்டி டாது!

7. ஈசல்கள் பெருகும்; ஆனால்
இருப்பதோ சிலநாள்! வீட்டின்
வாசலும் ஒன்றே; வாழ்வின்
வாரிசும் ஒன்றே என்றே
ஆசைக்கோர் மகவைப் பெற்றே
ஆனந்த வாழ்வும் வாழ்வோம்!
பூசல்கள் தவிர்க்க நித்தம்
புகும்பள்ளிப் பாடம் ஈதே!



4. The banana plant yields one cluster alone!
Is it not useful in so many ways?
Even though only one screw-pine flower blooms,
is not its fragrance so pleasing?
Why should we beget more than Two kids
and wail in ever-growing poverty?
Is it any way a heinous crime
to shut the doorway of birth?

5. If the duet is to be sung in domestic life
for a fairly long period,
The child birth should be minimised
and also the need for lullabies!
To the husband who showers
some sweet epithets on his wife,
She then becomes sour – even bitter –
after her seventh delivery!

6. If the number of issues get increased
we have to undergo untold miseries!
The happiness of domestic life would go!
The charm of physique would come to an end!
There would be no peace in the land!
Well being would be wholly uprooted!
All the plans that are drafted by us
won't be enough e'en for the food stuffs!


7. Like the insects, population is on the increase!
We should know our days are numbered!
The entrance of house is only one!
Let our heir also be only one!
Let us beget only one child
and lead a happy life!
This is the salient lesson we've to learn
so as to avoid endless chaos among us!



26. இதயமிலா அரக்கர்

1. மண்இன்றேல் பயிர்ஏது? பயிரே இன்றேல்
   வாடுகின்ற வயிறெல்லாம் நிறைவ தேது?
கண்எட்டாக் கடல்இன்றேல் மேகம் ஏது?
   கார்மேகம் இல்லையெனில் மழையோ ஏதாம்?
எண்எழுத்தே இல்லையெனில் நூல்கள் எங்கே?
   எழில்நூல்கள் இல்லையெனில் கல்வி ஏது?
பெண்ணுருவில் உளதெய்வம் அன்னை இன்றேல்
   பிறப்பேது? வளர்ப்பேது ?நாமும் ஏது?

2. அம்மாதான் உடலணுக்கள் கடனாய்த் தந்தே
   அழகுருவில் நமையாக்கி உலகுக் கீந்தாள்!
அம்மாதான் செங்குருதி பாலாய் மாற்றி
   அன்றாடம் நமக்கூட்டி வடிவம் செய்தாள்!
அம்மாவுக் கிணையாக உவமை கூற,
   அகிலத்தில் வேறுண்டா? அதனால், பெற்ற
அம்மாவை அப்பாவை முதியோர் இல்லம்
   அனுப்பிடுவோர் இதயமிலா அரக்கர் என்பேன்!



26. Heartless Demons

1. Without soil, how can plants grow? And without plants
   how would our stomachs be filled and hunger appeased?
   Without vast ocean, how can clouds emerge?
   And without them, how can there be rain at all?
   Letters and numerals are the basis for books!
   And without books, can there be education?
   Without the mother, an incarnate of God
   where is birth? Where is growth? Where are we?

2. A mother lent the atoms of her body and brought us
   to this world in this shapely manner!
   It was the mother who converted her blood
   into milk, fed and reared us with it!
   None in the world can be truly compared
   with a mother! Hence those who lodge
   Their father and mother in the "Home for the Aged"
   are but heartless demons, I dare say!



Personalities

27. ஓர் ஏக்கப் பெருமூச்சு

1. என்அறையில் படமாகக் காட்சி தந்த
ஈரோட்டுத் தந்தைமுகம் பார்த்தி ருந்தேன்;
சின்னமலர் அடியெடுத்தே உள்ளே வந்த
தென்றல்ஒத்த என்பெயர்த்தி, "தாத்தா!நீங்கள்
என்னஇந்தத் தாத்தாவின் உருவந் தன்னை
இப்படிஏன் கவலையுடன் பார்க் றீர்கள்?"
கன்னல்மொழி தொடுத்தென்னைக் கேட்டாள் நானும்
கனத்திருந்த உளப்பாரம் இறக்கி வைத்தேன்.

2. "சாய்கின்ற நாள்வரையில் ஓடி ஓடிச்
சரிந்துவிட்ட தமிழினத்தை நிமிர்த்து தற்கே,
ஓய்வின்றிப் பாடுபட்ட இந்தச் சிங்கம்
ஒரேதடவை மீண்டுமிங்கே வரக்கூ டாதா?
தேய்ந்தொருநாள் மறைகின்ற நிலவு மீண்டும்
திரும்பவந்தே ஒளிர்வதுபோல் பெரியார் வந்தால்,
பேய்ச்சாதி வெறிக்கூத்து மாயும்; காணும்
பிணக்காடு, நிணநாற்றம் ஓயும், கண்ணே!

3. ஆதியிலே சாதியெனும் பேதச் சொல்லே,
அருந்தமிழில் ஏதென்றார் அய்யா! ஈங்கே
பாதியிலே வேதியரால் ஓதப் பட்ட
பாழ்நோயே அதுவென்றார்! சதியே மாறி
சாதியென்று கால்முளைத்துப் புகுந்த தென்றார்!
சதுர்முகனின் பாதத்தில் பிறந்தோம் என்ற
தீதான மனுநீதி பொசுக்கு தற்குத்
தீப்பிழம்புச் சொல்லெடுத்துப் பெரும்போ ரிட்டார்!

27. Periyar : A Sigh Of Depression

1. When I was gazing at the portrait of **Periyar**
which was hanging on the wall of my room,
Just as a gentle breeze, my grand daughter
entered the room and curiously asked,
"Why do you look at this grand father's portrait
with your mind so agonized and upset?"
As she asked this with her voice so sweet,
as sugar-cane juice, I divulged my mind:-

2. "Till death he was tirelessly toiling
for the uplift of the fallen Tamils!
Won't this lion which relentlessly worked
come back to life once again?
Just as the waning moon one day shines again,
if **Periyar** were to appear again,
The evil spirit of Casteism would come to end!
The stench of the society would be gone up, O darling!

3. " 'Caste' is the term that divides our men!
To the ancient Tamils, it was unknown", **Periyar** said
"This was the disease of the middle ages –
a creation of the priestly class!
It was the result of a deep conspiracy", he said
The claim of having been born on Brahma's face –
The baneful theories propounded by **Manu**
Periyar fought against these with vigour and fire words!

4. கண்மணியே! **வெண்மணிகள் சாதித்** தீயால்
கண்முன்னால் எரிகிறதே! இன்னும் கூட
மண்குடிசை வதைகின்ற தாழ்த்தப் பட்டோர்
வயிறெரியத் **தனிக்குவளை** மூலம்,தேநீர்
உண்பதற்குத் தந்திங்கே உலுத்தர் கூட்டம்
ஓரவஞ்சம் செய்கிறதே! ஒடுக்கப் பட்டோர்
மண்ணுக்குள் தம்பிணத்தைப் புதைப்ப தற்கும்
மயானங்கள் தனித்தனியாய் ஒதுக்கல் ஏன்?ஏன்?

5. 'பொய்க்கூற்றே சாதிஎனல் ஆரி யச்சொல்!
புதுநஞ்சு; பொன்விலங்கு; பகையின் ஈட்டி'
தொய்வில்லாப் பெரியாரின் இக்க ருத்தைச்
சூடேற்றிப் பாவேந்தர் பாட்டில் சொன்னார்.
மெய்யாக நம்தமிழன் இவற்றை ஏற்று
மேம்பாடும் கண்டானா என்றால்,இல்லை.
வையகத்தில் ஓங்கியுள்ள மேலை நாட்டார்
மடச்சாதிச் சகதியிலே புரள்கின் றாரா?

6. மழைவந்தால் **காளான்கள்** தோன்றும்; இந்த
மண்ணகத்தில் தேர்தல்வரும் நேரம் எல்லாம்
பிழைப்பதற்குச் **சாதீயக் கட்சி** தோன்றும்!
பிச்சையெனப் பதவிகளைப் பெறுவ தற்குக்
கழைக்கூத்தே ஆடுகிறார் புல்லர்! அந்தக்
கழிசடைகள் ஒழிவதற்கு வழிகள் காண,
அழைக்கின்றேன் பெரியாரை! தவறா,கண்ணே?
அழுகிவரும் சமுதாயம் மீள வேண்டும்!

7. தொழுவத்துச் சாணத்தில் உழலும் மாட்டைத்
தொட்டிங்கே கழுவுகிறான்! அழுக்கில் தோய்ந்த
கழுதையினைக் கூட இங்கே முதுகில் தட்டிக்
கைதொட்டே ஓட்டுகிறான்! ஆனால் நாட்டில்
'இழிவுடையோர்,தீண்டவொணா ஈனர்' என்றே
ஏன்சிலரை இன்னுமிங்கே ஒதுக்க வேண்டும்?
ஒழியாத சாதிவெறி முழுதும் மாய,
உருப்படியாய்ப் புதுவிதிகள் இயற்ற வேண்டும்.

4. "Don't you see the woeful incident of **Veṇmaṇi**?
   Was it not caused by the fanaticism of caste?
The depressed classes agonizing in mud huts
   are offered tea in tumblers separately placed!
Is this not a heart-rending segregation
   of some sullen hearts? The depressed ones
Are discriminated even after their death!
   Why should they have separate grave yards!

5. "Caste is a fad – an invention of the Aryans!
   A golden fetter – a deadly poison!
A darting dagger of our foes" – **Periyar** said so –
   Bharathidasan gave these thoughts a poetic garb!
Did the Tamils pay heed to their solemn advice
   and make headway in their lives? No!
Does any advanced nation of the world
   reel under such senseless mire of caste?

6. "At the emergence of rain, mushrooms also would!
   And whenever elections are held,
Some caste-based parties would peep their heads!
   Some unscrupulous persons make somersaults
And beg for some position or other!
   For doing away with those unwanted elements
I long for the resurrection of **Periyar!**
   The rotten society should flourish! Am I wrong?

7. "Even the cattle rolling on the dung
   are washed by human hands!
Touching the back of e'en a dust-laden donkey,
   man tries to hasten its pace! Tragic it is
That some among us are segregated from others
   and treated as untouchable creatures!
The fanaticism of caste should come to an end!
   Effective laws alone could achieve that end!

8. மான்களெல்லாம் தமக்குள்ளே பேத மின்றி
மனமொத்து வாழ்வதனை வனத்தில் கண்டோம்!
மீன்களெல்லாம் கூடஇங்கே கூட்ட மாக
மேய்கின்ற காட்சியினைக் கடலில் கண்டோம்!
ஏன்இந்தப் பாழ்த்தமிழன் நாட்டில் மட்டும்,
இனப்பேதச் சாதிவெறிப் பித்தால்,நாளும்
ஊன்குருதி குடிக்கின்றான்? அவன்நோய் தீர்க்க
உயர்மருந்தைத் தரப்பெரியார் மீண்டும் வேண்டும்.

9. கோத்திரத்தைக் குலச்சாதி மரபைப் பார்த்தே,
குறுமதியால் சம்பந்தம் பேசு கின்ற
சாத்திரத்து மௌடீகம் தகர்க்க வேண்டும்!
சண்டாள நால்வருணச் சாதி நோயைப்
பாத்திகட்டி வளர்ப்போரை நொறுக்க வேண்டும்!
பருவம்வந்தால் கலப்புமணம் மட்டும் செய்யப்
பூத்ததொரு புதுச்சட்டம் ஆக்க வேண்டும்!
பொற்காலம் தமிழ்மண்ணில் புலர வேண்டும்.


10. இவையெல்லாம் நனவாக வேண்டு மென்னும்
ஏக்கத்தால் சொன்னேன்நான்!" என்றேன். செல்வி,
" அவதாரம்,மறுபிறவி முழுப்பொய் என்றே
அன்றொருநாள் சொன்னீரே,தாத்தா!"என்றாள்!
"நவமணியே! உன்அறிவை இந்த நாட்டில்
நடமாடும் மனிதரெலாம் பெற்றால் போதும்!
புவனத்தில் தமிழ்இனத்தார் உயர்வார்!" என்றேன்.
பூவிழியாள் என்கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.



8. “All the deer in the woods lead a happy life
    without any discrimination among themselves!
All the varieties of fish live in the sea
    in groups and groups, without difference!
Why such a discrimination in this nation alone?
    Out of the madness of castes and creeds
The Tamils spill and drink the hot blood of others!
    To end this malady, **Periyar**’s emergence is a must!

9. “Arranging weddings after ascertaining
    the sects and sub-sects of the brides and grooms –
This fad based on the ‘scriptures’ should be shattered!
    The dangerous disease of fourfold castes,
Some fondly nurture! Should be suitably dealt with!
    When time is ripe, we should enact a law
Making inter-caste marriages a compulsory one!
    A Golden Age should flourish in *Tamil* land!

10. “All these dreams should become true!
    Longing this I asked him to come again!”
When I said this, the girl reminded,
    “Incarnation and rebirth are but fads,
You told other day!” So I said,
    “Precious, girl! If Tamils get this common sense,
Surely would they advance in all spheres!”
    That tender girl fondly embraced me!



28. சரித்திர சகாப்தம் அண்ணா


அண்ணனே! அண்ணனே! ஆருயிர் அண்ணனே!
எண்ணம் மூச்செல்லாம் இழைந்த மன்னனே!
கண்ணியம் கடமை கட்டுப் பாட்டினை
உண்ணத் தந்தநல் உயரிய அன்னையே!
வெல்லும் எழுத்தால்,வெல்லப் பேச்சால்
புல்லையும் நிமிர்த்திய புரட்சிச் செம்மலே!
ஈரோ டென்னுமோர் எழில்வழி நோக்கிச்
சீரோ டெம்மைச் செலுத்திய தலைவனே!
மணிப்பிர வாள மாப்பிணி ஓட்டிட,
அணியினைத் திரட்டிய அற்புதத் தோன்றலே!
மிடுக்கு நடையால்,அடுக்குத் தொடரால்
எடுப்பைத் தமிழுக் கேற்றிய ஏந்தலே!
வாழையின் சிரிப்பில்தான் வயல்வளம் தெரியும்!
ஏழையின் சிரிப்பில்தான் இறைவனே உள்ளான்!
மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனச்
சொக்கிடும் வகையில் சொன்னவர் நீங்கள்!
மாற்றான் தோட்ட மல்லிகை எனினும்
ஏற்றிடும் மணத்தில் வேற்றுமை ஏதெனக்
கேட்டவர் நீங்கள்! கேட்டினைச் செய்வோர்
வேட்டுகள் வைப்பினும் வேதனை தாங்கி,
மறப்போம், அவரை மன்னிப் போம்என,
அறப்பால் ஊட்டிய அண்ணல்நீர் அன்றோ?
கந்தல் இந்தியாம் **கடிபோலி** என்னும்
மந்தியைக் கொணர்ந்து மகுடம் சூட்டிட,
வடக்கே ஆண்டோர் துடுக்காய்ச் செயல்பட

28. Anna – An Era

Anna! O Anna! Endearing **Anna!**
A king whose thoughts always concur with his deeds!
O Mother! You fed us with the dainty dish
Of Duty, Discipline and Decorum!
O Revolutionary! By your writings and orations
You could energize even the grass!
O the leader who took us to the path of **Irōṭu** *
And led us in the path of **Periyar!**
By your free usage of so many figures of speech
You could do away the adulterated Tamil from the field.
With your grand style and alliterating words
A new vigour you infused into Tamil!
"Fertility of the soil could be seen in the banana plant!
God dwells there in the smile of the have-nots!
Service to man is service to God!" – thus you said
And lured us with your bewitching words!
"Even the jasmine of a neighbour's garden
Surely would smell sweet!" you said!
"Even though our foes cause us harm,
With the ulterior purpose of annihilating us,
Let us bravely endure and forgive them!" –
Did you not teach us the path of virtue thus?
When the good-for-nothing *Kaṭipōli* Hindi
Was brought and an attempt was made to enthrone it,
You resisted this dastardly act of the North!
Were you not the Chief Minister who condemned it
And flouted their high-handed act?


* A Place in which the great leader Periyar was born

அடுக்கா தென்றே ஆட்சியில் ஏறி
முடக்கித் துரத்திய முதல்வர்நீர் அன்றோ?
தூங்கிய நாங்கள் துணிவுடன் விழித்திட
தூங்கா தெழுதிய தோன்றல்நீர் தானே?
தாய்த்திரு நாட்டைத் தமிழ்நா டென்றே,
வாய்மணம் கமழப் போய்ப்பெயர் வைத்தீர்!
சுயமரி யாதைத் தூய்த்தமிழ்த் திருமணம்
இயல்பாய் எங்கும் நயமுடன் நடைபெறச்
சட்டம் கொணர்ந்தே சரித்திரம் படைத்தீர்!
மட்டிலாத் திட்டம் மலைபோல் கொணர்ந்து,
தாழ்ந்த தாயகம் தலைநிமிர்ந் தெழுந்திட,
வீழ்ந்த தமிழினம் விழிப்பைப் பெற்றிட,
ஓயா துழைத்தஎம் ஒப்பிலாச் சிமிழே!
வாயாரச் சாப்பிட வாங்கிய உணவைப்
பாய்ந்தொரு கருடன் பறித்ததே போலக்
கொடிய சாவுமைக் கொத்திச் சென்றதே!
சரித்திர ஏட்டின் சகாப்தமாய்த் திகழும்
நிரந்தரத் தலைவனே! நீங்கள் வளர்த்த
இயக்கம் மட்டுமே இம்மண்ணை ஆளும்!
வாழும் உம்பெயர் ஊழிகள் கடந்தே!
வாழும் நின்புகழ் வான்உள மட்டும்!



O Great! Did you not tirelessly appeal
To shed our fear and rise from the slumber?
Our motherland you renamed as **Tamil Nadu**
And made it known to the world!
For legalising, the Self-Respect marriages
You enacted a law with retrospective effect!
You could hence create a history thus!
O peerless soul that tirelessly toiled
For the uplift of the fallen Tamil land
And for creating an awakening among Tamils,
By drafting countless plans piled like the mounts!
When we are about to taste our delicious food,
As if snatched away by a vulture,
The cruel arms of death snatched you from us!
You are an Era – an evergreen leader –
A leader of all times! Only the organization
Founded by you would rule this land!
Your name would last, transcending *yugas** together!
Your fame would last so long as the sky exists!


* A long Period of time that it cannot be measured



29. அண்ணா வாழ்க!

1. **காந்திஅண்ணல்** அறிவுரையும், புத்தர் தந்த
கனிவினையும், **வள்ளுவரின்** நெறியும் ஒன்றாய்
ஏந்திவந்த பேருருவே! திராவி டத்தின்
இனஎழுச்சித் தாள்திறவு கோலே! காஞ்சி
மாந்தோப்பின் இசைக்குயிலே! அண்ணா! உங்கள்
மதுத்தமிழில் மயங்கியவர் கோடி, கோடி!
நீந்துகின்ற நிலாதேயும்; மறையும்; பின்னர்
நிறைநிலவாய் வருவதுபோல் வரக்கூ டாதா?


2. வயிறெல்லாம் 'பயிர்வாழ்க!' என்றே கூறும்!
வண்ணமயில் 'முகில்வாழ்க!' என்றே கூறும்!
கயற்கூட்டம் 'நீர்வாழ்க!' என்றே கூறும்!
கண்ணெல்லாம் 'இமைவாழ்க' என்றே கூறும்!
குயிலெல்லாம் 'மாவாழ்க!' என்றே கூறும்!
குளிர்அல்லி 'நிலாவாழ்க!' என்றே கூறும்!
உயிர்எல்லாம்,எங்கள்உடல் அணுக்கள் எல்லாம்
'உயர்அண்ணா வாழ்க!'என்றே உரத்துக் கூறும்!



29. Hail, Anna! Hail

1. The sermons of **Mahatma Gandhi**, the Noble approach
preached by Lord Buddha, the moral codes
Prescribed by **Valluvar** – all are these in your form!
O the leader of the Dravidian Resurgence!
O the cuckoo of mango grove! O dear **Anna!**
Millions were swayed by your chaste Tamil!
The moon wanes and disappears – but appears again!
Why not you resurrect and come in our midst again?

2. All the bellies will undoubtedly hail the plants!
The peacocks will surely hail the clouds!
Water will be hailed by all kinds of fish!
Eyes will doubtless eulogize their lids!
The cuckoo will hail the mango groves!
The cool moon will be hailed by the lily buds!
All our lives and every atom of our flesh
will echo aloud, "**Hail, Anna! Hail!**"




30. என்று காண்போம்?

அண்ணனே! அண்ணனே! அருமை அண்ணனே!
எண்ணச் சோலையின் இன்பத் தென்றலே!
கண்ணீர் ஆற்றின் கலமாய்ச் சென்றே
வண்ணக் கடலின் வாயிலில் படுத்து
நாள்கள் எத்தனை நடந்து விட்டன?
வாட்கை ஏந்திய மாவீ ரனைப்போல்
சுழன்று சுழன்று சுற்றியே வந்து
இழந்த பெருமையை ஈட்டிய இறையே!
காடாய்க் கிடந்த கனித்தமிழ் நாட்டை
நாடாய்த் திருத்திய நல்ல உழவரே!
கந்தல் ஆடையைக் கட்டி வந்ததோர்
இந்தி என்னும் இழிவுப் பேயினைச்
செந்தமிழ் நாட்டார் சிரத்திலே ஏற்றிட!
வந்த வடவரின் சிந்தனையை முறித்தீர்!
எத்தனை மேடைகள், எத்தனை ஏடுகள்,
முத்திரை தாங்கிஉம் முகவரி காட்டின!
மண்விழிப் படைந்திடக் கண்விழித் திங்கே
எண்ணி எண்ணியே எழுதிய அண்ணலே!
பாதியில் முளைத்த சாதிச் சனியனை
மோதியே அழித்த முழுமைப் பரிதியே!
கடமை, கண்ணியம் கட்டுப்பா டெனும்!
உடமையைச் சேர்த்த ஒப்பிலாத் தனயனே!
மடமைச் சேற்றில் முடங்கிய தமிழனை
அடலே றாக ஆக்கிய வேங்கையே!
அருமைத் தாயக அல்லிக் குளத்தில்
எருமைகள் நுழைவதேன்? என்றே கேட்டீர்!


31. Can We See Him Again?

Anna! O Anna! My beloved **Anna**
O gentle breeze in the garden of thoughts!
Sailing in the river of endless tears
You've taken rest on the shore of the sea!
How many days have gone since then?
Like a warrior wielding his deadly sword
You went round the entire Tamil land
And retrieved our past glory, O Lord!
The barren land, Tamil Nad, O farmer,
You converted into a fertile field!
When the ghost-like loathsome Hindi
Clad in some worn-out rags tried to enter
You shattered the cunning scheme of the North!
Hence you are extolled by all the Tamils!
How many journals, how many platforms –
Your unique stamp was there in everything!
O Anna! Burning midnight oil, you pondered
And wrote for the upsurge of our nation!
O hot sun, who scorched the heinous system
Of castes and shattered to smithereens!
O my peerless brother! You instilled
Duty, Discipline and Decorum in us!
O panther! Tamils were caught in the mire of ignorance!
You've shaped them into gallant warriors!
"Why should buffaloes step into the tank
Of lily plants?" – you curtly asked.

உரிமைகள் இல்லா உப்பிலாத் தமிழகம்
நெருப்பே இல்லா அடுப்பே! என்றீர்!
காதையை முடிக்குமுன் பாதியில் சென்றீர்;
போலிவே டங்களின் மூலவேர் சாய்த்திட
ஞாலத் தலைவரே! நாங்கள் அழைக்கிறோம்!
எரியும் விண்மீன் இரவல் ஒளியில்
புரியா மண்டைகள் புத்தகம் படித்திட
மானத் தமிழினம் மயங்கிட லாமா?
உண்மை அரசியல் உயிரைக் காத்திட
அண்ணனே! அண்ணனே! அருமை அண்ணனே!
ஒருமுறை இவர்க்கே உணர்த்தித்
திரும்பி நீங்கள் சென்றிடு வீர்களா?



"**Tamilagam** without rights is good-for-nothing –
An oven without fire!" – you boldly declared!
Before fulfilling the task, you've gone!
O leader of renown! We earnestly plead!
"Come again to uproot the conceits!"
In the light of the falling stars
Some blockheads read books!
Should honourable Tamils venture
To fish in the illusory water?
O Aṇṇā, my beloved **Aṇṇā,**
Why not you come at least once
For fostering a healthy politics?
Then you can have an eternal peace!



31. கல்லறையே! கல்லறையே!

1. கல்லறையே! கல்லறையே! காஞ்சிச் சோலைக்
கார்மயிலை மூடிவிட்ட கதவே ! நாளும்
வெல்லச்சொல் தவழ்ந்தோடும் இதழை,காணும்
விழியெல்லாம் ஈர்க்கின்ற காந்தக் கண்ணை,
நல்லபல கருத்தெழுதும் கரத்தை, ஓடி
நாடெல்லாம் சுழன்றுவந்த கால்கள் தம்மை,
கல்லறையே! இதற்குள்ஏன் மூடி விட்டாய்?
காலத்தால் உன்கதவு திறந்தி டாதா?

2. அன்றொருநாள் முதன்முதலில் தேர்த லில்நான்
அடியெடுத்து வைத்திட்டேன்; காஞ்சி அண்ணன்
கன்றுள்ள திசைநோக்கிப் பசுவே சென்று
கனிவுடனே பால்தருதல் போலே வந்து
நின்றிட்டார் மேடையிலே; நிலவு மேற்கை
நெருங்குகின்ற விடிகாலை ஆன போதும்
குன்றாத கருத்தெடுத்து விருந்தாய் வைத்தார்;
குவிந்ததங்கே கையொலிகள் இடியைப் போலே!

3. "தமிழகத்தின் வடகோடி வந்துள் ளேன்நான்;
தாயகத்தின் வாட்டம்இனி ஓட வேண்டும்!
இமைமூடா திருக்கின்றீர் இதுவ ரைக்கும்;
இமைதிறந்தே இருக்கட்டும் தேர்த லன்றும்!
அமைகின்ற கீழ்வானம் வெளுக்கக் கண்டேன்;
ஆட்சியிலும் கதிரவனைக் காண்போம் போலும்!
நமைக்காக்கத் தன்மானப் புதிய ஆட்சி
நாம்காண வழிசெய்வீர்!'' என்றார்; பின்னர்,

31. O Sepulchre!

1. O Sepulchre! You've closed your doors
   confining the **Kanchi**-born peacock inside!
The lips that wafted some sweetest words,
   the eyes that emitted a magnetic lustre,
The arm that went on writing subtle thoughts,
   the limbs that went around all the corners of our land –
O Sepulchre, you've closed all of them inside!
   Won't the mighty hands of time open your doors?

2. When on those days, I entered the election fray,
   our leader **Anna,** hailing from **Kanchi**
Came to the platform for making his propaganda
   like a milch cow that feeds its calf on its own accord!
Even though it was past mid-night and the moon
   was almost setting in the west,
He feasted us with his subtle and thoughtful words!
   The ovation of the audience was like a thunderbolt!

3. "I've come here to the northern most end of Tamil Nad!
   We should seek an end to all our haunting miseries!
You are remaining awake without closing your lids!
   Be awake even on the date of election!
Day light is slowly emerging in the eastern sky!
   Perhaps the **Rising Sun** will emerge victorious!
Please pave the way for forming the government
   of the **Self-Respect Movement**", he pleaded thus with emotion!

4. "நீதிமன்றக் கூடத்தில் உலவி வந்த
நெளிவறியா இளந்தம்பி வேழ வேந்தன்
நீதியினை உங்களிடம் வேண்டு கின்றான்;
நீங்கள் தாம் சட்டமன்றம் அனுப்ப வேண்டும்!
பாதிவழி கூட்டிவந்தேன்; என்க ரத்தைப்
பலப்படுத்த சட்டமன்றம் அனுப்பி வைப்பீர்!
மீதிவழி கொண்டுவந்து கோட்டை சேர்ப்பீர்!
மீண்டுமவன் கருப்பங்கி தொடவி டாதீர்!"

5. எனச்சொல்லி எனக்காக வாக்கைக் கேட்ட
எம்இறையை மூடிவிட்ட அறையே! கண்ணீர்ப்
புனலாற்றில் நீந்திவந்தே உன்னி டத்தில்
புதைந்துவிட்ட எம்மண்ணன் மீண்டும் ஓர்நாள்
மனஞ்சிலிர்க்கும் வகையினிலே எழுந்து வந்து,
"மாத்தம்பீ! நலந்தானா?" என்று கேட்கும்
இனிக்கின்ற திருநாளை எண்ணி,எண்ணி
ஏங்குகிறோம், ஏங்குகிறோம்; நடந்தி டாதா?



4. "He was roaming in the corridars of court Halls.
    That young and innocent ***tampi*** **Vezhaventan**
Is now pleading before you for justice!
    It is your bounden duty to send him to the Assembly!
I've taken him half way! Please send him there
    and strengthen my hands in that forum!
Make him complete the journey undertaken!
    Let him abandon his professional attire once for all!"

5. Thus, on my behalf, he appealed to the electorate!
    O Sepulchre that confines my Lord in your womb!
Only after crossing the flood of tears, he reached the tomb!
    Won't that buried and beloved brother one day
Come again to fulfill my deep-seated desire
    and ask me, ***"O tampi**!** How do you do?"
Ever we remain craving for such a golden day!
    Crave and crave! We endlessly do!

* Younger brother



32. வாழும் வரலாறே கலைஞர்!

1. கன்னலே! தமிழே! நெஞ்சக்
கவிதையே! கலைஞ ரேறே!
பொன்நிகர் தாய கத்தைப்
பொழுதெலாம் காத லிக்கும்
தன்னிக ரில்லாத் தூய
தலைவரே! எம்மைச் சூழ்ந்த
இன்னலைத் தகர்க்கும் எங்கள்
எந்தையே! சுடரே! வாழி!

2. எறும்பெலாம் தோற்கும்,உங்கள்
இடையறா உழைப்பின் முன்னால்!
கரும்பெலாம் தோற்கும்,உங்கள்
கனித்தமிழ் எழுத்தின் முன்னால்!
இரும்பெலாம் தோற்கும்,உங்கள்
ஈடிலா உறுதி முன்னால்!
வெறும்சொற்கள் இவையா?உங்கள்
விரோதியும் ஒப்புக் கொள்வான்!

3. சின்னதோர் வயதில்,அன்று
செந்தீபோல் இந்தி வந்தே
அன்னையாம் தமிழ்அ ழிக்க
ஆர்ப்பாட்டம் செய்த போது
முன்னின்றே எதிர்த்தீர்!அந்த
முனைப்பின்றும் மழுங்கிற் றாமோ?
பொன்னான தலைவா! உங்கள்
போர்க்குணம் யாருக் குண்டு?

32. Kalaignar - A History

1. O succulent juice! O sweet Tamil!
    O alluring verse! O Artist of great Skill!
Your gold-like precious homeland
    you love forever!
O our matchless leader!
    O our endearing father,
Who shatters all our miseries
    that are confronting us!

2. The briskness of e'en the ever-busy ants
    would get defeated at your tireless toil!
Even the sugar-canes would be defeated
    at your chaste writings of Tamil!
Even the sturdiness of steel won't be a match
    to the stoutness of your heart!
Are these mere encomiums! Nay!
    E'en your foes would acknowledge your prowess!

3. When you were in your teens
    Hindi intruded like a flaming fire
And attempted to annihilate Tamil!
    You spearheaded the movement
Of arresting the Hindi's devil dance!
    Does not that will still linger in your heart?
O peerless leader! Who else has got
    such a stout heart like you?

4. திரைக்கதை,வசனம் என்று
    தினம்பலர் எழுதி வந்தார்!
உரையாடல் கலைஞர் என்றே
    உம்பெயர் திரையில் கண்டால்,
கரைகாணாப் பூரிப் போடு
    கைதட்டி மகிழ்ந்தோம்! அந்த
நரைகாணாத் தமிழை இன்றும்
    நடமாட விடுகின் றீரே!

5. நாட்டையே பேரம் பேசி,
    நல்லதோர் விலைக்கு விற்கக்
காட்டேரிக் கூட்டம் கூடிக்
    கண்ணிகள் வைத்த போது,
கோட்டையுள் நுழைந்தீர்! மாய்ந்து
    குலைந்ததே அவர்கள் திட்டம்!
வேட்டைக்கு வேட்டு வைத்த
    வேந்தர்நீர் நீடு வாழ்க!

6. உங்களை விட்டால் நாட்டில்
    உரந்தோய்ந்த தலைவர் ஏது?
திங்களை விட்டால் வாவிச்
    செவ்வல்லி சிரிப்ப துண்டா?
உங்களை விட்டால்,ஈங்கே
    உலகத்துத் தமிழர்க் காகச்
சங்காரக் குரல்கொ டுக்கும்
    சரியான தலைவர் ஏது?

7. இதுவரை தேர்தல் தன்னில்
    என்றேனும் தோற்ற துண்டா?
முதல்வராய் உமைப்போல் ஐந்து
    முறையிங்கே எவர்தான் வென்றார்?
கதைகளால், நாட கத்தால்
    கட்டுரைத் திறத்தால்,பேச்சால்
உதிரத்தில் கொதிப்பை ஏற்ற
    உமைப்போலே யார்தான் உண்டு?

4. The screenplay and dialogues were written
by a number of persons so far!
But when your name was displayed on the screen
as the writer of dialogues,
We used to exhibit our boundless joy
by the thunder of clapping hands!
Your ever-green Tamil is still popular
in every nook and corner of our land!

5. For the purpose of bargaing our land
and obtaining a fabulous price,
A band of blood-sucking evil elements
conspired together and joined hands;
You entered the Fort at that stage –
all their schemes were shattered to pieces!
You thus put an end to their hunting plan –
Oh, the ruler of our hearts, live long!

6. Apart from you, is there any other leader
who is so stout-hearted like you?
Would the red lily flowers ever bloom
in the absence of the cool moon?
But for you, which leader is prepared
to boldly raise his trumpet voice
For the cause of the millions of Tamils
spread throughout the world?

7. Were you ever been defeated
at the polls, till today?
Who else could become the Chief Minister
five times like you, here?
With short stories and dramas,
with political writings and platform speeches
Who else could kindle the spirit
of the masses and make their blood boil?

8. வள்ளுவர் கோட்டம் ஒன்றே
வரலாற்றில் நிலைத்தி டாதா?
சள்ளைநோய்ச் சாதி மாய
சமத்துவ புரங்கள் கண்ட
உள்ளத்தை வரலாற் றாளர்
ஓயாமல் பேசி டாரா?
தெள்தமிழ் இணையம் தந்த
சிறப்பெலாம் எவர்ம றப்பார்?

9. அண்ணாவின் இதயம் ஏந்தி
அய்யாவின் வேட்கை ஏந்தி,
கண்ணாகத் தமிழைக் காக்கும்
கற்பினை உணர்வில் ஏந்தி,
திண்ணிய தமிழர் மேன்மைச்
செழிப்பொன்றே நெஞ்சில் ஏந்தி,
எண்ணத்தால் ஓங்கி நிற்கும்
ஈடில்லாத் தலைவர் நீங்கள்!

10. எனவேஎம் தலைவா! தாங்கள்
இன்னும்பல் லாண்டு வாழ
மனமார வாழ்த்து கின்றோம்!
மன்னவர் நீங்கள் வாழ்ந்து
வினைபல முடிக்க வேண்டும்!
வித்தகம் நிகழ்த்த வேண்டும்!
திணைப்புனம் இருந்தால் தானே
சிரித்திடும் கிள்ளைக் கூட்டம்?

11. தமிழர்கள் மீன்கள் என்றால்
தண்கடல் நீங்கள் தானே?
தமிழர்கள் பயிர்கள் என்றால்
தவழ்ந்திடும் முகிலே நீங்கள்!
தமிழரின் உயர்வுக் காகச்
சந்தன மரமாய்த் தேய்ந்தே
இமைமூடா துழைக்கும் எங்கள்
இறையே!நீர் நீடு வாழ்க!




8. Would not ***Valluvar Kottam***, your brain child
withstand all the ravages of time?
For weeding out the deadly disease of caste
Samathuvapuram * you established everywhere!
Won't this revolutionary thought and spirit
be proudly recorded by our historians?
Establishing a separate internet for Tamil, -
Would anyone forget this act of yours?

9. Endowed with the heart of **Anna,**
with the relentless will of **Periyar,**
With a deep-rooted love towards Tamil
and the spirit of safeguarding it,
You deem it your bounden duty
to work for the uplift of Tamils!
Your thoughts soar high like tall cliffs!
Indeed, a matchless leader you are!

10. O leader of renown! We wish you
"Live long for many more years to come!"
This wish is from the bottom of our hearts!
You should be at the helm of affairs
And make a number of accomplishments!
Some marvels you've yet to make in life!
If only there is a millet field,
parrots can flutter around for prey!

11. If Tamils are considered as fish,
are you not the ocean for them?
If the Tamils are considered as plants,
are you not the cloud that makes them joyous?
Like a sandalwood log you get emaciated
for the cause of uplifting Tamils!
You toil hard for us with unwinking eyes –
O our Lord! We wish you live long!

* Residential Homes for the people of All caste Founded by **Kalaignar**



33. இனமான ஏந்தல் – பேராசிரியர்

1. அன்றுமுதல் இன்றுவரை தடம்மா றாமல்
அறிவியக்கக் கொள்கையிலே தோய்ந்து, தூய
தென்றலைப்போல் நாடெல்லாம் நடந்து,சிந்தும்
தேன்தமிழால் நெஞ்சமெல்லாம் கவர்ந்து, நல்ல
குன்றிமணி இறுதிவரை இருவண் ணத்தைக்
குலையாமல் காப்பதுபோல், கழகம் காத்தே
என்றென்றும் ஆரூரார் வேலி யாக
எமக்கிருக்கும் ஒரேதலைவர் நீங்கள் அன்றோ?

2. பெயருக்கே பெருமையினைச் சேர்த்தோர் நீங்கள்!
'பீடுடைய வரலாற்றுத் தமிழன்,அன்றோ
உயரியநற் பெருவாழ்வைப் பெற்றான்; இன்றோ
உகிர்இழந்த புலியாக ஆன தேன்?ஏன்?
கயமையுடன் அயல்மரபு மயக்கம் வந்து
கலந்ததனால் நிகழ்ந்ததடா இழிவே'என்றீர்!
செயலிழந்த தமிழரெலாம் இனமா னத்தைத்
திரும்பஇங்கே மீட்பதற்கே குரல்கொ டுத்தீர்!

3. உரம்தோய்ந்த எஃகுள்ளம் படைத்த நீங்கள்,
ஒப்பரிய கம்பீரத் தமிழால்,எங்கள்
நரம்பெல்லாம் குருதியெலாம் கொதிப்பை ஏற்றி
நாளமெலாம் தனிவலிமை படைத்தே விட்டீர்!
அருவியிங்கே நடப்பதுபோல்,ஓடி ஓடி,
அன்றாடம் உழைக்கின்ற செம்மல் நீங்கள்!
நெருக்கடிகள் நெருக்கிடினும் பதவிக் காக
நிறம்மாற்றிக் கொள்ளாத முல்லை நீங்கள்!

33. On Prof. Anbazhagan

1. Deeply immersed in the Rational thoughts
    and swerving not from their path till today,
Having toured all o'er the country like the breeze,
    attracting everyone through your chaste Tamil,
You've retained the two-colour flag in your hands
    like the crab's eye that retains its colours forever!
Are you not the only leader who acts
    as a fencing force to **Kalaignar**

2. By your acts you've added lustre to your name!
    "Tamils of yore were famous throughout the world
And led a high standard of life! But, now
    they are like so many clawless tigers!
Our senseless fancy for an alien culture
    was the cause of such disgrace!" – You said.
You loudly proclaimed that the fallen grace
    of the Tamil race should be restored at any cost!

3. Endowed with an undaunted will and courage
    you could energise our blood and veins
By your majestic and matchless orations!
    A new vigour you could infuse in our nerves!
Like the perennial flow of a rippling brook,
    you are accustomed to tireless toil!
Like the jasmine that retains its colour and splendour
    power could ne'er tempt you or change your colour!

4. வெற்றிலையால்,சீவலினால் உங்கள் பற்கள்
வெண்மைநிறம் காவியென மாறும்! ஆனால்
தொற்றும்நோய் வஞ்சநெஞ்சம் துளியும் காணாத்
தும்பைமலர் வெள்ளைஉள்ளம் கொண்டோர் நீங்கள்!
கற்றவர்க்கோ **மாங்கனி**தான் நீங்கள்!ஆனால்
கசடர்க்கோ **வேப்பங்காய்** ஆனீர்! நெஞ்சில்
உற்றதொரு நற்கருத்தை ஒளித்தி டாமல்
உரைக்கின்ற 'நக்கீரர்' உருவம் நீங்கள்.

5. தனிஇதழாம் **புதுவாழ்வை**த் தொடங்கி அன்றே
தரத்தோடும் திறத்தோடும் உரத்தைச் சேர்த்தீர்!
இனிமைக்கும் எளிமைக்கும் **நன்னூல்** ஆனீர்!
எத்தனைபே ராசிரியர் இருந்த போதும்,
கனிவோடு தமிழரினம் அப்பட் டத்தைக்
கல்வெட்டாய்ப் பதித்ததுங்கள் பெயர்முன் னால்தான்!
பனிமலரே! தனிச்சுடரே! அழகே! அன்பே!
பரிதியைப்போல் முதிராமல் நீடு வாழ்க!



4. As you constantly chew betel and betel nuts
    your teeth have assumed a saffron hue!
Yet, your heart is so pure as *Tumpai* flower!
    No place is there for any sort of conceit!
To the scholars, you're a sweet mango fruit!
    To the vile-minded, you're a bitter margosa fruit!
You are indeed a **Nakkīrar*** of our days
    expressing anything without fear or favour!

5. ***Puthu Vazhvu*** was the journal edited by you
    and you maintained high standard in the field!
For simplicity and softness, you're a standing example!
    Though there are numerous professors here,
The Tamils have fondly fixed this prefix to you –
    and it remains there as a carving on a stone!
O fresh flower! O luminous torch! O my love!
    I wish you live for e'er like the shining sun!

* A Great Tamil poet of the S*agam* Age



34. நடமாடும் பல்கலைக்கழகம் - நாவலர் நெடுஞ்செழியன்

1. சொல்லெலாம் வெல்லம் தேக்கி,
தொண்டெலாம் தூய்மை தேக்கி,
கல்லெலாம் கரையும் வண்ணம்
கருத்தூறும் நெஞ்சம் தேக்கி,
பல்கலைக் கழக மொன்றே
பாரின்மேல் நடந்த தென்று
நல்லவர் போற்றும் வண்ணம்
நாவலர் திகழ்வார் அன்றோ?

2. அந்தநாள் மதுரை ஆண்ட
அருநெடுஞ் செழியன், குற்றம்
வந்ததே என்ற றிந்து
மாண்டதால் நீதி காத்தான்!
இந்தநாள் நெஞ்சை யள்ளும்
இந்நெடுஞ் செழியன், பெற்ற
செந்தமிழ் அன்னைக் காகச்
சிறைச்சாலை சென்று காத்தார்!

3. அண்ணாம லையில்ப யின்றே
அறிவாற்றல் பெற்று, காஞ்சி
அண்ணாகல் லூரி சென்றே
அரசியல் கற்ற தாலே,
அண்ணாந்து மாற்றார் போற்ற
அற்புதப் புகழ்ப டைத்தார்!
எண்ணத்தால் செயலால் என்றும்
எறும்புக்கும் தீமை செய்யார்!

34. Nedunchezhian – A Mobile University

1. His words were sweet as jaggery cake!
   So pure was the service he rendered!
   As if melting even hard stones
   he was able to deliver his orations!
   With so many springing thoughts in his heart,
   a mobile University indeed!
   With prefix **"Nāvalar"** he is widely known –
   and hailed by all selfless hearts!

2. The **Pandiyan** king **Nedunchezhian**
   who ruled the kingdom from **Madurai**
   Honestly admitted his fault, shed his life
   and thus safeguarded justice!
   This **Nedunchezhian** of our days
   who rules the hearts of Tamils
   Underwent imprisonment
   for the sake of Mother Tamil!

3. After his studies in **Annamalai** University
   he underwent some advanced training
   In the Institution of **Kanchi**-born **Anna!**
   Hence in the realm of Tamil Nad's politics
   He could earn a remarkable place
   inspiring awe in the minds of e'en his adversaries!
   By his thought or deeds he did no harm
   even to the tiny ants!

4. போர்ப்பாட்டு மேடை யெல்லாம்
புயலாக இருக்கும்! பேனா
நேர்ப்பாட்டாம் எழுத்தில் கூட
நெருப்பெலாம் கிளம்பும்! ஆனால்
ஆர்ப்பாட்டம் சொந்த வாழ்வில்
அணுவேனும் உண்டா? நாளும்
ஊர்ப்பாட்டும், உலகப் பாட்டும்
உயர்ந்திடத் தொண்டு செய்வார்!

5. நெடியதோர் உருவம்! ஆனால்
நெகிழ்ந்திடும் குழந்தை உள்ளம்!
நெடிதுயர் தோள்கள்! ஆனால்
நெறியோடு பழகும் பண்பு!
அடிஆறின் உயரம்! ஆனால்
அன்புக்குப் பணியும் தன்மை!
இடிபோன்ற பேச்சு! கேட்க
இம்மியும் தொய்வு உண்டா?

6. உருவத்தால் 'தாம ரைப்பூ'
உள்ளத்தால் தும்பைப் பூதான்
இருந்திடும் கடமைப் போக்கில்
எழில்சூர்ய காந்தி என்பேன்!
மருவியே தொண்டர் வண்டு
வருவதால் உரோசா என்பேன்!
இருக்கின்ற தமிழ நாட்டார்
இதயப்பூ நாவ லர்தான்!

7. எதிரிகள் கூட நின்றே
இவர்பேச்சைக் கேட்டு விட்டால்
இதுசரி என்பார்; பேச்சில்
என்னென்ன எடுத்துக் காட்டு!
பதிலுக்குப் பதிலெ டுத்துப்
பண்ணோசைக் குரலில் சொன்னால்
உதிராதா எதிரிக் கோட்டை?
ஊரெலாம் திரண்டி டாதா?

4. His platform speeches were like war drums,
and they blew fast like a wild tempest!
His pen also used to emit fire
as and when he wrote on politics!
Humble he was in personal life –
Not even an atom of haughtiness!
His service he rendered for the uplift
of our people and the entire land!


5. Tall was his figure! His heart
so innocent as that of a child!
Shoulders high as mounts! Yet
most polite in behaviour!
A man six feet tall – a person
bowing to love and affection!
Thunder-like were his orations!
A tempo he maintained throughout!

6. Possessed the complexion of a lotus flower!
Pure was his heart as a *tumpai** flower!
He is a lovely Sun Flower
having fixed his eye on duty for ever!
As the followers surround him like the bees
I would call him a rose flower!
Nāvalar is the ever-dwelling flower
in the hearts of all the Tamils!


7. Even if his opponents happen
to hear his platform speech
They would surely agree with his views!
Numerous examples to strengthen his arguments!
His device of countering his opponents
in roaring voice and forceful words!
He could shatter the fortress of his foes!
Didn't the mass of Tamils rally round him?

* White dead nettle

8. அறிவாலே ஆழி யானார்!
அரும்பேச்சால் அருவி யானார்!
நெறியாலே அண்ணா வின்நேர்
நிழலானார்! தொண்ட ருக்குக்
குறிகாட்டும் சுடராய் ஆனார்!
குழலானார் தமிழன் னைக்கே!
வறியவர், நலிந்தோர், வாழ
வழக்காடும் தலைவர் ஆனார்!



8. His wisdom was like a deep ocean!
His speeches were like water falls!
He was a shade of **Arignar Anna**
By his humble ways! He was
A beacon light to the camp followers!
He was a mouthpiece to Mother Tamil!
He became a 'leader'who championed
The cause of the poor and the down-trodden!



35. மறைமலை அடிகளார் மாண்பு

1. கொண்டதொரு கொள்ளையிலே **நெருப்**பாய் நின்றார்!
குளிர்தமிழைக் காப்பதிலே **வேலி** யானார்!
பண்டைநெறி கூறுவதில் **புதைய** லானார்!
பழமைக்கும் புதுமைக்கும் **பால** மானார்!
அண்டைமொழிக் கால்வழியில் பிறந்த தென்றே
அருந்தமிழைப் பழித்தவர்க்கோ **ஈட்டி** யானார்!
'தண்டூன்றி மறைந்தாலும் சாம்பல் கூட
தமிழ்மணந்து வேகட்டும்' என்றே சொன்னார்!

2. சோழமண்ணில் பூவிரித்த காவி ரிப்பெண்
சோற்றுமணம் கமழவைத்தாள் தமிழ்நா டெங்கும்!
சோழமண்ணில் நாவிரித்த அடிக ளாரோ
தூயதமிழ் மணங்கமழ அடிக்கல் நட்டார்!
வேழமொன்று வாழ்ந்தாலும் மறைந்திட் டாலும்
விலைமட்டும் தாழ்ந்திடுமோ? அடிக ளாரின்
ஆழநெஞ்சில் ஊறிவந்த கருத்து வெள்ளம்
ஆண்டுபல ஆனாலும் தேய்வ தேது?

3. கடிவாளம் காணாத குதிரை யைப்போல்
கடின**மணிப் பிரவாள** நடைகொ ணர்ந்தே
அடிவருடி இங்குசிலர் வளர்த்த நேரம்
'அறிவிலிகாள்! விழித்திறவீர், காணீர்!' என்று
துடிதுடித்து முழங்கியவர் அடிகள்! **வேதா**
சலமென்ற தம்பெயரைத் தமிழில் மாற்ற,
குடிகேடர் **மரஞ்செடிகள் கொடிகள்** என்றே
குக்கலைப்போல் கேலிசெய்து பழித்தா ராமே!

35. Maṟaimalai Adigal

1. He adhered to his principals with a 'burning spirit'
And was an effective 'fence' for the field of Tamil'!
He was a 'treasure' when unfolding our glorious past
And was 'bridge' for the past and the present!
He was a deadly 'dagger' to those who claimed
That Tamil was born out of an alien tongue.
Even at his advanced age,he relentlessly asserted
"Let my ashes smell with the sweetness of "Tamil"!

2. The Dame **Kāvēri** flowing in the realm of the **Chola** kings
Produces foodstuff for the entire Tamil Nad.
With has close association with the **Chola** kingdom
He laid the foundation for the pure Tamil Movement.
Elephant is said to be very precious
Whether it is alive or dead!
The flood of thoughts flowing from the human mind
Are relevant e'en after the passage of some centuries!


3. With unbridled usage of Sanskrit words in Tamil,
Some wielded their pen and styled it '*Maṇipravaḷam style'!*
When those stooges were flourishing in Tamil land
Adigal issued a clarion call and said,
"O brutes! Open your eyes! Realise your faults"
His original name was **Vedhachalam,**
Which he converted into pure Tamil as **Maraimalai Adigal**
It is said his adversaries ridiculed him and barked!

4. ஆப்பிரிக்கக் **கிம்பர்லி** வயிரந் தன்னை
அகழ்ந்தெடுத்துப் பட்டையிட்ட முதல்வ னைப்போல்,
பாப்பிரித்துப் படித்தாலும் பாவ மென்று
பஞ்சாங்கப் புலவர்சிலர் சொன்ன நேரம்,
பூப்பறித்து நிரல்நிரலாய்த் தொடுத்திட் டால்தான்
பூமாலை அழகாகத் தோன்றும் என்றே
யாப்புநலம்,கருத்துநயம் இவற்றை ஆய்ந்தே
ஈடற்ற கருவூலம் படைத்தார் அண்ணல்!

5. தமிழ்மட்டும் படித்தவர்கள்; தமிழைச் சொன்னார்!
சமக்கிருதக் காரர்களோ தம்மைச் சொன்னார்!
அமைதிநிறை மறைமலையோ இரண்டுங் கற்றே,
ஆம்உண்மை! தமிழ்க்கடலே உயர்ந்த தென்றார்!
உமிமூடி இருப்பதெலாம் நெல்தான் என்றே
உரைத்தவர்க்குப் பதர்பற்றி எடுத்துச் சொன்னார்!
இமைஇன்றேல் விழிகட்குப் காவல் எங்கே?
இவர்இன்றேல் தாய்த்தமிழ்க்குக் காவல் ஏது?

6. நீறெடுத்தே அணிந்துவிட்டால் யாம்மேல் என்று
நிமிர்ந்துநின்றே போலிமத வெறியர் தம்மைக்
கூறாக்கி முகத்திரையைக் கிழித்துச் சென்ற
குறையில்லா **முதற்பெரியார்** இவரே! செத்த
வேறுஒரு மொழிஎடுத்துக் கடவுள் தம்மை
வேண்டுதலும் வெட்கமென்றார் இவரே! 'நாட்டில்
மாறுதலைக் காணுங்கள்; திரும ணத்தை
மணக்கின்ற தமிழினிலே செய்வீர்' என்றார்.

7. பல்லாண்டாய் அடிமண்ணில் மறைந் திருக்கும்
பழுத்தநிலைக் கரிதானே மின்சா ரத்தை
எல்லோர்க்கும் தருகிறது! அதுபோல் உள்ள
எண்தொகையும் கீழ்க்கணக்கும் பத்துப் பாட்டும்
கல்லாத மடையருக்கே கரியாய்த் தோன்றும்!
கற்றறிந்தோர் மின்னொளியைப் பெறலாம்; என்றே
பல்லாவ ரத்தார்தான் அடித்துச் சொன்னார்;
பாய்விரித்துப் படுத்தவர்கள் விழித்தெ ழுந்தோம்!



4. When it was dubbed by some orthodox persons
That e'en the scaning of the metres of Tamil verses
Was a sin, this doyen emerged in the scene!
Like a pioneer in the art of cutting diamonds
Culled in the **Kimberley** Mines of the **African** Continent
And like a talented maker of garlands,
He had a deep study of Tamil prosody
And produced a number of priceless works.

5. Those who knew Tamil alone praised it sky high!
Those who knew Sanskrit alone praised that tongue!
Maraimalai Adigal was a renowned scholar of both
And he asserted that Tamil was superior.
Sifiting the corn from the chafe,he exposed
The hollowness of the arguments of his adversaries!
Just as the lid that safeguards the eye,
He was a sincere watch-dog of Tamil!

6. Some unpalatable claims of superiority
Made by the religious fanatics,
He stoutly refuted and exposed! Thus he was
Another Periar, a pioneer of the Self-Respect Movement!
"Praying God using an alian language
is shameful" he categorically asserted!
"Change the existing system of prayer and conduct
all marriage in Tamil!" he advised!

7. The coal that remains beneath the earth
For some centuries together is a source
Of electricity! Likewise, our ancient anthologies,
Eṭṭuttokai[1], **PāttupPaṭṭu**[2] and **PatīṉeṇkīḻkKaṇakku**[3]
Are but coals for the unlettered books!
But **Maṟaimalai Adigal** asserted
They are capable of shedding light and lustre!
This caused awakening in us!

1. Eight Anthologies 2. Ten Idylls 3. Tirukkuṟaḷ and other seventeen works



36. மொழிவிழி மு. வ.

(டாக்டர் மு. வரதராசனார் மறைந்த அன்று எழுதிய கண்ணீர்க் கவிதை)

1. மொழிவிழிக் கிமையே! எங்கள்
முவ.வே! எங்கே சென்றீர்?
எழுதுகோ லாலே நித்தம்
எமையாண்ட மன்னா! பேசும்
அழகான தமிழ்ப்பேச் சாலே
அன்றாடம் நெஞ்சை ஈர்த்த
கெழுதகைச் சுடரே! அய்யா!
கேளாத தொலைவேன் போனீர்?

2. சிலம்பினைக் குறளை நீங்கள்
தித்திக்கும் நடையில் கூறி,
நலமுடன் பாடம் சொன்ன
நாள்களை மறப்ப துண்டா?
குலத்தமிழ் அன்னை பெற்ற
கோலங்கள் பெருமை யெல்லாம்
பலப்பல வகையில் பேசி
பழவிருந் தளிப்பீர் அன்றோ?




36. Dr. Mu.Va. An eye of Tamil

(An elegy written on the day of demise of **Dr.Mu. Varadharājanār**, an eminent professor of Tamil and a renowned writer.)

1. O the lid shielding our eyes – Tamil!
    O Prof. **Mu. Va**! Where have you gone?
O the king who ruled over the realm of our hearts
    through the might of your powerful pen!
O the beacon light! Your sweet Tamil words
    had a magnetic power of luring our hearts!
O Sire! Why have you gone so far
    beyond the reach of our wailing words?

2. ***Silappathigaram*** and ***Tirukkuraḷ***, you taught
    in your own unique and fascinating style!
Could I ever forget those golden days
    when with rapt attention, we attended your classes?
The various splendours of our Mother Tamil
    and the alluring ornaments of its literature
You used to narrate in sweet words like succulent fruits!
    Were they not sumptuous feasts in those days?



37. நான்காம் தமிழ்ச்சங்கம் கண்ட நல்லவர்!

1. தமிழ்ப்புலவர் கூடியதால் கூடல் என்றே
தமிழ்பெயரைத் தென்மதுரை பெற்ற தன்று!
சிமிழ்போன்றே தமிழ்ச்சங்கம் நிறுவி ஆங்கே
தீந்தமிழைப் பாண்டிமன்னர் வளர்த்தார்! பொங்கிக்
குமுறிவந்த கடற்கோளின் பசியால் அந்தக்
கூடல்நகர் கபாடபுரம் அழிந்த தம்மா!
அமுதமொழி தமிழ்காக்கப் பின்னர் வந்தார்
அரும்பாண்டித் துரைத்தேவர்; மகிழ்ந்தார் சான்றோர்!

2. எங்கிருந்தோ இங்குவந்த ஆங்கி லேயர்
எழில்தமிழைப் புறந்தள்ளி, ஆங்கி லத்தை
அங்கிங்கே எனாதபடித் திணிக்கக் கண்டே,
ஆயிரத்துத் தொள்ளாயிரத் தொன்றாம் ஆண்டில்
இங்கேநான் காம்சங்கம் அமைத்தார் வள்ளல்;
ஈடில்லா மகிழ்ச்சியிலே திளைத்தார் நல்லோர்!
மங்கிவிட்ட தமிழுணர்வு மீண்டும் பொங்க
வழிகண்ட துரையவரை வாழ்த்தி னார்கள்!

37. The Ruler Who Constituted The 'Forth *Sangam*' For Tamil

1. Since numerous scholars of renown assembled there,
Sooth **Madurai** was called 'the venue of an assembly'!
A noteworthy ***Tamil Sangam*** was constituted there
By the pandia kings! Thus they fostered Tamil!
That **Kudal Nagar** and **Kapadapuram** were fully destroyed
By the turbulent waves of the ocean!
Pandithurai was that king's descendant
Who fostered Tamil! People were glad!

2. The Britishers who came from the west and ruled us
Removed our Tamil from the pedestal
And thrust their tongue English in its place!
On seeing this, this munificent ruler
Constituted the Fourth ***Sangam*** here, at **Madurai**
The joy of the people knew no bounds!
Since by this act, he could earn the love of Tamil,
They hailed him and praised him sky high!

3. தமிழுக்குக் கல்லூரி அமைப்பு தற்கும்,
    தமிழ்ச்சுவடி தனைத்தேடித் தொகுப்ப தற்கும்
தமிழாய்ந்தே புதுமலர்ச்சி காண்ப தற்கும்,
    தமிழ்த்தேர்வால் மாணவரை உயர்த்து தற்கும்,
தமிழினிலே புதுப்புதுநூல் ஆக்கு தற்கும்,
    தமிழ்தழைக்கத் தனிஇதழை நடத்து தற்கும்
தமிழரங்கம்,மாநாடு கூட்டு தற்கும்
    தமிழ்ச்சங்கம் நிறுவியவர் தேவர் தானே?


4. புரவலராய்ப் புலவர்களைப் புரந்த செம்மல்,
    புலமையுடன் பலநூல்கள் படைத்தார்! மேலும்
நிரல்நிரலாய்த் தமிழ்நூல்கள் அச்சில் ஏற்றி
    நெஞ்செல்லாம் தவழவிட்டார்! காட்டி னுள்ளே
மரங்கள்பல அடர்ந்திருந்தும் அகிலை மட்டும்
    மனம்விரும்பித் தேடுவதேன்? இந்த மண்ணில்
அரசர்பலர் கொலுவிருந்தார்; மறைந்தார்; ஆனால்
    அளப்பரிய தமிழ்ப்பணியால் நிலைத்தார் தேவர்!



3. For establishing a college for the study of Tamil-
For compiling the palm leaf manuscripts of Tamil
For encouraging the research on Tamil literature-
For promoting Tamil education among the students
For bringing out all the modern techniques in Tamil text-
For publishing a journal for the development of Tamil
And for conducing conferences for Tamil,
It was he who founded that ***Tamil Sangam!***

4. He was a patron to all the bards of his days
And also wrote a number of books in Tamil
He caused publication of countless Tamil books
And made them reach a wide range of readers!
Even through there are numerous trees in the forest
We prefer the sandalwood alone! Why is it?
Kings born and gone are numerous in the worlds.
Yet **Thevar's** service would remain ever in our hearts?

1. **Kudal** - was another name used for **Madurai.** This Tamil term indicates "the venue of an Assembly"



38. பாட்டுக்கோர் பாவேந்தர்!

1. தமிழமுதைச் சோறாக்கி, அறிவு நெய்யைத்
தன்மானக் குழம்போடு பெய்து தந்தே
இமைபோன்றே எமைக்காத்த குயிலே! என்றும்
எங்களுக்குக் **கவிதைத்தாய்** நீங்கள் அன்றோ?
'உமிமூடி இருப்பதெலாம் நெல்லா? இங்கே
உதவாத பதர்கூட இருக்கும்!' என்றே
எமக்கிங்கே பகுத்தறிவை, தமிழ்வீ ரத்தை
எப்படிஎப் படியெல்லாம் புகட்டி வைத்தீர்!

2. தாய்த்தமிழை இகழ்ந்தோனை 'நாய், நாய்' என்றீர்!
'தமிழனுக்கா நீபிறந்தாய்?' என்றே கேட்டீர்!
பேய்மொழியாம் இந்தியினை வடவர் கூடிப்
பேடிகள்போல் திணிப்பதற்கே முனைந்த நேரம்,
**'சாய்க்கடைக்குப் பந்தியிலே இடமா? தீய
சவஇந்தி தமிழ்நாவில் வருமா?'** என்றீர்!
பாய்போட்டுத் தூங்கியவர் எழுந்தோம்; செத்த
பாடைக்குப் பாடையினைக் கட்டி விட்டீர்!

3. நிலவில்லா வானத்திற் கெழிலும் உண்டா?
நீரில்லாக் குளத்தினைப்போய்ப் போற்று வோர்யார்?
புலவரில்லா அவையினுக்குப் பெருமை எங்கே?
பூக்களிலாக் காவுக்கே அழகும் உண்டா?
செலவழிக்கப் பணமில்லாப் பெட்டி ஏன்?ஏன்?
சேயில்லா இல்லத்தில் மகிழ்ச்சி ஏது?
உலவிவந்த பாட்டரசே! நீங்கள் இன்றி
ஒடில்லா வீடாக நாங்கள் ஆனோம்!



38. O The King Of Bards!

1. As you serve the nectar-like Tamil food on the banana leaf,
pour ghee and the dainty sauce of self-respect,
Are you not the 'mother' for all the bards like us?
O, cuckoo that shields us like the lids shielding the eyes!
"Are you sure that all the chaffe contains rice?
Some of them are empty, containing nothing inside!"
Thus and in umpteen such words, you infused in us
Rationalist thoughts and made us race-conscious!

2. All those denigrating Tamil were derided by you as 'curs'!
"Are you born of a Tamil?" you lashed at them!
When the northerners stealthily attempted to thrust
Their ghost-like Hindi on us, you asked,
"Should filthy stuff be given place inside our residence?
Would a Tamil be amenable for a dead language?"
This made us all rise up from our deep slumber!
Thus he rang a death-knell to the intended invasion!

3. Will the sky be splendrous without the moon?
Will anyone like a tank which is barren?
Will a congregation without scholars be respected at all?
Will there be lustre in the garden without flowers?
What is the use of a chest without money in it?
Will there be happiness in a childless home?
You were busy all along! In your absence
We are but rotten and roofless walls!



39. போயிற்று புரட்சிக் குயில்!

1. அங்கத்தின் அணுவி லெல்லாம்
அனலேற்றிக் கொதிப்பை மூட்டிப்
பொங்கிடும் கவிவாள் தந்து
புறப்படு, தமிழா! என்றே
சிங்கமே! கவிதை வேந்தே!
திரும்பாத திக்கை நோக்கி
எங்கேநீ பயணம் போனாய்?
இனிஇங்கே என்ன மிச்சம்?

2. **எரிமலை** யானாய் இங்கே
இருக்கின்ற மடமைப் பேய்க்கே!
எரிதழல் ஆனாய் இங்கே
இருக்கின்ற சாதி நோய்க்கே!
அரிமாவாய் ஆனாய் இங்கே
அன்னியர் மொழிவெ றிக்கே!
உரிமைக்கோர் கவிஞ ரேறே!
உனைஎன்று மீண்டும் காண்போம்?

3. நாலிரு சீர்வி ருத்த
நாதமும் எங்கே? எங்கே?
வேலைப்போல் எதிரி தன்னை
வீழ்த்திடும் சொற்கள் எங்கே?
சோலையின் குமரி யைப்போல்
சுவையூட்டும் வரிகள் எங்கே?
பாலையாய் ஆக்கி விட்டு
பாமன்னா! பிரிந்தேன் போனாய்?

39. The Cuckoo That Sung Revolutionary Songs

1. In all our limbs and every atom
    you infused a new vigour and spirit!
O lion! O the uncrowned King of Bards!
    With your verses so sharp, you armed us
And said, "Set out, O, Tamils!"
    Why have you now gone
To a place of no return?
    What do we have now in our midst?

2. You became a burning volcano
    to the evil spirit of ignorance!
You became a flaming fire
    to the deadly disease of caste!
You became a roaring lion
    against the imposition of alien tongue!
O bard! You fought for human rights!
    When can we see you again?

3. Where are your verses with assonance -
    most of them composed with eight syllables?
Where are your sharp and lance-like words
    which could make your foes fall down?
Where are your enthralling verses
    which allure like charming damsels?
O king of bards! Why did you forsake us
    and why have you deserted us?

4. பெண்ணின விழிநீர் தன்னைப்
பின்னிங்கே யார்து டைப்பார்?
கண்ணிலாத் தமிழன் னைக்குக்
காவலாய் யார்இ ருப்பார்?
வெண்ணிலா, தென்றல், பூங்கா
விரிகடல் குன்ற மெல்லாம்
கண்ணீரைப் பொழியும், அய்யா!
கவிமாலை யார்தொ டுப்பார்?

5. புதுப்புதுப் பாம லர்ந்த
பூந்தோட்டம் எதிரே கண்டோம்;
அதைஇங்கே செழிக்க வைத்த
அருந்**தோட்டக் கா**ரர் எங்கே?
மதுப்பாடல் எழுப்பி நின்ற
மாக்குயில் குரலைக் கேட்டோம்;
அதன்கூடு மட்டும் கண்டோம்!
அருங்**குயில்** எங்கே? எங்கே?

6. அறுந்ததே இனிய வீணை;
அழகிசை இனிமேல் ஏது?
பறந்ததே புதுவை மைனா;
பாடலில் புதுமை ஏது?
நிறைந்ததே விழிநீர் கண்ணில்;
நிம்மதி இனிமேல் ஏது?
குறைந்ததே தமிழ்த்தாய் இன்பம்;
கோமானே! எங்கே போனாய்?

7. எதிர்நீச்சல் போடும் பண்பு;
எஃகுபோல் திண்மை உள்ளம்;
சதிதாளம் போடாப் போக்கு;
தமிழுக்குக் குனியும் சென்னி;
விதியினை மிதிக்கும் வீரம்;
வீணரைச் சாடும் தீரம்;
எதிரிலாக் கவிதை ஆற்றல்
இவைசேர்ந்த உருவம் எங்கே?

4. Hereafter who is here
to wipe out the tears of women?
Who would play the role of a guardian
to the most precious Mother Tamil?
Milky moon – the breeze – the park –
the vast ocean and hills –
All are now shedding tears! Sir!
Who would weave the garland of verses?


5. We have seen the garden where
so many fresh flowers of verses bloomed!
Where has that gardener gone
forsaking the garden once for all?
The intoxicating voice of the cuckoo bird
we heard and enjoyed!
Now, the nest alone is here!
Where is the bird? Where?

6. The strings of the lute, not in tact!
Melodious verses, no more!
The Mynah of Pondy has flown!
Novelty in verses has gone!
Profuse tears soak our eyes!
Is there peace of mind any more?
Mother Tamil's happiness has dwindled!
O king! Where have you gone?

7. With stamina to swim against the current,
with steel-like sturdy heart,
With a mind to eschew hypocrisy,
with head to bow to Tamil alone,
With a will to trample fate under your feet,
with a courage to snub all useless persons,
With a matchless poetic skill, you were
a combination of all! Where have you gone?

8. கடவுளைச் சமுதா யத்தைக்
கைதட்டி அழைத்தாய்! அன்னோர்
நடைமுறை மாற்றிக் கொள்ளல்
நலமென்று பணித்தாய்! இன்றோ
மடமைசேர் இறப்பு வந்து
மன்னவா! உனைஅ ழைத்தால்
நடந்ததேன் அதன்பின் னாலே?
நாட்டைஏன் கதற வைத்தாய்?

9. ஓடப்பர் கட்சி சார்பில்
உயரப்பர் தம்மைச் சாட,
வேடப்பர் திரைகி ழித்து
விழியப்பர் எதிர்நி றுத்த
காடப்பர் ஆட்சி செய்தால்
கடிவாளம் போட நாட்டில்
தேடினும் கவிஞர் உண்டா?
செம்மலே! நீஏன் போனாய்?



8. Even God and the entire society
you beckoned by clapping your palms!
"Better to mend your ways!" –
thus you advised both of them!
Now you've become a prey to the cruel death!
O king! When the warrant was issued
Why did you meekly follow? Why didn't you resist?
Why did you make the country lament?

9. For championing the cause of the down-trodden,
for mounting an assault on the higher-ups,
For unmasking the minds of the hypocrites
for making them stand in the dock,
And for bridling those at the helm of affairs,
and to fight a cruel despotic rule,
Can we get any other bard of principles?
O Lord! Why did you go from us?



40. யார் பாரதி?

1. பாரதி கவிஞ னல்லன்;
பன்முறை அடித்துச் சொல்வேன்!
சீருற்ற மாதர் தம்மைச்
செகத்தவர் இழித்துப் பேசும்
வேரற்ற மடமை தன்னை
வெந்தீயில் கொளுத்தச் சொன்னான்;
பார்மீது மாத ருக்கே
பாரதி **வழக்கு ரைப்போன்!**

2. சாதிநோய் பிடித்த வர்க்கே
சரியான மருந்து தந்தான்!
பாதியில் ஆள வந்த
பரங்கியர் ஆங்கி லத்தை
ஓதியே சிலபேர் ஓடி
ஒண்டியே வாழ்ந்த நேரம்
தீதென்று இடித்துச் சொன்ன
சீர்மருத் துவன்தான் அன்னோன்!

3. கோடிப்பேய்ப் பிசாசை எண்ணி
குலையெலாம் நடுங்கு வோர்க்கு
'வேடிக்கை இவைகள் எல்லாம்
வெறும்மாயை!' என்று சொன்னான்!
நாடிடும் இன்பம், அச்சம்
நம்உள்ள விளைவே என்றான்!
வீடெலாம் அறிவைச் சேர்த்த
விஞ்ஞானி அவனே என்பேன்!


40. Who is Bharathi?

1. **Bharathi** is not a bard -
    umpteen times I would assert that!
He asked us to set on fire
    the meaningless foolishness
Of denigrating the womenfolk!
    He took up the brief of women
And vehemently argued their case!
    Hence he was an eminent **prosecutor!**

2. To those who suffered from the illness of caste,
    suitable medicines he used to administer!
When the Britishers established their rule,
    in the hoary land of ours,
Some hastened to learn their tongue, English
    and began to enjoy a number of favours!
Bharati condemned it in clear terms –
    Hence he was **physician** of renown!

3. Imagining the existence of millions of ghosts
    some are shivering under their shoes!
"It is not only a funny thing –
    but an illusion!" – he openly declared
"Be it the happiness or fear – all are
    the creations of our mind" – he said!
As he brought knowledge to all our homes,
    he was a **Scientist,** I would say!

4. தமிழென்ற வயலில் அன்னோன்
    தனிஎழுத் தாணி கொண்டே
இமைமூடா துழுதான்; அங்கே
    எழிற்சொல்லை விதையாய்த் தூவி
அமிழ்தான கவிதைச் சோலை
    ஆயிரம் படைத்தான் என்றால்
சிமிழ்போன்ற பார திக்கு
    திருப்பெயர் உழவன் தானே!



4. In the lovely field of Tamil
    he endlessly ploughed
By using his mighty pen as a ploughshare!
    His subtle words he sowed as seeds
And nectar-like sweet verses,
    he produced in thousands!
Was he not therefore
    a highly talented **farmer?**



41. கவிஞர்களின் துறைமுகம் சுரதா

1. வான்மழை பொழிந்தால் வாடும்
வயற்பயிர் மகிழும்! போறால்
ஊன்மழை பொழிந்தான் இட்லர்;
உலகமா மகிழ்ந்த தன்று?
தேன்மழை பொழிந்தார் எங்கள்
தித்திக்கும் சுரதா! வீழும்
கான்மழை அருவி யாகக்
கருத்தாறும் பெருகிற் றன்றோ?

2. சுரதாஓர் சோலை; ஆங்கே
தூய்கவி மலர்ம ணக்கும்!
சுரதாஓர் ஆழி; ஆங்கே
சுடர்முத்துக் கருத்து மின்னும்!
சுரதாஓர் பெருநூல் ஆங்கே
சுவைப்பொருள் குவிந்தி ருக்கும்!
சுரதாஓர் இமயம்; ஆங்கே
தொடங்கிடும் பாட்டு வெள்ளம்!

3. பூவெலாம் ரோசா வைப்போல்
புகழ்வாழ்வும் பெறுவ துண்டா?
காவிரி மண்ணில் பூத்த
கனித்தமிழ்ச் சுரதா அன்றே
காவியம் என்னும் ஏட்டால்
கவிதைக்கே பதியம் போட்டார்!
ஆவியாய்த் தமிழை ஏற்றே
அன்றாடம் குரல்கொ டுத்தார்!

41. Bard Suradha

1. As showers from the sky fall on us
   plants dance in glee!
   Hitler poured on us some showers of flesh!
   Was it relished by the world ever?
   Our treacle-like bard **Suradha**
   showers on us honey-like verses galore!
   Didn't his thoughts flow like water falls
   gushing out from the dense woods and hills?

2. Bard **Suradha** is a grove - where
   the flowers of verses used to glow!
   Bard **Suradha** is an ocean – where
   dazzling pearls are abundantly hidden!
   Bard **Suradha** is an epic – wherein
   subtle thoughts are expressed in sweet lyrics!
   Bard **Suradha** is the Himalayas – where
   The flood of verses commence the journey!

3. Do all flowers of the world
   attain the glory of the rose?
   Poet **Suradha** is a flower that bloomed
   on the bank of the river ***Kāvēri***;
   Through his journal, ***Kāviyam****
   he nurtured poems galore!
   Considering Tamil as his life and breath
   he raised his voice for that cause!

4. ஆத்திக மடமை நோயை
அனல்மூட்டிப் பொசுக்கச் சொன்ன
நாத்திகச் சுரதா, இன்றும்
நாக்கிலே பிறழ்ந்த துண்டா?
மூத்தவோர் அண்ண னாக
முளைவிடும் கவிஞர் தம்மை,
ஏத்தியே ஊக்கு விக்கும்
இவருக்கே இணையா வார்யார்?

5. துறைமுகம் என்னும் நூலைத்
தொடுத்தவர் இவரே! இன்றோ
துறைமுகம் ஆனார் பாட்டுத்
துறைகண்ட கவிஞர்க் கெல்லாம்!
மறைவின்றி ஒளித்தல் இன்றி,
மழலையாய்ப் பழகும் செம்மல்
நிறைநூறும் கடந்து வாழ
நெஞ்சார வாழ்த்து வோம்நாம்!



4. Blind beliefs reared up by so many creeds
Bard **Suradha** wanted to consign to fire!
Has this atheist ever gone astray?
Has he ever swerved from his thoughts?
Like an elder brother he groomed
all the budding poets of his days!
Who is there comparable with him
in the task of encouraging others?

5. Harbour was the title given by him
to one of his works of renown.
Today he himself has become a harbour
to all the poets struggling in the field!
Most out-spoken – sans any reservation –
undoubtedly a child-like person!
Let him cross his century in life!
We all hail! Offer our earnest wish!

* Epic



42. சிரிப்பிற்கோர் கலைவாணர்

1. எத்தனையோ விண்மீன்கள் வானில் உண்டே;
எல்லாமே விடிவெள்ளி யாவ துண்டா?
எத்தனையோ மலர்களிங்கே மலர்வ துண்டே!
எல்லாமே ரோசா போல் மணப்ப துண்டா?
எத்தனையோ நூல்களிங்கே பிறப்ப துண்டே!
எல்லாமே குறள்போலே ஒளிர்வ துண்டா?
எத்தனையோ நடிகரிங்கே பிறந்தார்; ஆனால்
எழில்சிரிப்புக் கலைவாணா! உமக்கீ டுண்டா?

2. 'ஆடுகளும் மாடுகளும் ஆடும், ஓடும்;
அன்றாடம் மனம்விட்டுச் சிரிப்ப துண்டா?
கூடுகட்டும் குயில்கூடப் பாடும்; ஆனால்
குலுங்கியதும் நகைப்பதுண்டா? வலிமை யாலே
காடாளும் சிங்கமதும் இடியைப் போலே
கர்ச்சிக்கும்; வாய்திறந்து சிரிப்ப துண்டா?
நாடுள்ள மனிதர்களே அறிவால் நாளும்
நகைக்கின்றோம்' எனக்கூறிச் சிரிக்கச் சொன்னீர்!

3. மேடைகளில் தமிழினத்தின் பெருமை தன்னை
மீட்பதற்கு முழங்கிவந்தார் காஞ்சி யண்ணன்!
கேடான மடச்சாதிக் கொடுமை மாயக்
கிளர்ச்சிசெய்தார் ஈரோட்டுப் பெரியார்! வீரப்
பாடல்களால் சமுதாயப் புரட்சி காணப்
பாவேந்தர் பாடுபட்டார்! நாளும் நீங்கள்
நாடகத்தில் திரைப்படத்தில் சீர்தி ருத்த
நகைச்சுவையால் பகுத்தறிவைப் புகட்டி வைத்தீர்!

42. A Master Comedian N.S.K

1. Countless are the stars shining o'er the sky!
But all of them can't become the Morning Star!
Countless flowers are blooming every day!
But can all of them yield the fragrance of a rose?
Countless are the books, that're published everyday!
But, do they gain the glamour of **Kural?**
Countless are the artistes born here! But
could any of them shine like you in comedy?

2. Sheep and oxen move round and even run!
But, do they possess the power of laughter?
Cuckoos do sing some melodious notes!
But, can they smile and laugh aloud?
Lions ruling the jungle with their might
can roar! But, can they laugh at all?
By your subtle comedies, you made our men
heartily laugh and deeply think!

3. In the platforms **Kanchi**-born **Aṇṇā** was roaring
for the upsurge of the fallen Tamils!
For smashing the hold of the deadly caste
Periyar was fighting tooth and nail!
Poet **Bharathidasan** caused a Social Revolution
through his verses galore! By your comedy
In the stage and screen, you were able
to make people follow Rationalist line!

4. வான்நிலவோ விடியும்வரை மகிழ்ச்சி யூட்டும்;
 வாசமலர் வாடும்வரை மணத்தை யூட்டும்;
தேன்குடமோ தீரும்வரை இனிப்பை யூட்டும்;
 தென்றலதும் தொடும்வரைதான் சிலிர்ப்பை யூட்டும்
ஆன்பாலோ குடிக்கும்வரை சுவையை யூட்டும்;
 அழகியுடல் இளமையில்தான் இன்பம் ஊட்டும்;
ஏன்இன்று நினைத்தாலும் எதிரில் நின்றே
 எப்படிஎப் படியெல்லாம் மகிழ்விக் கின்றீர்?

5. வாழ்ந்திட்ட எல்லோரும் இந்த மண்ணில்
 மனிதகுலம் செழிப்பதற்கே உழைத்திட் டாரா?
சூழ்ந்திருந்த நாடுகளைப் பொசுக்கிக் காட்டிச்
 சுயநலத்தால் **வெறிஇட்லர்** அழவே வைத்தான்!
வாழ்வளித்த காந்தியினைச் சுட்டுக் கொன்று
 வன்கோட்சே நம்மையெலாம் குமுற வைத்தான்!
வாழ்நாளில் முழுவதுமே சிரிக்க வைத்தீர்;
 மரணத்தில் மட்டும்தான் அழவே வைத்தீர்!

6. பாடல்களால் **பாகவதர்** புகழைப் பெற்றார்;
 பழநடிப்பால் **சிவாஜி**யவர் பெருமை பெற்றார்;
நாடகத்தால் **டி.கே.எஸ்.** போற்றப் பெற்றார்;
 நாட்டிசையால் **கிட்டப்பா** ஏற்றம் பெற்றார்;
ஆடலினால் **பத்மினி**யோ பெருமை பெற்றார்;
 ஐம்பதென்றும் அறுபதென்றும் எண்ணி, எண்ணி
நாடிங்கே முன்னேற்றம் பெறுவ தற்கே
 நானூறு கற்பனையால் உழைத்தீர் அன்றோ?

7. அந்தியினை நினைத்தாலே **செவ்வான்** தோன்றும்;
 அன்னத்தை நினைத்தாலே **தூய்மை** தோன்றும்;
வெந்தீயை நினைத்தாலே **வெப்பம்** தோன்றும்;
 விண்ணிலவை நினைத்தாலே **குளிர்ச்சி** தோன்றும்;
செந்தமிழை நினைத்தாலே **இனிமை** தோன்றும்;
 சேரர்களை நினைத்தாலே **வீரம்** தோன்றும்;
கிந்தன்எனும் ஒருபெயரை நினைக்கும் போதே
 கிருஷ்ணன்நீர் செய்திட்ட புரட்சி தோன்றும்;



4. The moon gives us happiness until the dawn of the night!
Flowers emit fragrance till they wither out!
The honey pot is sweet till the honey is over!
So long the breeze touches us, we feel the thrill!
The cow's milk would be sweet as we taste it!
Sex in a pleasure at one's younger days alone!
Wonder that you're still in our hearts
making us merry though subtle comedies!

5. Did all in the world strive hard
for the advancement of human race?
Subjugating all the surrounding nations
was **Hitler's** ambition and it caused distress?
By shooting the Father of our Nation dead?
Cruel Godse made us all weep and wail!
Throughout your life you made us laugh!
At your demise alone, you made us shed tears!

6. Through his songs, artiste **Bhagavathar** became famous!
By his talented acting **Sivaji** became famous!
T.K.S.* became famous through his stage plays!
Kiṭṭappa became famous through his national songs!
Through dance, artiste **Padmini** became a glamour star!
By using your fertile imagination,
You denigrated the then-existing evils
and portrayed a glorious future!

7. Red is the colour of the evening sky!
Swans as a whole stand for purity!
Even the thought of fire might make us hot!
The thought of the moon would make us merry!
So sweet is e'en the thought of Tamil!
The thought of Chera kings would make us valiant!
When we recall your recital of **Kindhan**
O, Krishanan! A Revolution in our vision!

* Avvai T.K Shunmugam



43. என்ன சொன்னார் விவேகானந்தர்

1. ‘மனிதகுலத் தொண்டேதான் பூசை; ஏழை
வாட்டத்தைப் போக்குவதே பக்தி’ என்ற
தனிக்கருத்தைச் சொன்னவர்தான் விவேகா னந்தர்!
தரைமீது வளர்ந்துள்ள மாம ரத்தின்
கனியெல்லாம் மரத்துக்கா? மக்க ளுக்கா?
கடும்பசியைத் தீர்ப்பதனால் வாழ்த்து கின்றோம்.
புனிதமுள்ள நம்வாழ்வு ஏட்டில் நிற்கப்
புகழ்ச்செயல்கள் பிறர்க்காகச் செயவேண் டாமா?

2. ‘மூடுபனிச் சூழலிலே உலக மெல்லாம்
மூழ்கிவிட்டால் செம்பரிதிக் கதிர்கள் ஓடி
ஆடாமல் கிடக்கின்ற செடிகொ டிக்கே
அகமகிழ்ச்சி ஊட்டுவதும் இலையா? இங்கே
கோடானு கோடிமக்கள் வறுமை,தீமை
குருடாக்கும் அறியாமை இவற்றில் மூழ்கி
வாடாமல் வாடுகின்ற இழிவைப் போக்க
வாலிபனே வா!’ என்றார் விவேகா னந்தர்!

3. ‘தும்பிக்கை யானைக்கே பலகை; உள்ள
துடுப்பொன்றே படகோட்டி கரையே றும்கை!
நம்பிக்கை ஒன்றேதான் வெற்றி யூரின்
நல்வாழ்க்கைப் பாதைக்குக் கைகாட் டும்கை!
கொம்புத்தேன் மலைக்கூட்டில் தூங்கு மானால்
குவலயமா நன்மைபெறும்? தம்பீ! வா,வா!
அம்புலிபோல் தொண்டாற்று; மக்கள் கூட்டம்
அல்லியைப்போல் வரவேற்கும்’என்றே சொன்னார்.

43. What Did Saint Vivekananta Say?

1. "Serving mankind is the only sacred task -
Chasing away the distress of the poor is *bakthi*!" –
So said Saint **Vivekananda** – a solitary voice!
"Are the fruits yielded by mango trees
Intended for men or for the trees themselves?
As they are useful to us" we praise them!
For ensuring us a secure place in the annals
should we not render service to others?

2. "When the whole world is submerged in the snow
rays of the hot sun pierce all through
Kindle the spirit of the umpteen trees
and creepers which remain motionless!
Likewise, O youth! Surge up to shatter
the poverty and distress of millions of men
Along with their blinding ignorance!" –
Thus Saint **Vivekananda** issued a call!

3. "The trunk is the prime weapon of an elephant!
Rudders alone can make the boats reach the shore!
Hope alone is the guiding force that gives us
success in life and makes us happy!
If a honey-comb hangs on a tall mountain,
any use to the world? Hence, O brethren!
Act like the moon! Like the blooming lilies
People would welcome you!" so said that saint!

4. 'வீழ்கின்ற கண்ணீரைத் துடைப்ப தற்கே
விரையட்டும் உன்றன்கை! குடிசைக் குள்ளே
ஆழ்ந்திருக்கும் இல்லாமை போக்கு தற்கே
அடியெடுத்தே நடக்கட்டும் உன்றன் கால்கள்!
கீழ்ச்சாதி, மேற்சாதி என்றே உள்ள
கேடகலப் பேசட்டும் உன்றன் நாக்கு!
வாழ்நீயும்! வாழவிடு பிறரை! இந்த
வையகத்தில் நம்சொத்து நடுகல்' என்றார்!



4. “Extend your arms to wipe out human tears!
Let your legs take you to the huts
For chasing away the poverty from there!
Let your tongue boldly lash against the ills
Of illusory gradations among mankind!
I wish you live long! Let others also
Be blessed so! In the whole of the world,
the tomb alone is our asset!” – the saint declared.



44. நேரு என்ற மேரு சாய்ந்தது

1. ஒடுங்கிற்றா இமய நெஞ்சம்?
ஓய்ந்ததா அமைதிக் கீதம்?
முடங்கிற்றா முடங்காத் தோற்றம்?
மூடிற்றா மூடாக் கண்கள்?
அடங்கிற்றா அருவிப் பேச்சும்?
அணைந்ததா அகிலத் தீபம்?
நடுங்கிற்றே குலைக ளெல்லாம்!
நம்பவா முடியும் நம்மால்?

2. மூவிரு கண்டம் எங்கும்
மொய்க்கின்ற மக்கள் நெஞ்சில்
ஓவிய மாகி விட்ட
ஒப்பிலாச் சுடரே! நாட்டுக்
காவியம் எழுத வந்த
கண்ணான மன்னா! காலப்
பாவிக்கேன் விருந்தாய் ஆனாய்?
பாதியை யார்மு டிப்பார்?

3. வையத்தின் மூலை யெங்கோ
வாழ்பவர் உரிமை போனால்
கையினை ஓங்கி, நீதி
காத்திடக் கிளம்பு வாயே!
ஐய!யார் இனிமேல் இங்கே
அழும்விழி நீர்து டைப்பார்?
தையலாம் அமைதிப் பெண்ணின்
தாலியை இனியார் காப்பார்?

44. Nehru – The Meru Mount Has Fallen!

1. Has that Himalayan heart ceased to beat?
   Has the song of peace come to a halt?
Has that restless figure taken rest?
   Have his unwinking eyes closed their lids?
Have his falls-like speeches come to an end?
   Has that Light of Asia been put out?
The entire world was rudely shocked!
   Is this not an incredible news?

2. In the hearts of the thronging people
   belonging to all the six Continents
You have become a soul of reverence!
   O the peerless beacon light!
You were making history by your deeds!
   O king more precious than our eyes!
Why've become a feast to the Demon of Death?
   Who would bear the torch of your onerous task?

3. When the human rights were stifled
   e'en in a remote corner of the world,
You used to raise your arms and voice
   and to champion their valid cause!
Sir! Who would henceforth do so
   and wipe out their distress and tears?
Who would henceforth safeguard the *thali*
   of Dame Peace on the earth?

4. சீமைக்குப் பறந்து போனாய்!
செழுங்கல்வி திரட்டி வந்தாய்!
'ஆமையோ நாமும்?' என்றே
அரிமாவாய் எழுந்தாய்! ஆண்ட
சீமையர் விலங்கு பூட்டி
சிறைக்கத வுள்ளே போட்டார்!
சீமானே! ஓய்ந்தா யாநீ?
திரும்பவும் அதையே செய்தாய்!

5. தண்ணீராய் இருந்தாய், உள்ள
சமத்துவ எழிற்சோ லைக்கே!
கண்ணான அரண்போல் காத்தாய்,
கவின்சன நாய கத்தை!
வெண்ணெயாய் உருகி நின்றாய்,
வீண்இந்தி வெறியைக் கண்டே!
வண்சுமை தாங்கி யானாய்,
வாழ்விலா மனித ருக்கே!

6. தும்பைப்பூச் சேலை ஆட
துடிக்கிறாள் அமைதி மங்கை!
தெம்பூட்டும் தாத்தா இன்றிச்
சிறாரெலாம் தேம்பு கின்றார்!
நம்பிய ஒருவர் கூட
நட்டாற்றில் விட்டா ரென்று
தம்பிகள் பெற்ற அண்ணா
தவித்திட்டார்; கலங்கி நின்றார்!

4. You flew to **Great Britain**
    and got your education there!
Then you began to roar like a lion
    and asked, "Are we docile creatures?"
The alien rule dreaded your onslaught
    and put you behind the bars!
O Lord! Did you ever relent?
    No! You continued your fight!

5. You were highly useful as the water
    to the grand garden of Socialism!
Democratic structure you safeguarded
    like the lustrous eyes of yours!
On seeing the chauvinism of Hindi
    you melted like the butter!
Simpathising with the hapless persons,
    their cause also you championed!

6. With her pure white saree flutt'ring in the wind
    Dame Peace is trembling so much!
At the demise of their energizing father
    the children are sobbing in agony!
"He was our last refuge!
    E'en he has left us in the lurch!" –
Thus Aṇṇā was bewildered
    as he was rudely shocked!

7. தேளோடும் பல்லி யோடும்
சிறையிலே கழித்தாய் வாழ்வை!
தோளுடன் இணைய வந்த
துணைமயில் நோயில் ஆழ்ந்து
நாளோடு போராட் டத்தை
நடத்திய போதும் கூட
மாளாத உரிமைப் போரில்
வாழ்வினை இணைத்தாய் அன்றோ?

8. இழுக்கின்ற சிரிப்பும் எங்கே?
எழில்ரோசா மார்பும் எங்கே?
பழுதிலாத் தோற்றம் எங்கே?
பாய்கின்ற விழிகள் எங்கே?
அழகிய முகமும் எங்கே?
அருவிபோல் சொற்கள் எங்கே?
வழிகாட்டும் கரங்கள் எங்கே?
வருவீரா,மீண்டும் இங்கே?



7. Along with scorpions,and lizards
   you spent so many days in prisons!
Even when your life partner
   suffered a lot in illness
And struggled for her life,
   as her days were numbered,
Did you not stake your life
   in the heroic freedom fight?

8. Where is your bewitching smile?
   Where is your rose-bearing chest?
Where is your spotless figure?
   Where are your darting eyes?
Where is your charming face?
   Where are your words flowing like falls?
Where are your guiding arms?
   Won't you come back again?



Tamil and Tamilians

45. தமிழா! எங்கே போகிறாய்?

1. என்னடா, தமிழா? உன்னை
எண்ணியே நொறுங்கிப் போனேன்!
அன்னையின் பாலை உண்டே,
அவளையே மிதிப்போன் என்றால்
உன்னைப்போல் உலகில் உண்டா?
உயிர்த்தமிழ் மொழியில் பாடம்
உன்பிள்ளை கற்ப தற்கும்
ஒப்பாமல் எதிர்க்கின் றாயே!

2. 'நறுந்தமிழ் செய்த குற்றம்
நாம்ஆய்ந்தால் ஒன்றே உண்டு!
தறுதலைத் தமிழ னுக்குத்
தாயாக வாய்த்த தஃதே!
அறிவார்ந்த மேலை நாட்டில்
அம்மொழி பிறந்தி ருந்தால்
உறுபுகழ் பெறுமே!' என்றே
உருகியே சொன்னார் அண்ணா!

3. 'தமிழனே என்றால், அன்னோன்
தனிக்குணம் பெற்றோன்' என்று
சிமிழ்போன்ற கவிதை யொன்றைச்
செய்திட்டார் நாமக் கல்லார்!
அமைந்தஅக் குணந்தான் என்ன?
அன்னியன் ஒழிந்த பின்னும்
சுமக்கிறான் ஆங்கி லத்தை!
சுரணையோ துளியும் உண்டா?

45. O, Tamilian! Where Are You Heading On?

1. O Tamilian! As I thought of you,
I was fully shattered!
Though fed through the breasts of your Tamil mother,
you are crushing her under your heels!
Hence to you, there's no match in the world!
Even when your children are taught
In your ever-Living Tamil,
Why do you raise your voice of protest?

2. "If we analyse the offence committed,
by Tamil, it could be nothing but
The shameful act of being the mother
of the good-for-nothing Tamilian!
If it were the mother tongue
of any advanced nation of the west,
It would have been extolled sky-high" –
Thus Aṇṇā once painfully declared!

3. Poet **Ramalingar** of **Nāmakkal,**
in one of his sweet verses declared,
"Tamils have got a trait
which is unique to them!"
And what was the trait he pointed out?
Even after the exit of the British rule
He shoulders the alien tongue, English!
Has he lost his sense of pride?


4. வீதியில் தமிழும் உண்டா?
விளம்பரம் தமிழில் உண்டா?
நீதிக்கே வாதம் செய்யும்
நெடுமன்றில் தமிழும் உண்டா?
ஆதிநற் கோயில் எல்லாம்
அர்ச்சனை தமிழில் உண்டா?
ஏதடா இசைய ரங்கில்
இன்தமிழ்? வெட்கம் வேண்டாம்!

5. தாய்மொழி போற்றும் நாடே
தரணியில் உயரக் கண்டோம்!
வாய்விட்டுச் சொல்வ தென்றால்
வளர்கின்ற சப்பான் சாட்சி!
சேய்களின் பெயரைக் கூட
செழுந்தமிழ் மணக்கும் வண்ணம்
போய்வைக்கத் தயங்கும் நீதான்
பூத்தாயா தமிழச் சிக்கே?



4. Is Tamil freely used in our streets?
Are advertisements made in Tamil?
Is there Tamil in our courts where
we fight for the ends of justice?
Are the rituals conducted in Tamil
in our famous and hoary temples?
No place for Tamil in any of our
music concerts! Should we not be ashamed?

5. Only the nations which extol their mother tongues
make headway in the world!
The ever-growing **Japan** is a standing monument
for this unassailable assertion!
You are hesitant tc choose
a sweet Tamil name, e'en to your kids!
Tragedy it is that you are
born of a Tamil mother!



46. தாயகத் தமிழ்த் தோழா!

1. தாயகத்துத் தமிழ்த்தோழா! வணக்கம்.இந்த
தனிமடலைப் ஃபிரான்சிருந்தே வரைகின் றேன்நான்!
தேய்பிறையாய்ப் போய்விட்ட வாழ்க்கை மீள
திசைமாறி வந்ததொரு பறவை யானேன்!
வாய்விட்டுச் சொல்வதிலே வெட்க மென்ன?
வாழ்வளிக்கும் இந்தமண்ணின் ஆட்சி யாளர்,
நேயமுடன் ஃபிரெஞ்சுமொழி கற்ப தற்கும்
நிதியுதவி வழங்கிப்பின் தொழிலும் தந்தார்.

2. 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத் தேநம்
கதைதோன்றி விட்டதென்றே சொல்கின் றோம்நாம்!
வில்,வாளால் நம்சோழர் கடாரம்,ஈழம்
வென்றாங்கே கொடிபோட்டார் என்போம்! அன்றோ
அல்லிரவில், பகற்பொழுதில் எல்லாம் தொண்டி
அகில்,முத்துப் பொருள்வாங்க யவனர் வந்தார்!
சொல்நண்பா! இன்றென்ன நிலைமை? அந்தச்
சொக்கவைக்கும் வரலாறு கானல் நீரா?

3. நம்மொழியில்,நம்மண்ணில் நம்தோ ளின்மேல்
நம்பிக்கை வைத்தோமா? ஃபிரான்சில் இன்றோ
தம்மொழியில் ஆங்கிலத்தைக் கலப்போ ருக்குத்
தண்டனைகள் தருவதற்கும் சட்டம் செய்தார்!
'எம்மொழியும்,எவ்வினமும்,எப்பண் பாடும்
எம்மீது படையெடுத்தல் கூடா'தென்றார்!
தம்மொழியைத் தம்மரபைக் காப்போர் மட்டும்
தாரணியில் உயர்கின்றார்! இதுதான் உண்மை.

46. O My Tamil Comrade

1. O my Tamil comrade! I bow my head to you
and pen this personal letter form **France.**
As my life has become a waning moon,
like a wand'ring bird, here I've flown!
No shame in frankly unfolding my mind!
Those who are in power in this land
Gave me financial aid for learning **French**
and then fixed me in a suitable job!


2. "E'en before the Stone Age, we were glorious!" -
So we often boast of our past!
We used to boast that the **Chola** kings invaded
Burma and **Ceylon** with bows and arrows!
Day and night, the **Greeks** and the **Romans** visited
Tondi port and purchased pearls and sandals!
But what is the position now? Tell me, O comrade!
Are the pages of those annals, mere illusions?

3. Have we pinned our faith in our Tamil,
in our fertile soil and toil?
There they've enacted a law penalising
the usage of English words in their tongue!
"No language, race or culture
should invade us!" – they boldly pronounce!
Only those who preserve their tongue and culture
make headway in the world! It's true!

4. அங்கென்ன உன்நிலைமை? மழலைப் பள்ளி
ஆதிக்கம் ஆங்கிலத்தில்! ஆல யத்தில்
வெங்கொடுமைச் சமக்கிருத மொழியின் ஆட்சி!
வேற்றுமொழி தெலுங்கினில்தான் இசைய ரங்கம்!
சுங்கம்முதல் காப்பீட்டுத் துறைகள் எங்கும்
சுடுகின்ற நெடிஇந்தி என்றால் 'அன்றே
சங்கம்வைத்தே ஆண்டவள்என் தமிழ்த்தாய்'என்றே
சளைக்காமல் கதைக்கின்றாய்; வெட்கம் வேண்டாம்?

5. 'எப்போதும் தாய்மெழியே எதிலும்' என்போர்
ஏற்றங்கள் பெறுகின்றார் கோள மீதில்!
சப்பானும் செர்மனியும் கொரியா போன்ற
தரம்உயரும் நாடுகளின் உரந்தான் என்ன?
தப்பாகத் தாய்மொழியைப் புறக்க ணித்தோர்
தத்தளிப்பார் வறுமையிலே! சான்றா வேண்டும்?
இப்பக்கம் நம்இந்தியா வங்க தேசம்,
இருள்மண்டும் ஆப்பிரிக்க நிலங்கள் சாட்சி.

6. உன்மொழிபோல் வண்மைமொழி உலகில் உண்டா?
உன்குறள்போல் பொதுமறைநூல் ஏது மண்ணில்?
உன்இசைபோல் மேன்மைஇசை எங்கே? நீளும்
உன்தொன்மை வரலாற்றை மறுப்போர் யார்?யார்?
என்இனிய தமிழ்நண்பா!அதனால் நீயும்
இழந்தவிட்ட முதுகெலும்பைத் தேடு! நாளும்
உன்மொழியில்,உன்வழியில்,உன்உ ழைப்பில்
உறுதியுடன் நிற்பதில்தான் உனக்கே வெற்றி!



4. What's the condition prevailing there at home?
Domination of **English** in the Nursery Schools!
The rule of **Sanskrit** in all our temples!
Telugu in all the music concerts!
In the Insurance Corporations and in the Department
of Customs, **Hindi** is dominant!
Yet, you boast of **Sangam** and hoary past!
Should you not be ashamed of it?

5. Those who use their mother tongue in all the fields,
surely make headway in the world!
What an amazing stamina have these nations
like **Japan, Germany** and **Korea** which've made strides!
Ignoring the mother-tongue would make nations
wriggle in poverty! Any evidence you need?
Take the example of **India** and **Bangla Desh** –
and of a number of nations in the **African** soil!

6. Is there any tongue equal to yours in richness?
Any work like **Kural*** relevant to the whole world?
Is there any music so melodious as yours?
Can anyone dispute your hoary past?
O my beloved Tamil comrade! Please launch
your search on the lost spire of yours!
Sticking to your tongue, toil and ways of life
is the only means of attaining success!

* Tirukkuṟaḷ



47. தமிழன்னையின் குரல்

1. ஞாலத்து மொழிக்கு லத்தில்
நான்என்று பிறந்தேன் என்னும்
காலமோ தொன்மை! அன்று
கவின்சீர்மை பெற்றி ருந்தேன்;
மூலத்தை மறந்தே வேற்று
மொழிதேடி, **மணிப்ர வாள**
வாலினைப் பிடித்தார் மூடர்!
மங்கிற்றே என்றன் வாழ்வு!

2. பிறந்தனன் காஞ்சிச் செல்வன்;
பிறந்தது மொழியில் தூய்மை!
திறந்தன தமிழர் கண்கள்!
சிந்தித்தார் அன்னோர் எல்லாம்!
குறைந்தன கலப்புச் சொற்கள்!
கூடிற்றே எனக்குச் சீர்மை!
'மறந்தாயோ? தம்பீ!' என்றே
வரலாற்றை எடுத்துச் சொன்னான்!

3. அடுத்தஊர்ப் பிடாரி யான
அடாததோர் இந்திப் பேயைப்
பிடித்துவந் தெனைவி ரட்டப்
பேடிகள் முயன்றார்! மைந்தன்
வெடித்ததீ மலையாய் ஆனான்!
வீறுடன் வாளெ டுத்தான்;
பிடித்தனள் ஓட்டம் இந்தி!
பெற்றவள் மகிழ்ந்து நின்றேன்!

47. The Voice Of Mother Tamil

1. In the family of the world languages
   the time of my birth is yet unknown!
May be it was long long ago!
   Most refined I was, even then!
Forgetting the origin some resorted to mix
   foreign words with those of mine!
This funny act of those reckless men
   made my charming life so dim!

2. At the birth of **Kanchi's** son **Anna**
   purity of the tongue also dawned!
The eyes of Tamils got opened!
   All of them began to think deep!
Usage of alien words was then reduced!
   My charm began to touch dizzy heights!
"Have you forgotten, O, ***Tampi!***" –
   Thus **Aṇṇā** unfolded the annals!

3. Some cowards brought here
   the evil spirit of **Hindi**
And made an outrageous attempt
   to banish me from our land!
Like a volcano this son erupted
   and put up a gallant fight!
Dame **Hindi** took to heels –
   Myself, the mother, stood joyous!

4. திரும்பிற்றே வரலாற் றேடு!
சீர்மகன் காஞ்சி மன்னன்
திருநாட்டை ஆள்வ தற்குத்
திறத்தோடு கோட்டை சென்றான்!
இருக்கின்ற சட்ட மன்றில்
இனிஅன்னை மொழிதான் என்றான்!
உரிமையை மீட்டான் செல்வன்;
உச்சிநான் குளிர்ந்து போனேன்!

5. தலைமைச்சீர்ச் செயல கத்தில்
தனியாட்சி நடத்து கின்றேன்!
கலைபல பயிற்று விக்கும்
கல்லூரி நுழைந்தேன்! சென்றேன்
பொலிவுடன் ஓடு கின்ற
போக்குவ ரத்தி லெல்லாம்!
தலைமைகன் பல்ல வக்கோ
தந்தவை இவைக ளன்றோ?

6. எப்படி வாழ்த்து வேன்நான்?
இம்மகன் பிறக்கா விட்டால்,
இப்படிப் பட்ட சீர்கள்
எவர்தேடித் தந்தி ருப்பார்?
தப்பியே பிறந்தோர் தாயைத்
தாழிட்டு மறைத்த போதில்
ஒப்பிலாக் காஞ்சிக் கோமான்
உயர்த்தினான்! அவன்பேர் வாழ்க!



4. A new leaf was turned in the annals!
The worthy son, **Kanchi** born
Reached the St. George Fort
to rule our hoary land!
In the Assembly he declared
"Tamil alone would rule the land!"
This son established his birth right –
I became highly delighted!

5. In the secretariat of the Government
I am wielding my sceptre!
Then I gained entry into the colleges
where numerous arts are taught!
In all the government transport buses
I gladly travel all around!
Are these not the precious boons
of that peerless son of **Pallava** kingdom?

6. Can I do full justice to all his deeds?
But for the birth of this eminent son
Who else would have earned me
such a place of pride in our land?
When some foul-born persons tried
to hide the grace of their mother,
This **Kanchi** -born noteworthy the leader
lifted me up! Let his fame live forever!



48. தமிழா நீ யார்?

1. எத்தனைநாள் பேசுவது? தமிழா! பேசி
எம்தொண்டை வலிக்கிறதே! இன்னும் இன்னும்
எத்தனைநாள் எழுதுவது? தமிழா! மேலும்
எங்கள்விரல் தேய்கிறதே! ஆனால் உன்றன்
நித்திரையும் கலையாதா? குறட்டை நீங்கி
நீஎழவே மாட்டாயா? முலைப்பால் தந்த
முத்தமிழ்த்தாய் தனைமிதித்தே ஆங்கி லத்தின்
மோகவலை மூழ்கியதேன்? சுரணை வேண்டாம்!

2. தாய்மொழியைப் போய்ப்போற்றும் சப்பான் செர்மன்
தரணியிலே உயர்வதுமேன்? சிந்தித் தாயா?
மேய்ந்திட்ட வெள்ளையனோ ஒழிந்தான்! இன்னும்
மேய்வானேன் அவன்மொழியும் தமிழை? நல்ல
தூய்தமிழில் பிள்ளைகட்குப் பெயர்வைக் காமல்
சுரேஷ்என்றும் சதீஷ் என்றும் அழைக்கின் றாயே!
ஓய், நண்பா! ஐயம் எழும் எதிர்காலத்தில்,
உன்மகன்யார்? வடநாட்டான் மகன்யார்? என்றே!

3. பாராண்ட பரம்பரையும் நீயா? உன்றன்
பாட்டன்பேர் குட்டுவனா? கடல்க டந்தே
நீராண்ட இராசேந்திரன் வழியில் வந்த
நேர்ப்பெயரன் நீதானா? மேலும் மேலும்
வேரூன்றும் ஆரியத்தின் தேள்கொ டுக்கை
வெட்டுவதற்கே தயங்குவதேன்? இனியும் கூட
யாராண்டால் என்னவென்றே உறங்கி டாதே!
யார்வேண்டும்? தீர்மானி! வேறென் சொல்வேன்?



49. O The Tamils –Who are you?

1. O Tamilian! How many times have I to speak and speak?
Acute pain I feel in my throat!
O Tamilian! How many days have I to write and write?
I feel a fatigue in my fingers!
Won't you get up from your deep slumber?
Won't you put an end to your snore?
Why do you trample Mother Tamil who fed through her breasts
and have a fancy for English? Aren't you ashamed?

2. **Japan** and **Germany** have made numerous strides
since they've nursed their mother tongues! Did you think of it?
The exploiting Britishers are no more our masters!
Why should his language boss over Mother Tamil?
For your kids you avoid pure Tamil names
and fancifully call them 'Suresh' and 'Satish'!
O friend! Could you differentiate in the future
the name of a Tamilian from that of a Northerner?

3. Do you belong to a clan which was once supreme
in the world? Was not king **Senguttuvan** your ancestor?
Are you not the descendant of king **Rajendran**
who crossed the seas and trounced his foes?
Why do you hesitate to cut the poisonous sting
of the Aryan cult which is taking root?
Don't be careless and plunge in slumber?
Whom do you prefer? Decide at once! Nothing more!



49. புதுயுகத் தமிழர்

(இலண்டன் சுடரொளி இலக்கியக்கழகம் நடத்திய உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

1. அன்றொருநாள் கடலோரம் அமர்ந்தி ருந்தேன்;
அலையோசைத் தாலாட்டால் உறங்கிப் போனேன்.
பொன்னொளியும் புன்னகையும் பொலிய ஓர்பெண்
புதிர்போலே வந்தென்றன் எதிரில் நின்றாள்!
"என்னம்மா? யார்நீங்கள்?" என்றேன். " உன்னை
ஈன்றெடுத்த தமிழன்னை நான்தான்!" என்றாள்.
"நன்மகனே! நீ ஏங்கும் புதுயு கத்தை
நான்உனக்குக் காட்டுகிறேன் உடன்வா" என்றாள்.

2. அழகான வான்தேரில் ஏற்றி என்னை
அண்டவெளி கொண்டுசென்ற அன்னை சொன்னாள்:
"சுழற்கோள மீதினிலே அமெரிக் காபார்!
சுடர்ஒளிரும் ஐ.நா.பார்; அதன்மு கப்பில்
எழில்காட்டும் பன்னாட்டுக் கொடிக ளோடே
ஈழத்தின், தமிழகத்தின் கொடிக ளைப்பார்!
வழிகாட்டும் தமிழ்த்தலைவர் ஐ.நா. மன்றில்
வாதாடும் முழக்கம்கேள்!" என்றாள்; கண்டேன்.

3. "அதோஆங்கே புலம்பெயர்ந்த தமிழர் இன்றோ
அனைவருமே பெருஞ்செல்வர்! பிறஇ னத்தார்
உதவிக்கே அவர்களினை அண்டி வாழ்வார்!
உயர்வாழ்வை நம்தமிழர் பெற்ற தெங்ஙன்?
புதுமைகளில் கணினிகளில், விஞ்ஞா னத்தில்
பூவுலகில் என்மக்கள் முதலில் நின்றார்!
கதிரொளியை, வீசுகின்ற காற்றைக் கூட,
கச்சிதமாய் ஏவல்செயு வைத்தார்; பார்நீ!

49. The Tamils Of New Age

(The first prize awarded poetry at the world Tamil poetry competition conducted by the London chudaroli literary Association.)

1. One day I was seated on the shore of the sea
 and fell asleep at the lullaby of waves!
 A damsel with golden mien and sunny smile
 emerged in my presence and made me wonder-struck!
 "O madam! Who are you?" I asked; she said
 "I'm Tamil, your mother! I've come
 To show you the New Age you're longing for!
 O my son! Come with me! I'll show you the strides!"

2. Boarded on an ultra modern rocket
 she took me to the high altitude and said,
 "See the revolving globe and **America** in it!
 See the luminous edifice of the United Nations!
 Among the flags of the various nations of the world
 see the fluttering flag of Tamil **Eelam!**
 Hear the ferocious oration of the Tamil leader
 who represents the Tamils!" Everything I witnessed!

3. "See the Tamils who've migrated to so many countries!
 All of them are now richert millioners!
 See, other clans are now at their mercy and call!
 How did the Tamils reach such dizzy heights?
 Our people became proficient in advanced science,
 computer and all modern technology!
 See, they are now capable of using the services
 even the air and the rays of the sun!

4. தாயகத்தின், ஈழத்தின் கடலோ ரம்பார்;
தவங்கிடக்கும் அயல்நாட்டார் கப்பற் கூட்டம்
நேயமுடன் இயந்திரங்கள், மின்பொ ருட்கள்
நேர்த்தியுடன் பெறுவதற்கே காத்தி ருக்கும்!
போய்வானை முட்டுகின்ற கட்ட டங்கள்
பொன்குவிக்கும் தொழிலகங்கள் நிறைந்த தைப்பார்!
ஓய்வதனை என்மைந்தர் புதைத்த தாலே
உலகத்தின் முதல்மக்கள் ஆனார்; பார், பார்!

5. **'சாதிஎன்றால் என்ன அது?'** என்றே இன்று
தமிழ்இளைஞர் சமுதாயம் கேட்ப தைப்பார்!
பாதியிலே ஓதியநால் வருண பேதம்
பாடையிலே போனதைப்பார்! என்றன் மக்கள்
மீதியுள்ள வாழ்க்கையினைச் சுவைப்ப தற்கு
மேவுகின்ற ஏவுகணைக் கப்பல் ஏறிச்
சீதளத்து நிலவுக்கும், தொலைவில் உள்ள
செவ்வாய்க்கும் உலாசெல்லும் மாட்சி யைப்பார்!

6. மாயவலை வீசிஎனை மேய வந்த
மாற்றாரின் வேற்றுமொழி ஓய்ந்த தைப்பார்!
தூயதமிழ்ப் பெயர்களுடன் என்றன் செல்வர்
சுழன்றுவரும் அழகினைப்பார்! உலக நல்லோர்
ஆய்ந்தென்னைச் **செம்மொழி**யாய் ஏற்ற தாலே
அகிலப்பல் கலைக்கழகம் எல்லாம் ஈங்கே
தோய்ந்தாயும் **தமிழ்த்துறைகள்** கண்ட தைப்பார்!
தொன்மையினால் **முதல்மொழி**நான் என்றார்; பார்; பார்;

7. 'உலகத்தின் பொதுமறையாம் **குறள்சட்** டத்தை
ஒருமுகமாய் வையகத்தார் ஏற்ற தாலே,
கலகவெறி,போர்க்களரி ஒழிந்த தைப்பார்!
காசினியின் தலைவரெலாம் தமிழ்மண் வந்து
பலவற்றை அறிந்துசெலும் பொற்கா லம்பார்!'
பாசஅன்னை இவைகூற மயங்கிப் போனேன்.
அலைக்கரங்கள் உறக்கத்தைக் கலைத்த போதில்,
அருங்கனவும் நனவாக ஏங்கி நின்றேன்!



4. "See the shores of **Tamilagam** and **Tamil Eelam**!
See the numerous foreign ships anchored there
For purchasing the machineries and electronic goods
which are produced by our expert hands!
See the tall and sky-scraping edifices!
See the various money-minting industries!
Since my sons are ever busy and tireless
they are now the firstrate citizeus of the world!

5. "See the present younger generation of Tamils
is completely ignorant of castes!
See, the caste- based divisions of the middle ages
have gone from us once for all!
With a view to make their lives meaningful,
See some of them have boarded missiles
And have set out on tour journey towards the moon
and to the far-off Mars Planet!

6. "See, the enticing attempts of some languages
to boss over me have come to an end!
See all the names of my beloved children
are in chaste Tamil and Tamil alone!
Since I've been recognized as a Classical Language
numerous universities throughout the world
Have commenced the research, opening Tamil Departments!
My hoary past has secured me the topmost place!

7. Since the morals of **Kural** have become the foundations
for the laws of all nations without exception,
See there is no rioting or war in the world!
See the leaders from all the countries of the world
Are coming here to learn! It is our Golden Age!"
When my Mother Tamil told so, I was wonder-struck!
Then the arms of tides disturbed my sleep,
Now I wish that dream becomes a reality!



50. தாய்த் தமிழே பாலம்!

1. அலைதாண்டிக் கடல்தாண்டிச் சென்றே—தமிழா
அன்றுநீ பெற்றசீர் வெற்றிகள் ஒன்றா?
நிலைமாறித் தடுமாறி இன்றோ—நீயும்
நிற்பதேன்? ஏதிலி எனும்பட்டம் நன்றா?
விலைதந்து பொருட்களை வாங்க—யவனர்
விரும்பியே குவிந்தனர் நெஞ்செலாம் ஏங்க!
வலைவீழ்ந்த மீனாக இன்று—நீயோ
வதைவதேன்,அயல்நாட்டார் இருட்சிறை சென்று?

2. கல்தோன்றி மண்தோன்றா முன்பே—உன்
கனித்தமிழ் தனித்தமிழ் தோன்றிய தென்பாய்!
செல்தின்று கடல்தின்ற போதும்—மீதம்
திகழ்கின்ற தமிழ்நூல்கள் உன்புகழ் ஓதும்!
வில்லேந்தி வேலேந்திக் களத்தில்—கனக
விசயரை வென்றதை மறந்தாயா உளத்தில்?
புல்லன்று, புழுவன்று என்றே—இந்தப்
பூமிக்கே அடையாளம் காட்டுவோம் இன்றே!

3. தேய்ந்ததோர் எபிரேய மொழிதான்—மீண்டும்
செழித்ததேன்? இஸ்ரேலைக் கண்டநல் வழிதான்!
ஆயிரம் ஆண்டுகள் முன்னால்—பேசும்
ஆங்கிலம் ஏதடா,வரலாற்றைச் சொன்னால்?
தாய்மொழி வாய்மொழி மாற்றி—நீயும்
தமிங்கிலம் பேசினால் எதிர்காலம் தூற்றும்!
தாய்த்தமிழ் ஒன்றேதான் பாலம்! —என்
தமிழ்த்தோழா! மறந்தால்உன் இனமானம் ஏலம்!



50. Tamil, The Only Bridge!

1. O the Tamil! Did you not in bygone days cross the seas
and attain victories in the alien lands?
Why have you now lost that ancient glory?
You're known as "stateless"! Is it not a pity?
Did not the westerners arrive here in large numbers
for eagerly purchasing our precious goods?
Why do you now wail in the jails of far-off lands
and languish like netted fish?

2. You boast of the hoary past of your Tamil
that reached perfection e'en before the Stone Age!
The literature which've withstood the onslaught
of the sea and insects are enough!
To bear testimony to our past glory,
Have you forgotten your victory over the Northern kings?
Let us now prove to the entire world
that we are not mere worms and chattels!

3. How did the dead **Hebrew** tongue resurrect?
Israel is formed on the same path!
Was there **English** a thousand years ago?
Its history would clearly reveal this!
If in conversations you distort **Tamil** and use
Anglicized Tamil, the future would surely curse!
Tamil is the only bridge! O **Tamil** comrade,
If you forget this, our honour is at stake!



51. சீனமாணவன் சீற்றம்!

1. வான்அரங்கில் மீன்கள்பல மின்னும் போதும்
வைரநிலா ஒன்றைத்தான் மழலை கேட்கும்!
கான்மலராய்ப் பலமொழிகள் திகழும் போதும்,
கனித்தமிழை அயல்நாட்டார் விரும்பிக் கற்பார்!
சீனமண்ணின் ஓர்இளைஞன் சென்னை வந்தான்;
செந்தமிழின் இலக்கியங்கள் பயின்றான்; நல்ல
தேனமுதத் தமிழ்நூல்கள், இலக்க ணங்கள்
தினம்சுவைத்தான்; கலைப்பட்டம் சிறப்பாய்ப் பெற்றான்.

2. பட்டத்தைப் பெற்றபின்னர்ச் சொந்த நாட்டுப்
பயணத்தை மேற்கொள்ளும் முன்னர் அன்னோன்,
"முட்டிநெஞ்சில் மோதுகின்ற குமுறல் ஒன்றை
மொழிகின்றேன்!" எனச்சொன்னான்! "என்ன?" வென்றார்
"கட்டிவெல்லத் தமிழ்மொழியை விரும்பு கின்றேன்!
காணுகின்ற தமிழர்களை வெறுக்கின் றேன்நான்!
திட்டாதீர், எனை"என்றான்; "ஏன்?ஏன்?" என்றே
திரண்டிருந்த நண்பரெலாம் திகைப்பாய்க் கேட்டார்!

3. "கடல்போன்ற நெடியபல இலக்கி யத்தால்
கற்கண்டாய் இனிக்கிறதே தமிழும்! கற்றால்
உடல்அணுவும் சிலிர்க்கிறதே! எனவே அந்த
உயர்மொழியை வணங்குகிறேன்; ஆனால் தொன்மைத்
திடமொழியை மடத்தமிழர் தினமும் வாட்டிச்
சிதைக்கின்றார் வதைக்கின்றார் என்ப தாலே
நடமாடும் தமிழர்களைக் காணும் போது
நஞ்செனவே வெறுக்கின்றேன்!" என்றான்; சென்றான்.


51. The Fury Of A Chinese Student

1. Even though in sky countless stars glitter
the diamond-like moon alone babies ask for!
Even though numerous tongues flourish like the forest flowers
foreigners have got a fancy to Tamil!
A youth of **Chīṉa** arrived at **Chennai**
and studied the various literature of Tamil!
He learnt grammar, studied some treasure-like works
and became a graduate of Ṭamil literature.


2. After getting the degree, but before setting out
to his native place, he unfolded his thought:
"I want to reveal a thing which's inking my mind"
he said. "And what is it?" was the question raised.
"The honey-like Tamil language, I like very much!
But I've got an aversion towards the Tamils!
Don't mistake me for this frank revelation!" he said.
Persons around him were puzzled and asked why?

3. "Because of its literature which is rich and vast
like an ocean, Tamil is sweet like candy!
Whenever I go through it, I get energized!
Hence I bow to that superb tongue! Yet
Day in and day out the Tamils are distorting
that hoary and matchless tongue!
Hence I consider them as worthless creatures
and detest them utmost!" the student said!

4. எந்தமிழ நண்பர்களே! அதனால் உங்கள்
இணையடியைத் தொட்டேநான் வணங்கிக் கேட்பேன்:
வந்தமொழி எந்தமொழி எனினும் உங்கள்
வாசலினைத் திறப்பதும்ஏன்? மணிப்ர வாளத்
தொந்தரவே ஓயவில்லை! தமிங்க லத்தின்
தொழுநோயில் சிக்குவதேன்? இன்னும் இன்னும்
வந்திறங்கும் அயல்நாட்டார் குட்டும் போதும்,
மானமின்றிச் சுரணையின்றித் தொடர்தல் ஏன்?ஏன்?



4. O my Tamil Comrade! I bow my head
touch your feet and make this earnest request;
Why do you warmly welcome any tongue
which knocks at your door? The evil
Of Sanskritized Tamil has not yet gone!
Now we're under he spell of English tongue!
Until the foreigners find fault and chide us
why should we lose our honour and be shameless?



Dravidian Movements

52. அறிவியக்கப் பாதை

1. செப்டம்பர் பதினைந்தாம் நாளில், காஞ்சித்
திருமண்ணில் நம்அண்ணா பிறக்கா விட்டால்
ஒப்பற்ற தமிழ்ப்பேச்சும், எழுத்தும் இங்கே
ஓயிலாக நடைபோடச் செய்வோர் யார்?யார்?
கப்பத்தைத் தில்லிக்கு முறையாய்க் கட்டி
காவடியை ஒழுங்காகத் தூக்கி வந்த
சுப்பர்களின் கதைமுடித்துத் தமிழர் வாழத்
துணிவோடு வடக்கிடக்கைக் கேட்போர் யார்?யார்?

2. செப்டம்பர் பதினேழில் ஈரோ டென்னும்
திருநகரில் நம்அய்யா பிறக்கா விட்டால்
குப்பையதன் சாணத்தைப் பிடித்து வைத்துக்
குங்குமத்தை மஞ்சளினை அதற்குப் பூசி,
எப்போதும் சூத்திரனாய், அடிமை யாக
இருந்துவந்த இழிவினையார் ஒழித்தி ருப்பார்?
கொப்புளம்போல் எழுந்திட்ட சாதி நோயைக்
குணமாக்கும் மருத்துவராய் யார்இ ருப்பார்?

3. தந்தையவர் பிறந்திட்ட அந்த நாளில்
தனயரெலாம் தி.மு.க காணா விட்டால்,
கந்தலெலாம் ஒன்றிணைத்துச் சேர்த்துத் தைத்த
கடிபொலி இந்திஎனும் சிறுக்கி வந்து
செந்தமிழ்த்தாய் ஆதனத்தில் அமர்ந்த நேரம்
சினந்தெழுந்து போர்புரிய இயக்க மேது?
சொந்தஇனம், சொந்தமொழி சொந்த நாட்டைச்
சுரணையுடன் காப்பதற்கோர் **வேலி** ஏது?

52. Rationalist Movement

1. In the famous **Kanchi** soil, **Aṇṇā** was born
    on the fifteenth of September. Otherwise
Who would have fostered sweet speeches
    and writings of Tamil, so widespread?
He put an end to the rule of the weak-kneed
    who were mere stooges of **Delhi**
Regularly paying their homage and tributes!
    He alone could boldly question **Delhi's** misdeeds!

2. In the well-known town **Erode, Periyar** was born.
    on the seventeenth of September. But for him
Who would have condemned moulding the cow dung
    and smearing kumkum and turmeric on it?
Who would have erased the disgrace
    of our being dubbed as *Sūtrās* and slaves?
Who would have healed the disease of castes
    which had sprung up like so many bubbles?

3. If on the birthday of our beloved leader **Periyar**
    his followers have not founded the **DMK,**
No movement was there to boldly resist
    the fierce onslaught of **Kaṭipoli Hindi!**
A mere patch-work of rotton rags,
    occupied the throne of our beloved Tamil land!
No other Movement is such an effective fence
    to safeguard our race, mother-land and mother tongue!

4. அறிவியக்கம் தமிழ்நாட்டில் தோன்றா நாளில்
அற்புதங்கள் நிகழ்வதற்கு வழிதான் எங்கே?
குறிவைத்த பகைவர்களை வீழ்த்திக் காட்டிக்
கொள்கையினால் உயர்ந்துயர்ந்து வளர்ந்த பின்னால்,
நெறியான ஆட்சிமன்றில் நிலையாய் நின்று
நித்தநித்தம் அருஞ்செயல்கள் புரிய நந்தம்
சிறப்பான இயக்கத்தை விழிபோல் காப்போம்!
தீந்தமிழர் **தேன்கூடு** கழகம் அன்றோ?



4. But for the emergence of the Rationalist Movement
 was there any way for causing such marvels?
After effectively vanquishing the foes
 and after making some remarkable strides,
It now remains so stable in power!
 For constantly making such monumental deeds
We should treat it as the apple of our eyes!
 Is not the DMK a honey-comb for Tamils?



53. அறிவாயுதம்

1. ஆர்த்துவரும் மலையருவி கண்டோம்; கண்டே
அழகான கவிதைகளைப் புனைந்தோம்; தெய்வத்
தீர்த்தமென்றும் சொல்லிஅதில் மூழ்கி மூழ்கித்
தெரியாத இன்பத்தில் திளைத்தோம்; ஆனால்
பார்த்தார்கள் மேனாட்டார் அறிவுக் கண்ணால்;
பயன்செறிந்த **மின்சக்தி** கிடைக்கச் செய்தார்!
சீர்த்திமிக்க என்தோழா! நீஎண் ணிப்பார்!
சிந்தனையே பகுத்தறிவே வாழ்வ ளிக்கும்!

2. வான்வெளியைக் கண்டோம்நாம்; அங்கே வாழும்
வட்டஉரு **நிலவினை**யும் கண்டோம்; கண்டு
தேன்நிலவை ஒருபாம்பு விழுங்கும் என்ற
தெளிவில்லாக் **கிரகணத்து**க் கதைகள் சொன்னோம்!
ஏன்என்றே ஆராயும் அயலார் கண்டார்;
எழில்நிலவில் குடியேற முனைந்தார் இன்று!
மேன்மைமிக்க என்தோழா! நீஎண் ணிப்பார்!
மேதினியில் பகுத்தறி வே **வாழ் வளிக்கும்!**

3. வட்டமிடும் வல்லூறைக் கண்டோம்; அந்த
வல்லூறின் குரலினையும் கேட்டோம்; கேட்டே
**எட்டுதிசை போற்றுகின்ற திருமா லுக்கே
ஏற்றமுள்ள வாகனந்தான்** என்று சொன்னோம்!
திட்டமிடும் மேனாட்டார் கண்டார்; வானில்
திரிகின்ற விமானத்தைப் படைத்த ளித்தார்!
மட்டில்லாப் பழம்பெருமை பேசும் தோழா!
வையகத்தில் பகுத்தறிவே வாழ்வ **ளிக்கும்!**



53. The Weapon Of Rationalism

1. Mountain-born rivers and their fierce flow, we observed
and wrote a number of sweet verses on them!
Calling them as sacred we dipped in them
and aspired for some unknown pleasures!
The westerners saw them with their discerning eyes
and produced electricity out of them!
O my comrade! Please bestow your thought!
Rationalism alone would elevate you in life!

2. The vast space and the round-shaped moon
we keenly observed! But narrated
Some incredible tales about the eclipse
saying a serpent swallowing the moon!
Those in the west bestowed their inquisitive mind;
Now they think of shifting their residence there!
O my lovely comrade! Please think over it!
Rationalism alone would give you happy life!

3. We've seen eagles flying on the sky!
Their jarring noise also is familiar to us!
Yet we called that bird a sacred mount
to Lord Thirumal, so popular amidst us!
Seeing them, the scheming minds of the west
invented the aeroplane – gave it to the world!
O comrade! You endlessly speak of the past!
Yet **Rationalism** alone would make you prosper!



54. திராவிட இயக்கச் சாதனைகள்

1. 'என்னஉங்கள் திராவிடர்தம் இயக்கம் ஈங்கே
இம்மண்ணில் சாதித்த தென்ன?' என்றே
சின்னபுத்தி கொண்டசிலர் தெருவோ ரத்தில்
சிந்துப்பா இசைக்கின்றார்! கேள்நீ நண்பா!
தன்னைத்தான் தமிழ்மகனும் உணர்வ தற்கே
தளம்கண்டோர், களம் கண்டோர் யாராம்? தூய
தன்மானம், பகுத்தறிவு தழைக்க, மேன்மைச்
சமுதாய நீதிபெற உழைத்தோர் யாராம்?

2. பெரியாரே இல்லாமற் போயி ருந்தால்,
பேயாட்ட நால்வருணம் ஒழிவ துண்டா?
பெரியாரே இல்லாமற் போயி ருந்தால்,
பிழைஇந்தி தமிழ்முடிமேல் ஏறி டாதா?
பெரியாரே இல்லாமற் போயி ருந்தால்,
பேசாத கற்களெலாம் கடவுள் அன்றோ?
பெரியாரே இல்லாமற் போயி ருந்தால்,
பெண்ணடிமை விலங்கொடிக்க நாதி ஏது?

3. அண்ணாவே பிறக்காமல் இருந்தி ருந்தால்,
அழகுதமிழ்ப் பேச்சுநடை தவழ்வ துண்டா?
அண்ணாவே இல்லையெனில் மணிப்ர வாள
ஆக்டோபஸ் ஆதிக்கம் அழிவ தெங்கே?
அண்ணாவே இல்லைஎனில், வீதி வாழும்
அன்றாடங் காய்ச்சிகட்கே விடியல் உண்டா?
அண்ணாவே இல்லையெனில், எளியோர் எல்லாம்
ஆள்வதற்கே கோட்டைபுக வழிதான் ஏது?

54. Achievements Of The Dravidian Movement

1. "Can you spell out any notable achievement
of the Dravidian Movement?"
Some vile- minded persons are prone to put
such silly questions! Listen to me, my friend!
Who strived hard and laid the foundation
for making the Tamils realize their position?
Who was responsible for our 'rational thoughts'?
'self-respect' and 'social justice'?

2. But for the emergence of **Periyar** in the field
could we have curtailed the devil dance of casteism?
But for the relentless fight of **Periyar**
would not have Hindi suppressed our Tamil?
But for the fearless propaganda of **Periyar**
all the mute stones would have become our gods!
But for the ceaseless efforts of **Periyar**
would the shackles of our women have been severed?

3. But for the birth of **Arignar Anna**,
would we have heard such sweet Tamil orations?
But for the emergence of **Anna** in the arena,
would the octopus of Sanskritized Tamil have ended?
But for.**Anna**, would the street-dwellers
have seen the dawn in their life?
But for **Anna**, would the common man
have entered the Legislature of our State?

4. கலைஞரெனும் பெருமகனும் பிறக்கா விட்டால்,
கழகமெனும் கோட்டைக்கே காவல் ஏது?
கலைஞர்மட்டும் இல்லையெனில்,சிற்றூர் பேரூர்
கவ்விநின்ற இருளாட்சி ஒய்வ துண்டா?
கலைஞர்மட்டும் இல்லையெனில், நலிந்தோர், பெண்கள்
காணுகின்ற முன்னேற்றச் சட்டம் ஏது?
கலைஞர்இன்றேல் செம்மொழியாம் தமிழன் னைக்குக்
கவின்முடியைச் சூட்டுபவர் யாராம்? கேள், நீ!



4. But for the birth of **Kalaignar Karuṇāniti**
who would have guarded the fortress of **DMK**?
But for the emergence of **Kalaignar,**
would our villages have come out of darkness?
But for **Kalaignar**, would our womenfolk
and the poor have got such a stunning progress?
But for **Kalaignar** who would have crowned
our Mother Tamil as a Classical Language?



55. சிந்தனைதான் செல்வம்

1. விலங்குகளில் சிந்திக்கும் விலங்காய் மாந்தன்
வியனுலகில் பிறந்ததனால் உயர்ந்தான்; மற்ற
விலங்குகளை ஏவல்செய வைத்தான்; நாளும்
வியப்பூட்டும் சாதனைகள் புரிந்தான்; வெற்று
நிலமாகக் காடாகக் கிடந்த கோளம்
நேர்த்தியுடன் சீர்த்திபெற வழிகள் கண்டான்!
மலைப்பூட்டும் விஞ்ஞான அறிவால், இந்த
மண்ணகத்தைச் சொர்க்கமென மாற்றி விட்டான்!

2. 'ஏன்?ஏன்?ஏன்? எனும்கேள்வி முதன்மை ஆசான்?'
எனச்சொன்னார் சாக்கரடீஸ்; அதனை ஏற்றுக்
கூன்வயதுக் காலம்வரை எடிசன் மண்மேல்
குவித்திட்டார் சிந்தனையால் நலங்கள் நூறு!
ஆன்றவிந்த சிந்தனையால் குறளார் தீட்டி
அளித்தகொடை பொதுமறையாய் ஒளிரக் கண்டோம்!
வான்வெளியின் நெடுந்தூரக் கோள்க ளுக்கும்
வளமார்ந்த சிந்தனையால் பயணம் போனோம்!

3. சிந்தனைதான் செல்வத்துள் சிறந்த செல்வம்;
சிரமுடியில் அமர்ந்திருக்கும் மூளை யாட்சி
எந்தெந்த வகையிலெலாம் உயர்த்து மென்னும்
ஈடில்லாக் காட்சிக்கே பில்கேட்ஸ் சாட்சி!
புந்திகளில் முந்துவதால் பருக்கும் தொந்தி;
பயன்என்ன? நோய்வந்து சேரும்! எண்ண
உந்துதலால் அற்புதங்கள் படைப்ப தற்கே
உரத்தேநாம் சிந்திப்போம்; வெற்றி காண்போம்!



55. Thinking is the Wealth

1. Since man alone is the thinking animal
He has got an upper hand in the world!
He has made other animals obey his commands
And has made amazing strides!
He has found out the ways of reclaiming
The barren stretches of land!
Using his thinking and knowledge of science,
He has transformed the earth into Heaven!

2. "The questioning spirit prime teacher of us"
so said the world- famous thinker ,**Socrates.**
Eddison followed his advice in right earnest
And achieved so many things till his last days!
Deep thinking is reflected in **Valluvar's** treatise
And it is a moral code to the whole world!
Our thinking was the root cause for taking us
To the far-off planets of the space!

3. Thinking is the most precious possession of all our wealth!
The achievements of **Bill Gates** of the United States
Bear testimony to the power of human brain!
It is really a match's instance!
More and more eating would make our belly bulge!
Of what use is it except making us ill?
Let us think and make many strides
In the world and achieve success!



MISCELLANEOUS POEMS

56. கல்விதான் கையிருப்பு

எந்நாடு கல்வியிலே ஏற்றம் பெறுகிறதோ
அந்நாடே முன்னேற்றம் அடையும் வளம்பெற்றே!
துடுப்பொன்றே ஓடத்தைத் துறைகொண்டு சேர்ப்பிக்கும்;
அடுப்பொன்றே காய்கறியை அழகாக உணவாக்கும்;
படிப்பொன்றே மனிதனுக்குப் பகுத்துணரும் அறிவூட்டி,
வாழ்வியலின் வளர்ச்சியெலாம் வகைவகையாய்க் காட்டிநிற்கும்.
புத்தகம் என்றால் என்ன? எத்தனையோ புதுப்பொருளை
நித்தமிங்கே காட்டுகின்ற நெடும்மாயக் கண்ணாடி!
கால்களே இலையெனினும் கண்ணால் உலகறிவோம்;
நுல்கள் இலையென்றால் நுட்பமிகும் அறிவேது?
சிறுவயதில் கல்வியினைப் பெறுவதற்கே வாய்ப்பிழந்தோர்,
அறுபதிலும் படிப்பதற்கே ஆயிரம் வழிகள் உண்டே!
கல்விக்கும் வயதேது? கற்பதற்கும் நாள்ஏது?
பொதுஅறிவை ஈட்டுதற்கே புத்தகங்கள் தேடிப்போய்
மதிவளர்ச்சி பெற்றுவிட்டால் நிதிவந்து குவியாதா?
அறிவியிற் கல்வியினால் அற்புதங்கள் படைக்கின்ற
பெருமைமிகு சப்பானை,பீடுடைய நாடுகளை
எண்ணிநாம் பார்க்கிறோம்; என்னதான் புரிகிறது?
படிப்பறிவே மூலதனம்; பட்டறிவு பெற்றபின்னர்
மிடுக்கான உழைப்பொன்றே மேன்மையெலாம் விளைவிக்கும்;
எந்திரப் புரட்சியொன்றே இல்லாமைப் பேய்ஓட்டும்!
தொழிற்கல்வி பெறவேண்டும்; துறைதோறும் துறைதோறும்
விழிப்புணர்வு பெறுவதற்கே விஞ்ஞான விழிவேண்டும்.
பழம்பெருமை ஒன்றினையே பாடுவதும் இனிபோதும்!
விழுப்பமிகு புதுமைகளை விரிவாகக் கற்றிடுவோம்!


56. Education Is Wealth!

Only the nation which has advanced in education
Is sure to flourish and make headway!
Rudders alone would safely take the boats ashore!
An oven is a must for cooking the food!
Learning gives men a discerning mind
And takes them in the path of progress!
What is a book? It is but a magic mirror
That reflects to us numerous novel things!
Though without legs, eyes would make us know the world,
Without books, how can we get such a knowledge?
Though we've wasted our younger days, thousands of ways
Are there to learn in our advanced age!
Age is no bar for education and learning!
If through the books we get general knowledge
And wisdom, won't we get enormous wealth?
We should think of advanced nations like Japan
Which have made spectacular strides
Through the study of science! What does it mean?
Bookish knowledge is the capital! Gaining experience
And tirelessly toiling are the means of success!
Industrial Revolution alone can chase away
The evil spirit of poverty! Scientific outlook
Is a must for progress in all the fields!
Enough of eulogizing our hoary past!
Let us know all the latest developments

கல்லாதார் எனும்இனமே **இல்லை,இல்லை! இனிஇல்லை!**
என்றேநாம் சூளுரைக்கும் இலக்கினையே எய்திடுவோம்!
விழிஒளியே இல்லையெனில் விரிகின்ற காட்சியுண்டா?
எழுத்தறிவே இல்லாமல் இருப்பதுவும் வெட்கமன்றோ?
காலமகள் அழைக்கின்றாள்; கட்டளையை ஏற்றிடுவோம்!
ஞாலத்தின் மாற்றமெலாம் நாம்தேடிப் பயின்றிடுவோம்!
வீட்டுக்கு வீடிங்கே வீணாகத் திண்ணைகளில்
நீட்டிநிதம் கதைபேசும் நிலையெல்லாம் ஒழித்திடுவோம்!
உழைக்கின்ற நெடும்பரிதி ஒரேஒருநாள் உறங்கிவிட்டால்
சுழல்கின்ற கோளத்தில் சுறுசுறுப்புப் பகல்ஏது?
ஓடிவரும் நற்காற்றும் ஓய்ந்தே படுத்துவிட்டால்
ஆடுகின்ற உயிர்இதய ஆட்டமெலாம் ஓயாதா?
கல்லாமை எனும்ஆமை காலூன்றி அகம்புகுந்தால்
இல்லாமைத் துணைஆமை இல்லத்தில் உடன்நுழையும்!
பொல்லாமைச் சோம்பலினைச் பொடிபொடியாய் நொறுக்கிடுவோம்!
இல்லை,இல்லை எனும் சொல்லை இல்லாமல் ஆக்கிடுவோம்.
இறக்குமதிப் பொருளைநமக் கேற்றிவரும் கப்பல்களை
எத்தனைநாள் இன்னுமிங்கே ஏங்கிநாம் பார்த்திருப்போம்.
அன்னைமண் தன்மடியில் என்னென்ன அற்புதங்கள்
இன்னுமிங்கே வைத்துள்ளாள்! இருப்பதெலாம் பயன்படுத்த
தொழிற்கல்வி,விஞ்ஞானத் துறைக்கல்வி மட்டும்தான்
எழிலார்ந்த ஏற்றத்தை விழிப்போடே உருவாக்கும்!
கதியின்றி வறுமையிலே கண்மூடி உழல்வதெலாம்
விதியென்றே பிதற்றுகின்ற வீண்பேச்சை மிதித்திடுவோம்!
மீன்ஒன்று பசியாலே தான்இங்கே சாவதுண்டா?
வான்பறவை இரையின்றி மடிவதைநாம் பார்த்தோமா?
ஈனமற்ற மனிதன்தான் இன்னமும் பூமியின்மேல்
தானுண்ணும் உணவின்றிச் சாகின்றான்; வெட்கமன்றோ?
ஏன்இந்த இழிந்தநிலை? எல்லாமே சோம்பலினால்!
போனதெலாம் போகட்டும்; புதுக்கதையைத் தொடங்கிடுவோம்!
ஓய்வென்னும் சொல்லுக்கே ஓய்வினையே தந்திடுவோம்!
வாய்ப்பந்தல் பேச்செல்லாம் வளர்ச்சியினைத் தாராது.
விடுமுறைகள் வேண்டுமென்றே அடுத்தடுத்துப் போராட்டம்
கடுமையாய் நிகழ்வதெலாம் கண்முன்னால் காண்கின்றோம்.
சோவியத்து மண்ணில் சுடர்பிரஷ்னேவ் பெருந்தலைவர்

'The have-nots are no more here! No more!'
Let us make this vow, and have it as our goal!
Can we see anything without a clear vision?
Is it not shameful to remain illiterate?
Dame Time is calling us! Let's fulfil our duty!
Let's learn all the latest developments of the world!
Let us no more while away our time in the pials
And engage in worthless chit chats!
If one day, the ever-moving sun takes rest
Can there be the brisk day light in the world?
If the wafting wind, one day, takes rest,
Won't all our heart beats come to a halt?
If illiteracy sets foot in our homes,
Poverty, its associate, would surely follow suit!
Evil and laziness – let's shatter into pieces!
'No'! Let there be no need for this word!
How many days would we eagerly await
The arrival of ship loads of imported goods?
How many marvellous things are hidden
In the lap of our Mother Earth!
Job-oriented studies and scientific knowledge
Would show us the way of utilizing them all!
Saying that fate is the root cause of poverty
Is a senseless blabber! Let us not be so blind!
Does any fish die out of starvation?
Have we seen any bird die without prey?
Only senseless humans die out of hunger
In the world! Should we not feel ashamed?
Why such a horrible situation? Laziness is the cause!
All right! Let's forget the past! Turn a new leaf!
To the term 'rest' itself, let's give rest!
Sweet epithets won't give us economic growth!
Demanding holidays, we launch agitations!
Often we do commit such aweful sins!
When the famous leader **Brezhnev** expired

ஆவியதும் பிரிந்தஅன்றோ அந்நாட்டுத் தொழிலாளர்
எப்படித்தம் அஞ்சலியை எடுத்துவைத்தார் எனக்கேட்டால்
அப்பப்பா நெஞ்சத்தின் அணுவெல்லாம் சிலிர்க்கிறது!
ஒருவரும் தவறாமல் உழைக்கும்தம் தொழிலகத்தில்
அருமையாய்ப் பணிபுரிந்தே அஞ்சலியைச் செலுத்தினராம்!
‘ **உழைப்போம்வா!**’ என்றழைத்த ஒப்பரிய புகழ்த்தலைவன்
அழைப்பினை ஏற்றவிதம் அடிமனத்தைத் தொடவிலையா?
அலைவுந்து தொடுவதையே அன்றாடம் பார்த்திருந்தால்
குலைப்பசிநோய் நீங்கிடுமா? கும்பியதும் நிறைந்திடுமா?
வலைகொண்டே ஆழ்கடலின் வளமீன்கள் வெளிக்கொணர்ந்து
நிலவுகின்ற பசிதீர்ப்போம்; நெடுந்தொழில்கள் வளர்த்திடுவோம்!
வியர்வை நதியொன்றே உயர்வினை விளைவிக்கும்;
அயர்வைத் தூள்செய்தே அந்நதியில் கலந்திடுவோம்.
மூளைக்கு விடுமுறையை முட்டாள்தான் தந்திடுவான்!
நாளை, நாளை என்றே நாட்களைக் கடத்திடுவோன்
வெற்றிகளைப் பெற்றதுண்டா? விரைந்தோடும் புத்துலகில்
கற்றுணரும் கல்வியொன்றே கையிருப்பு; பெருஞ்செல்வம்!
எனவேதான் ஏட்டாலே எழில்உலகை வென்றிடுவோம்!
அனைத்தும்நாம் கற்றிடுவோம்; அறிவால் உலகாள்வோம்!



Do you know how the Soviet workers paid
Their homage to that departed soul?
Doubtless it is a soul-stirring episode!
That day none of the workers applied for leave
And offered homage by working as usual!
For toiling hard, he had issued a clarion call!
Was not the workers' response a befitting one?
If we constantly remain enjoying the waves
Would it fill our belly and appease hunger?
Let's net varieties of fish in the deep sea
And banish hunger! Make industrial growth!
The river of sweat alone would elevate us in life!
Let weariness be smashed and thrown in it!
Only a fool would give rest to his brain!
Some do constantly postpone their task
To a later date! Can they be successful?
In the fast-moving world, learning alone is wealth!
Hence let us conquer the world through the books!
Learn everything – rule the earth by your wisdom!



57. ஐரோப்பா தரும் பாடம்!

1. அன்புள்ள எழில்!நானும் பயணம் செய்த
ஐரோப்பாக் கண்டத்தின் சிறப்பைக் கேட்டாய்!
குன்றிமணி தனித்தனியாய் மிளிர்வ தைப்போல்,
கூறுசெய்த பாத்திகளாய் ஒவ்வொர் நாடும்
ஒன்றையொன்று விஞ்சுகின்ற வகையில் ஈங்கே
ஓங்கிநிற்கும் வளக்காட்சி கண்டேன்! அன்னார்
என்றென்றும் பேருழைப்பால்,செயல்வே கத்தால்,
ஈடில்லாக் கடமையினால் உயர்ந்தே உள்ளார்!

2. **சூரியனே மறையாத ஆட்சி,** என்றே
சுழலுகின்ற கோளத்தின் நாட்டை யெல்லாம்
ஓர்குடைக்கீழ் வளைத்திருந்த **இங்கி லாந்**தோ,
உறைந்தநதி போல்மங்கி இருக்கக் கண்டேன்!
சீர்ப்பழமை,மரபுவழி இவற்றைவிட்டுச்
சிறிதேனும் பிறழாத மக்கள் கண்டேன்!
வாரிசென அரண்மனையுள் யார்வந் தாலும்
வழிபாடு நிகழ்த்துகின்ற வியப்பைக் கண்டேன்!

3. **நெதர்லாந்து** நாடுகண்டே அதிர்ந்து போனேன்!
நிலமட்டம் கடலைவிடக் கீழ்என் கின்றார்!
உதவிக்குப் பிறநாட்டைக் கெஞ்சி டாமல்
ஒப்பரிய பேருழைப்பால் நீர்இ றைத்து,
விதம்விதமாய்ப் பயிர்செய்தும்,தொழில்கள் கண்டும்
விண்முட்டும் முன்னேற்றம் பெறுதல் கண்டேன்!
இதமான **ஆம்ஸ்டர்டாம்** நகர மெங்கும்
இழைந்தோடும் **நீர்ச்சாலை** எழிலைக் கண்டேன்!

57. What Have We To Learn From The European Nations?

1. Dear **Elzhil!** You've asked me to write
    on the special features of **Europe!**
Like the shining pieces of crab's eyes
    and like the tiny strips of land,
Every country attempts to surpass another
    in some arena or other!
With their tireless toil, tenacity of purpose
    and love of duty, they have made many strides!

2. "Sun never sets in the British Empire", it was once said! -
    Thus the numerous nations of the world
England once held under its fold!
    Now it's lustreless like a frozen river!
People there were not at all prepared
    to shed their traditions and outmoded thoughts!
Anybody ascending the throne as the heir,
    people are ready to extol! It's a wonder!

3. On seeing **Netherlands** I was really amazed!
    The entire country is below the sea level!
Without the assistance of any other nation
    they bale out water using the native labour,
Cultivate the fields, cause industrial growth
    and make some miraculous strides!
I enjoyed the grand scene of waterways
    in and around the entire city **Amsterdam!**

4. போர்முனைகள் பலகண்ட **செர்மன்** நாடு
புதுப்புரட்சி **யுகப்புரட்சி** கண்ட தாலே,
பீர்போன்ற மதுபானத் தொழிலில் கூட
பெரும்வளர்ச்சி பெற்றதனைக் கண்டேன்! குன்றா
நீர்வளத்தால், விஞ்ஞானத் தொழில்நுட் பத்தால்
நிலமெல்லாம் உற்பத்தி கொழிக்கச் செய்தார்!
பேர்பெற்ற **ஹைடல்பர்க்** கோட்டை போன்ற
பெருமைமிகும் இடங்களையும் பேணு கின்றார்!

5. ஏரிகளால், பனிமலையால் சூழ்ந்து நிற்கும்
இணையில்லா **சுவிட்சர்லாந்**தோ காணக் காணப்
பூரிக்கும் வண்மைகளால் நெஞ்சை ஈர்க்கும்!
புவிக்கோள நாடெல்லாம் கூடு கின்ற
நேரில்லா **ஐ.நா.வின் மன்றம்** உள்ள
நேர்த்திமிகு **ஜெனீவாநீர் ஊற்**றோ ஆங்கே
கூர்அம்பாய் வான்கிழிக்கப் பாயும்! **கண்டக்
குடும்பத்தில்** இந்நாடே முதலில் என்றார்!

6. **சீசர்களும் ஆண்டனியும்** உலவி நின்ற
சிறப்பான **இத்தாலி,** கடும்போர் கண்டும்
பேசுகின்ற வகையினிலே முன்னேற் றத்தைப்
பெற்றதனால் வளச்செழிப்பு குலுங்கக் கண்டேன்!
வாசமுள்ள அவர்மொழியில் பேசி னால்தான்
வந்திருக்கும் நம்முடனே பழகு கின்றார்!
ஆசைவைத்த **முசோலினி**யின் மூளை யாலே
அளப்பரிய முன்னேற்றம் பெற்ற தென்றார்!

7. நேரில்லாப் போர்களினால் சரித்தி ரத்தை
நிரப்பிவைத்த **நெப்போலியன்** உலவி வந்த
பாரிசைத் தலைநகராய்க் கொண்டி லங்கும்
பண்பட்ட ஃபிரான்சினையும் கண்டேன்! **ஈஃபில்**
ஊர்நடுவே நட்டிருக்கும் **மணித்தூண்** ஒன்றே
உலகுக்கே அவர்பெருமை கூறும்! தங்கள்
சீர்மொழியில் வேற்றுமொழி கலப்போர் தம்மைத்
தீவிரமாய்த் **தண்டிக்கச் சட்டம்** கண்டேன்!


4. **Germany** which has seen so many battle-fields
has undergone a deluge-like Revolution!
Hence e'en in breweries and in producing hot drinks
it has made many strides – I've seen!
With endless water resources and advanced techniques
they've enhanced their farm products!
They preserve all their historical monuments
like the world famous **Hydelberg Fort**!

5. Surrounded by lakes and snow-covered mountains,
there's no match for **Switzerland**! Its splendour
Would allure our hearts and make us merry!
Geneva is the head quarters of the I.L.O
Where all the nations of the world assemble!
The spring there darts like an arrow
Moves very high and tears the sky!
A prime nation in the European family, they say?

6. E'en after facing some deadly wars in the past,
Italy where Caesar and Antony once sauntered,
Has made marvellous strides in recent times!
Hence I could see it wallow in wealth!
If only we give due regard to their sweet tongue,
they extend a warm welcome to us!
They assent that their beloved **Musolini's** brain
was the cause of their remarkable progress!

7. **Nepoleon** occupies some pages of the **French** history,
by his brave expeditions and heroic deeds!
Paris is the Capital of that cultured nation;
There I saw **Eiffle Tower** in the middle of the town!
That peerless monument speaks volumes
heralding their glory to the world!
Mixing other languages with their sweet tongue,
they have penalized once for all!

8. எழில்தம்பி! கீரைவளர் பாத்தி கள்போல்
எல்லைகளால் இக்கண்டம் பிரிந்தி ருந்தும்
உழைப்பதனால்,மண்பற்றால்,கட்டுப் பாட்டால்,
ஓங்கிநிற்கும் அறிவியலின் கண்ணோட் டத்தால்
விழிமொழியைப் பண்பாட்டைப் பாது காத்து
வேலிகட்டிக் காப்பதனால் உயர்ந்தே நின்றார்!
அழியாத முன்னேற்றம் காண வேண்டின்
ஐரோப்பா தரும்பாடம் இவையே என்பேன்!



8. O brother! Like some garden plots
of land, they are all tiny nations!
Because of their discipline, toil and national spirit –
because of their scientific approach to the problems
And their determination to preserve their tongue
and culture, they've made many strides!
These lessons taught by the Continent of **Europe**
are sure to lead us in the path of progress!




58. பாடம் ஒன்றா?

1. ஞானத்தைப் பெறுவதற்கு நூலை மட்டும்
நம்புவதும் சரிதானா? பரந்திருக்கும்
வானத்தைப் படித்திடுவோம்; அது புகட்டும்
வனப்புமிகு பாடங்கள் கோடி! காட்டின்
மோனத்தைக் கலைப்பதுபோல் சதங்கை கட்டி
முடுகிவரும் அருவியிடம் பாடம் கேட்போம்!
தானாகப் பாடுகின்ற சில்வண் டோசைச்
சங்கீதக் குரலுக்கே அர்த்தம் காண்போம்!

2. அதோஇங்கே ஒரேஒருநாள் சிரித்தே வாழும்
அழகுமலர் கழறுகின்ற பாடம் கேட்போம்!
இதோஎதிரி எனஅறியா மழலைக் கிள்ளை
எழிற்சிரிப்பில் இழையோடும் சுவையைத் துய்ப்போம்!
நிதானமுடன் காத்திருக்கும் அல்லி மட்டும்
நிலவுகண்டே மலர்வதுமேன்? புதிரை ஆய்வோம்!
உதாரகுணக் கார்முகில்கள் மழைபெய் யாமல்
ஒட்டாரம் செய்வதுமேன்? விடையைக் கேட்போம்!

3. எழுத்துகளில் மட்டுமிங்கே அறிவைத் தேடி
ஏமாந்தே போகாதீர்! மரத்தி னின்றே
பழுத்தஇலை உதிர்வதனைப் பார்ப்பீர்; வாழ்க்கைப்
பாதையதன் காதையினை உணர்வீர்; மண்ணுள்
புழுத்ததொரு மண்புழுவும் தியாகத் தாலே
புகழ்வாழ்வு பெறுவதுமேன்? அறிவீர்! நாளும்
அழுத்தமுடன் கோளத்தின் அங்க மெல்லாம்
அன்றாடம் புகட்டுகின்ற பாடம் ஒன்றா?



58. Not Prudent To Rely Upon Books Alone

1. Is it prudent to rely upon books alone
For acquiring knowledge and wisdom?
Let us study the vast sky above us?
It teaches us millions of lessons!
Let us learn from the rippling brookes
Which shatter the serenity of woods!
Let us decipher the hidden meaning
Of the melodious voice of the cricket!

2. Let us learn lesson from the alluring flower
Whose life is not more than a day!
Let us enjoy the betwitching laughter
Of the innocent child of tender age!
Why should illy wait for the emergence of the moon
For its blossom? This riddle we've to solve!
Why do the munificent black clouds sometime
Refuse to yield showers?


3. Don't rely upon the written materials alone
For acquiring knowledge and get disappointed.
See the withered leaves fall from the trees!
Please understand the history of them!
How are the earthworms useful to others
And hence popular?We 've to realize!
Every day some lesson or other is taught
By the countless creations of the world!



59. இப்படி இருங்கள்

1. ஈக்களிலே **தேனீ**யாய் இருங்கள்; ஆனால்
என்றைக்கும் **குளவி**களாய் மாறா தீர்கள்!
பூக்களிலே **முல்லை**யைப்போல் இருங்கள்; ஆனால்
பொழுதுக்கும் **எருக்கம்பூ** ஆகா தீர்கள்!
காக்கின்ற பசுவாக இருங்கள்; ஆனால்
கவிழ்க்கின்ற **நரி**யாக மாறா தீர்கள்!
தேக்கைப்போல் **தென்னை**யைப்போல் இருங்கள்; ஆனால்
சீரழிக்கும் **எட்டி**யென மாறா தீர்கள்!


2. காற்றினிலே **தென்றலை**ப்போல் இருங்கள்; ஆனால்
கடும்சூறை யாய்மாறி அழிக்கா தீர்கள்!
ஊற்றெடுக்கும் **ஆற்றை**ப்போல் இருங்கள்! ஆனால்
உயிர்தீய்க்கும் **எரிமலை**யாய் மாறா தீர்கள்!
மாற்றமிலா **மண்புழு**ப்போல் துணைநல் குங்கள்!
மலைப்பாம்பாய் மற்றவரை விழுங்கா தீர்கள்!
ஏற்றமிகு **பாரி**யைப்போல் இருங்கள்; ஆனால்
இரக்கமிலா **இட்லரை**ப்போல் இருக்கா தீர்கள்!



59. How To Behave?

1. Be like **Honey-bee** among the bees
   Never should you become a **wasp** and string!
   Be like a **jasmine** among the flowers!-
   Never should you become the flower of a **madder**!
   Be like **cow**, which nurtures all!
   Never should you behave like a **jackal**!
   Be like **teak wood** and a **Coconut tree**!
   Never should you be like the **poisonous** ***Ethi***!

2. Be like the soothing **Southern breeze**!
   Don't become **a storm** and cause disaster!
   Be like **a river** of perennial springs
   Don't become a **volcano** and singe numerous lives!
   Be useful to others like the **earthworms!**
   Don't become a **python** and swallow others!
   Be like famous and munificent **pāri!**
   Don't become brutal as the merciless **Hitler!**



60. மூளைதான் மந்திரக்கோல்!

1. மரத்தினின்றே கனிவீழும் காட்சி தன்னை
மலைப்போடு பார்த்திருந்தோம்; எனினும் மூளை
உரத்தாலும் திறத்தாலும் நியூட்டன் தானே
உயர்புவியின் ஈர்ப்புவிசை அதுதான் என்றார்!
நெருப்படுப்பில் ஏற்றிவைத்த பாத்தி ரத்தின்
நீர்மூடி குதிப்பதனை நாமும் கண்டோம்;
உருப்படியாய் நீராவிச் சக்தி என்றே
ஓடுதொடர் வண்டிகண்டோர் ஜேம்ஸ்வாட் தானே!

2. வான்முகட்டில் நீந்துகின்ற பறவை தன்னை
வாய்பிளந்தே பார்த்தோம்நாம்; எனினும் 'மாந்தன்
ஏன்பறக்கக் கூடாதாம் அதுபோல்?' என்றே
எழில்வான ஊர்திகண்டோர் ரைட்சே அன்றோ?
மீன்துள்ளும் கடல்முதுகில் ஏறிச் சென்றே
மிகப்பலரும் கடந்தார்கள்; எனினும் இன்று
தான்என்னும் வல்லரசாம் அமெரிக் காவைத்
தாரணிக்கே காட்டியவர் கொலம்பஸ் தானே!

3. எத்தனையோ புலவர்பலர் இருந்தார்; நாளும்
இலக்கியங்கள் பலபடைத்தார்; எனினும் ஈங்கே
அத்தனைக்கும் மணிமுடியாய் அகிலம் போற்றும்
அரியபொது மறையளித்தோர் குறளார் தானே!
முத்தான சிந்தனையால்,புதுமைத் தேடல்
முனைப்பாலே வரலாற்றில் ஏறி நிற்போம்!
மொத்தத்தில் வித்தகங்கள் நிகழ்த்த நுட்ப
மூளையொன்றே மந்திரக்கோல்! மறுப்போர் உண்டா?



60. Brain, The Magic Wand

1. The scene of fruits falling down from the trees
   We've noticed with wonder and amusement!
   But it was only the power of **Newton**'s brain
   That discovered the cause- the gravity of earth!
   When an utensil is placed on a burning oven,
   The upward movement of its lid we've seen!
   But **James watt** alone could find out the cause
   And use the steam for running the trains!

2. The flight of birds we've noticed astonishment
   But didn't think of flying like that!
   It was **Wright Brothers** who through in that line
   And invented aeroplane!
   Countless sailors have been crossing the deep oceans
   Throughout the world for centuries together!
   But **Columbus** could discover **America,**
   Which is now super-power of the world!

3. The world has seen countless poets
   Who have produced numberless works of literature!
   Is not 'kural' the world- renowned product of **Valluvar**
   A crown in that realm of literature?
   Let us attain a secure place in the annals
   Through our precious throught,novel ideas and toil!
   In short brain is the only magic wand
   To perform marvels! Can anyone deny that?




61. பாதகர் யார்?

1. அன்றொருநாள் முற்றத்தில் அமர்ந்தே நானும்
அன்றுவந்த செய்தித்தாள் படித்தி ருந்தேன்!
என்றும்போல் தம்கடைக்குச் செல்லும் காதர்
எனைக்கண்டு நலங்கேட்க உள்ளே வந்தார்!
"உன்இறைச்சி வியாபாரம் நலமா?" என்றேன்;
"ஊரெல்லாம் மேய்ச்சல்நிலம் அழிந்த தாலே
அன்றாடம் ஆடுகளின் விலையோ ஈங்கே
ஆனைவிலை ஆயிற்றே!" என்றார் காதர்.

2. அப்போதா எதிர்வீட்டுப் பட்டு மாமி
அவசரமாய் என்மனைவி தன்னைக் காணத்
தப்பாமல் எம்இல்லம் நுழைய வேண்டும்?
தயக்கமுடன் ஒதுங்கிநின்ற காதர் தம்மை
வெப்பத்தால் வெடிக்கின்ற விழியால் பார்த்து,
"விவஸ்தையிதா? ஆடுவெட்டும் பாபாத் மாவை
எப்படிநீர் வீட்டுக்குள் அனும தித்தீர்?"
எனக்கேட்டார் அம்மாமி கோபத் தோடு!

3. "உயிர்வதைக்குக் காரணமாய் இருப்போ ரெல்லாம்
உலகத்தில் பாதகர்கள் என்றால், நானும்
தயங்காமல் ஒன்றுரைப்பேன்; உங்கள் மேனி
தவழுகின்ற தகதகக்கும் பட்டுச் சேலை
மயக்குமெழில் மினுமினுப்பைப் பெறுவ தற்கே
மடிந்தபட்டுப் புழுக்கள்தொகை கோடி!"என்றேன்.
முயல்ஒன்றும் இடிகண்டே புதருள் ஓடி
சூழ்குவது போல்மாமி விரைந்து போனார்!




61. Who Is The Sinner?

1. One day I was seated in the verandah
and glancing at the pages of a daily.
Khadhar who passed through that street just entered
my house to exchange pleasantry, as usual.
"Is your mutton stall a lucrative one?" I asked.
"Since the extent of grazing land has diminished
The price of goats is mounting up every day!
Goats are now costly like the elephants" replied **Khadhar**.

2. Then, the Brahmin lady of the opposite house
hastily entered mine to meet my wife.
It was just an unexpected coincidence!
Casting her haughty look on **Khadhar**
Who kept aside with hesitation, she asked me,
"Is it fair? How did you permit
This sinner of butcher stall enter your house?"
Highly enraged she was as she lashed at me!


3. "If all those responsible for the death of lives
are to be dubbed as sinners in the world,
Let me tell one thing without hesitation, madame!
How many millions of silk worms
Were killed for the yarn of this silk saree,
a shining one that adorns your mien?"
That Brahmin lady hastily disappeared from there
Like a hare frightened by thunder!



62. ஏன்? ஏன்?

1. **தேனீக்கள்** ஒருதுளிதேன் திரட்டு தற்குத்
தினம்நூறு மலர்தேடி உழைக்கும்! நீண்ட
வான்நீந்தும் **கிள்ளைகளோ** ஓடி ஓடி,
வஞ்சகமே இல்லாமல் இரையைத் தேடும்!
மான்கூட்டம் கூடநிற்க ஒய்வில் லாமல்,
மாற்றுயிர்க்குக் கெடுதல்இன்றி உணவை நாடும்!
ஏன்இங்கே **நம்மனிதர்** உழைத்தி டாமல்
ஏமாற்றும் வித்தைகளை நம்பு கின்றார்?


2. இருட்டினிலே நம்உடலக் குருதி தன்னை,
இரையாக்கும் மூட்டையினை நசுக்கு கின்றோம்!
திரட்டிவைத்த வெண்ணெயினைப் பசித்து வந்து
தின்னவரும் பூனையினை நொறுக்கு கின்றோம்!
திருட்டுவிழி நரிவந்து கோழி யொன்றைச்
சிறையெடுத்தால் அதைச்சுட்டுப் பொசுக்கு கின்றோம்!
சுருட்டல்என்றும், ஊழல்என்றும், கொள்ளை என்றும்
தொடர்ந்திங்கே மனிதர்மட்டும் செய்தல் ஏன்?ஏன்?



62. Why So?

1. Simply to collect a drop of sweet honey,
   the bees briskly fly to numerous flowers!
The Parrots swiftly fly o'er the sky
   and toil hard for their prey!
The herds of deer prance round without rest
   and get their prey without harming anyone!
Why should men alone shirk from working hard?
   Why should he earn bread by deceiving others?

2. We crush the bugs which suck our blood
   when in the nights, we sleep on our bed!
We smash the cat that stealthily comes to eat
   the butter so carefully stored by us!
We mercilessly shoot the cunning jackals
   when they take away any of our chicks!
Scandal, misappropriation, looting – such crimes
   men are endlessly committing! Why so?




63. அறிவே அளவுகோலா?

1. ஓரறிவே உடையவையாம் மரமும் புல்லும்;
உலகத்தைக் காப்பதிலே இவைபோல் உண்டா?
சீர்ப்புல்லின் நெல்மணிகள் இல்லை யென்றால்
தீப்பசியால் மனிதகுலம் செத்தி ருக்கும்!
ஈரறிவே கொண்டவையாம் **சிப்பி , சங்கு;**
எழில்முத்தால் கடற்சிப்பி இன்பம் கூட்டும்!
நேரில்லாக் கொற்கைமுத்தைக் கிரேக்கர் வாங்க
நெடுந்துறைகள் காத்திருந்தார் கப்ப லோடே!

2. மூவறிவே உடையவையாம் **எறும்பும் செல்லும்;**
முனைப்பான உழைப்பொன்றே வெற்றி யூர்க்குத்
தேவையென்றே எறும்பைப்போல் கூறும் ஆசான்
செகம்மீதில் வேறொருவர் பிறந்த துண்டா?
பூவுலகில் நான்கறிவைப் பெற்ற தென்றால்,
பொன்வண்டும் தேனீயும் என்றே சொல்வார்!
நாவினிக்கும் தேன்தந்து நோயை ஓட்டி
நலம்சேர்க்கும் மருத்துவரே தேனீ தானே!

3. பாரகத்தில் ஐந்தறிவைப் பெற்ற தென்றே
பறவைகளை விலங்குகளைச் சொல்வார்; மண்மேல்
ஏருழவு மாடுகளே சுழலா விட்டால்
ஏதிங்கே இலைச்சோறு? மனிதன் மட்டும்
சீருடனே ஆறறிவைப் பெற்றான் என்றே
திமிர்வாதம் புரிகின்றான்; விளைச்சல் என்ன?
போர்வெறியால், வெடியொலியால், குருதி ஆற்றால்
பூமித்தாய் அமைதியினைக் குலைத்தான் பாவி!



63. Is Wisdom Alone The Measuring Rod?

1. Plants and trees and said to possess one sense alone!
But, are they not most useful to the world?
But for the paddy yielded by plants,
would not the mankind have perished out of hunger?
Chanks and shells are said to possess two senses!
But the pearls plunge the world in happiness!
Did not once the **Greeks** wait at the **Korkai** Port
eagerly to purchase our peerless pearls?

2. Ants and their kind are said to possess three senses!
Has anybody else so effectively taught us
That toil alone would lead us to success?
Have we seen any teacher like them in the world?
Bees and beetles are said to be the insects
endowed with four senses of perception!
Is not the bee an useful physician who yields
sweet honey that shields us from illness?


3. Birds and animals are said to possess
five senses of perception!
But without oxen to till the fields
can we get food to eat?
Man is proudly asserting to possess
six senses and what is the nett result?
With bloodshed, bomb blasts and battle-fronts
that sinner has shattered the world peace!



64. பெருமை

1. இசையால்தான் குயிலுக்குப் பெருமை; தோகை
எழிலால்தான் மயிலுக்குப் பெருமை; காணும்
அசையழகால் கவிதைக்குப் பெருமை; மின்னும்
ஆணிமுத்தால் கடலுக்குப் பெருமை; கீழைத்
திசைக்கதிரால் வானுக்குப் பெருமை; நல்ல
தித்திப்பால் தேனுக்குப் பெருமை; ஏவும்
விசைக்கலத்தால் நாட்டுக்குப் பெருமை; நாமோ
வீழாத தமிழால்தான் பெருமை பெற்றோம்!

2. கொடைமடத்தால் பாரிக்குப் பெருமை; வில்லின்
கூர்திறத்தால் ஓரிக்குப் பெருமை; வீரப்
படையெடுப்பால் சேரனுக்குப் பெருமை; கொள்கைப்
பகுத்தறிவால் பெரியார்க்குப் பெருமை; அண்ணா
நடையழகால் மேடைக்குப் பெருமை; அன்பு
நயவுரையால் புத்தருக்குப் பெருமை; யாரும்
அடையாத குறள்மறையை அடைந்த தாலே
அகிலத்தின் விழிமுன்னர் பெருமை பெற்றோம்!



64. Popularity

1. The cuckoo is hailed for its sweet voice!
   Peacocks are known for their gorgeous feathers!
Assonance add luster to the verses!
   The sea is known for yielding sparkling pearls!
The sky dazzles because of the blazing sun!
   Honey is relished for its sweetness!
Sky rockets are the proud products of a nation!
   Honoured we're, due to our matchless Tamil!

2. **Pāri** is known for his boundless munificence!
   Ōri is known for the sturdiness of his bow!
The **Chola** king is known for his valiant expeditions!
   Periyar is known for his rational thoughts!
Aṇṇā's orations add luster to the platforms!
   Buddha is known for his preaching of love!
Since we possess **Kural,** a matchless treasure
   we are proud in the eyes of the world!



65. புகழ்

1. கோடிமக்கள் முகிழ்க்கின்றார் பூமிப் பந்தில்;
கோடிமக்கள் மறைகின்றார் ஆண்டுக் காண்டு;
வேடிக்கை! அவர்களிலே சிலரே மண்ணில்
மேன்மைமிகு வரலாற்றுத் தலைவரானார்!
தேடிவைக்கும் மணி,வைரம்,தங்க மெல்லாம்
செழித்திருக்கும் எழிலுடலம் எல்லாம் இந்தக்
கூடுசென்று குழியடையும் வரைதான்; சொன்னால்
குவயத்தில் புகழொன்றே எஞ்சி நிற்கும்.

2. தனக்கென்றே அலைந்தழிந்தோன் சுவடே யின்றித்
தன்னோடு போய்ச்சேர்ந்தான்; பிணமாய் ஆனான்!
தனக்கென்ற நினைப்பொழித்துப் பிறருக் காகத்
தசையுடலைத் தந்தவனே கடவுள் ஆனான்!
'உனக்கெடுத்த பசியொழிக்கத் தலையைத் தந்தேன்;
உடன்வெட்டிப் போ'என்றான் குமணன்; அந்த
வினைச்செயலால் புகழ்முகட்டில் ஏறி நின்றான்;
வீரருக்கோ ஒருமுறைதான் இறப்பு தோன்றும்.

3. தன்னுடலைத் தான்அழித்தே மணக்கும் இங்கே
தணல்குளிக்கும் அகிற்கட்டை; அதுபோல் கொண்ட
பொன்னுடலின் குருதியினை மண்ணில் பாய்ச்சிப்
புகழ்கொண்டார் ஏசுபிரான்! சூதாட்டத் திற்குள்
மன்னுசுரை, ஊமத்தம் பெரிய பூக்கள்
மண்டிமிகக் கிடந்தாலும் மகிழம் பூவைச்
சின்னஇடை மங்கையர்கள் தேடு வானேன்?
தியாகமொன்றே செத்தபின்னும் வாழ வைக்கும்!

65. Fame

1. In the global earth, millions of men
come and go every year!
Wonder it is that only some among them
Attain immortal place in the annals!
The gold, diamonds and gems we accumulate
The charm of our body which we nurture
All we lose when we are buried underneath!
Fame alone would withstand forever!

2. The person who toiled night and day for his self
is gone as he loses his life!
He who put service above his personal needs
Is worshipped as a deity so sacred!
"I offer my head to appease your hunger!"
So declared the munificent **Kumaṇaṉ**
Because of that he is in the peak of fame!
Warriors die only once in their lives!

3. When the sandal wood is burnt, it emits
a sweet odour in the process!
By shedding the hot blood of his golden mien
Jesus Christ attained fame in the world!
The datura and water-gourd flowers are there
In large numbers! But why do the ladies prefer
The *makiḻa* flower alone for their tresses?
Sacrifice alone would make us live e'en after death!

4. ஆடுகின்றோம்; பாடுகின்றோம்; குதிக்கின் றோம்நாம்!
ஆண்டுகள்நூ றாகிவிட்டால் உடலம் எங்கே?
தேடுபவர் விழிகளிலே எஞ்சி நிற்கும்
திருச்சுவடு வேண்டாமா? நடுகல் ஒன்றே
கூடணைந்த கல்லறைமேல் நிற்கும்; அங்கே
குறித்திட்ட புகழ்ச்சொல்லே மிஞ்சும் சொத்து
நாடெல்லாம் கூடிவந்தே இறந்த நேரம்,
"நல்லவனே போனாயா?" என்றால் போதும்!

5. பார்முழுதும் அழவைத்தோன் செத்து விட்டால்
பாடையிலே எச்சிலினைப் பெறுவான்; ஆனால்
பார்முழுதும் சிரிக்கவைத்தோன் செத்தால், அன்னோன்
பாடையிலே கண்ணீரைப் பெறுவான்; சோலைச்
சீர்அழிக்கும் பாம்பொன்று செத்துப் போனால்
சிதையேற்றி நெருப்பிட்டு மகிழ்வார்; தோப்புக்
கார்குயில்தான் உயிரிழந்தால் கூடி வந்து
கண்ணீரைச் சிந்திடுவார்; உண்மை என்ன?

6. புகழ்க்கோட்டை எழில்வாயில் திறக்க வேண்டின்
பொற்காசுப் பெட்டியின்வாய் திறக்க வேண்டும்.
புகழ்மங்கைப் புன்னகையைக் காண்ப தற்குப்
போய்அவளின் இணைத்தாளில் விழக்கூ டாது.
திகழ்கின்ற செல்வத்தை, உடலை யெல்லாம்
தீய்ப்பதற்கு நெருப்புண்டாம்; அணுகுண் டுண்டாம்!
அகல்விளக்காம் **ஆபிரகாம் லிங்கன்** பெற்ற
அரும்புகழ்தான் குண்டாலே அழிந்த தாமோ?

7. மோதிரத்தின் பளபளப்பில் புகழா உண்டு?
முந்தானைச் சரிகையிலே புகழ்தான் உண்டா?
காததிரக் கையொலியைப் பெறுதல் கூட
கணக்கிட்டால் புகழாகத் தோன்ற வில்லை!
சாதலிலும் தமிழ்க்காகச் சாவை ஏற்ற
தமிழ்நந்தி புகழ்முகட்டில் ஏறி நின்றான்!
தீதென்றார் தமிழ்ப்பண்பை வடவர் என்றே
சினந்தெழுந்த குட்டுவனே புகழைப் பெற்றான்.


4. we sing and dance – even jump in joy!
After a hundred years where's our body?
Should we not attain the tears of those
Who happen to think of us?
The inscription of the tombstone that is buried
In the graveyard, is the only relic of out life!
If men in multitude assemble and wail
"Oh good soul! Have you gone?", it is enough in life!

5. If a person who made others weep is gone,
people would spit even at his coffin!
If a person who made others cheerful is gone
A shower of tears he would receive as reward!
If a poisonous snake is dead, people would
Put it on fire and get relieved!
But if a cuckoo of melodious voice is dead
Profuse tears people would surely shed!

6. For an entry into the fortress of fame,
generous attitude towards others is a must!
None should fall at the feet of any damsel
Since it would cause damage to his fame!
For destroying our Wealth and body!
There is the fire and the atom bomb alike!
Would the fame of **Abraham Lincoln,** a luminous lamp
Be ever destroyed by any bombardment?

7. Do you get fame through the glitt'ring ring of yours?
Would the glow of a saree border yield you fame?
Even attaining a deafening applause
Doesn't seem to yield a lasting fame!
The king **Tamil Nandi** has reached the peak of his glory
As he sacrificed his life for the sake of Tamil!
When the Northern kings ridiculed Tamil race ad culture
Senguttuvan led an expedition and attained fame!

8. உலகமெலாம் தான்கவர்தல் புகழே என்ற
உன்மத்தன் இட்லரினைப் போற்றி னோமா?
உலகமெலாம் நமைக்கவர வாழ வேண்டும்;
ஒப்பில்லா **வள்ளு**வரும் இதைத்தான் சொன்னார்!
பலர்வருவார்; பலர்போவார்; ஆனால் இந்தப்
பார்அவர்கள் அனைவரையும் நினைப்ப தில்லை;
சிலர்பெயரே புகழேட்டில் நிலைத்து நிற்கும்;
சிலருக்குள் நம்பெயரைச் செதுக்கி வைப்போம்!



8. The thought of bringing the world under his control,
    Do we extol that haughty **Hitler**?
We should be liked and loved by the whole world!
    This was what the peerless **Valluvar** told us!
Men may come and men may go in multitudes;
    The world doesn't retain them in its memory;
The names of some alone have got a lasting fame;
    Let us engrave our names in that "some"!



66. பொதுநலம்

1. **மேகத்தின்** பொதுநலத்தால் தாகம் போகும்!
மின்மினியின் பொதுநலத்தால் இருட்டும் தேயும்!
காகத்தின் பொதுநலத்தால் தூய்மை சேரும்!
கடற்கிழவன் பொதுநலத்தால் மழைகி டைக்கும்!
பாகற்காய்ப் பொதுநலத்தால் நோய்கள் ஓடும்!
பயிர்க்கூட்டப் பொதுநலத்தால் வயிறோ வாழும்!
தோகைமயில் பொதுநலத்தால் விழிபூ ரிக்கும்!
சுயநலத்தால் **மனிதன்**மட்டும் **சுருட்டல்** ஏன்?ஏன்?

2. **மண்புழுவின்** பொதுநலத்தால் வயல்சி ரிக்கும்!
வான்நிலவின் பொதுநலத்தால் காதல் பொங்கும்!
எண்கணினிப் பொதுநலத்தால் அறிவோ ஓங்கும்!
இசைக்குயிலின் பொதுநலத்தால் இன்பம் கூடும்!
விண்பூக்கள் பொதுநலத்தால் கவிதை தோன்றும்!
மென்தென்றல் பொதுநலத்தால் உடல்சி லிர்க்கும்!
மண்தாயின் பொதுநலத்தால் மனிதன் வாழ்வான்!
மனிதன்மட்டும் **சுயநலத்தால்** அலைவ தேன்?ஏன்?



66. Public Service

1. The service of clouds quenches our thirst!
    The service of glow-worms dispels darkness!
The service of crows gives us cleanliness!
    The service of the sea gives us showers!
The service of the bitter-gourd wards off diseases!
    With the service of plants we fill our bellies!
Happy we're on seeing the peacocks dance!
    But man alone is mean-minded and selfish!

2. The service of earth worms makes the fields fertile!
    The coolness of the moon is conducive for love!
Using the service of computers we gain more knowledge!
    Musical cuckoos give us happiness!
Stars are the source of inspiration for poets!
    The breeze renders the service of caressing us!
At the mercy of earth, the entire mankind lives!
    Why should man alone be selfish? Why?



67. குறையட்டும்!

1. ஆசைகளைக் குறையுங்கள்; அமைதி கிட்டும்!
அருவருப்பைக் குறையுங்கள்; உறவு கிட்டும்!
பேசுவதைக் குறையுங்கள்; வெற்றி கிட்டும்!
பிழைகளினைக் குறையுங்கள்; உயர்வு கிட்டும்!
ஏசுவதைக் குறையுங்கள்; இனிமை கிட்டும்!
இழிசெயலைக் குறையுங்கள்; ஏற்றம் கிட்டும்!
பூசல்களைக் குறையுங்கள்; நேசம் கிட்டும்!
பொறாமையினைக் குறையுங்கள்; புகழோ கிட்டும்!

2. விளைநிலத்தில் களைகுறைந்தால் விளைச்சல் ஓங்கும்!
விடிவெள்ளி ஒளிகுறைந்தால் விடியல் தோன்றும்!
அளவின்றி உண்பதுவும் குறைந்தால் தானே
அண்டிவரும் நோய்களினைத் தடுத்தல் கூடும்!
பிளவுசெயும் சாதிவெறி குறைந்தால் மட்டும்
பேதமிலாச் சமுதாயம் உருவாய் ஆகும்!
களவுகளும் ஊழல்களும் குறைந்தால் அன்றோ
காணும்நம் திருநாடு நிமிர்ந்து நிற்கும்?



67. Reduce Them!

1. Reduce your desires; you'll get peace!
Reduce your hatred; you'll get companions!
Reduce your words; success will be at your doors!
Reduce your faults; you'll get elevated!
Reduce the act of chiding others; you'll be happy!
Reduce your unbecoming deeds; you'll make strides!
Reduce confrontations; you'll get friends!
Shun of any jealousy; fame you'll surely attain!

2. If weeds are reduced, the yield will be high!
The dimness of the morning star heralds the dawn!
If only the intake of food is reduced,
the onslaught of diseases can be avoided!
If only the gulf caused by castes is reduced,
a classless society can be created!
If only corruptions and scandals are reduced
our nation can proudly lift its head!



68. செத்தும் வாழ்பவர்

1. எத்தனையோ மலர்இருந்தும் முல்லைப் பூவை
எழிற்பெண்டிர் சூடுவதேன்? படைப்பில் ஈங்கே
எத்தனையோ மரமிருந்தும் தென்னை தன்னை
இல்லத்தில் வளர்ப்பதுமேன்? பூமிப் பந்தில்
எத்தனையோ விலங்கிருந்தும் பசுவை மட்டும்
ஏற்றமுடன் போற்றுவதேன்? இம்மண் ணின்மேல்
எத்தனையோ மனிதரிங்கே இருந்தார்; போனார்!
ஏன்சிலரே வரலாற்றில் இடம்பி டித்தார்?


2. சிலர்இருப்பார் தேள்போலே; நித்தம் நித்தம்
தீமைகளைச் செய்வதிலே மகிழ்வார்! இங்கே
சிலர்இருப்பார் மூட்டையைப்போல்; பிறர்உ ழைப்பைத்
தினம்உறிஞ்சிப் பிழைத்திடுவார்! சமுதா யத்தில்
சிலர்இருப்பார் முயல்போலே; தன்வ யிற்றுத்
தீனியையே பார்த்திடுவார்; ஆனால் இங்கே
சிலர்இருப்பார் பாரியைப்போல்; செத்த பின்னும்
செய்யும்நல் லறத்தொண்டே நிலைக்கும்; வாழும்!



68. Immortal They Are!

1. Though there are countless varieties of flowers
   why do ladies prefer lilies for their tresses?
Though there are countless varieties of trees
   why do we grow coconut trees in our houses?
Though countless animals are there in the world
   why do we prefer cows for our household?
Millions of men have lived and gone!
   But only some are still remembered by the history!

2. Some would be like scorpions; They would
   cause harm to others every day!
Some are prone to live like the bugs
   which suck the blood of others!
Some would lead the life of rabbits
   which hunt for their prey and do nothing else!
Some would be like the munificent **Pari**!
   Their service would be hailed! Immortal they are!



69. தொண்டு வாழ்வு

1. தான்வாழப் பிறர்பொருளைச் சுரண்டி வாழ்வோன்
சண்டாளன்; சமுதாய **மூட்டைப் பூச்சி** !
தான்வாழ சம்பாத்யம் செய்து வாழ்வோன்
சரிமனிதன்; சமுதாயத் தில்ஓர் **சிட்டு**!
தான்வாழ நினைக்காமல் பிறர்க்காய் வாழ்வோன்
தனிவிளக்கு; **சந்தனத்து** மரந்தான் என்பேன்!
மூன்றான இடத்தினைநாம் பெறுதல் வேண்டும்;
மூடுகின்ற கல்லறைமேல் அதுதான் நிற்கும்.

2. **ஒதியமரம்** வளர்ந்துவிடும்; வாழும்; வீழும்;
ஊராரோ அதைநினைத்துக் கொள்வ தில்லை.
பதிவளரும் **செவ்வாழை** வளரும்; வாழும்;
பழக்குலையை வெட்டியபின் மறந்தே போவார்.
முதிர்தென்னை காலமெலாம் காயை நல்கும்,
முடிந்துவிட்டால் எல்லோரும் துயரம் கொள்வார்.
இதில்நாமோ தென்னையைப்போல் வாழ வேண்டும்;
இறப்பினிலும் பிறர்கண்ணீர் பெறுதல் வேண்டும்.



69. A Life of Service

1. He who exploits others to eke out his livelihood
    is a bug on society, sucking its blood!
He who cares for himself and himself alone
    is a sparrow – harming none!
He who leads a happy life and also gives happiness
    to others, is like a Sandle wood
May we should belong to the third class –
    Moving in the minds of others, e'en when gone!


2. Hollow trees might grow lofty and fall one day;
    But none around would retain them in their minds!
Banana will grow fast and yield fruits;
    Everybody will forget it after the yield!
Coconut tree yields throughout the human life;
    People at large will lament at its fall!
Better it is, we lead the life of a coconut tree!
    Tears of others, we should attain at our demise!



70. உழைப்பு

1. சேக்கையிலே இருந்துநமை எழுப்பிவிடும் **சேவல்,**
சிறுபொழுதும் பிறழாமல் உதிக்கின்ற **கதிரோன்,**
தூக்கமென்ப தொன்றின்றி ஆர்த்தோடும் **ஆறு,**
சுழன்றுவந்து சுழன்றுவந்தே அடைசேர்க்கும் **தேனீ,**
ஆக்கமொன்றும் அறியாமல் ஆடிவரும் **அலைகள்**
அன்றாடம் சொல்லுகின்ற அறிவுரைகள் யாவும்
நோக்குங்கால் **பாழ்த்தூக்கம்** நமக்குமட்டு மென்ன?
நொடிப்பொழுதும் வீணின்றி உழைத்திடவேண் டாமா?

2. அழியாத புகழ்பெற்றார் **நைட்டிங்கேல் அம்மை;**
அருமைமிகு உழைப்பாலே வரலாற்றில் நின்றார்!
அழற்பந்துக் கோளத்தைப் படைப்பாளன் படைத்தான்;
அழகான மாடங்கள்,கூடகோ புரங்கள்
எழிலோடு படைத்தவனும் உழைப்பாளி யன்றோ?
இருகைகள் ஆக்கிவைத்த அற்புதங்கள் ஒன்றா?
பழமைமிகு உலகமதைப் படைத்தவனும் இன்று
பார்வந்து நேர்கண்டால் வியப்புமடை யானோ?



70. Human Toil

1. The **cock** makes us get up early in the morning;
The **sun** regularly emerges in the east;
The **river** endlessly flows without rest;
The **bee** collects honey by roaming all around;
Waves move to and fro without seeking any rewards;
All these incidents teach us a solemn lesson;
Why should men alone plunge in deadly slumber?
Should we not toil without e'en for a second?


2. Endless fame, **Sister Nightingale** was able to attain
By her toil she secured a place in the annals!
The Creator created flame-like planets galore!
Imposing structure and massive edifices-
Are they not the products if human toil?
Are they not the Man- made marvels?
Even if the Creator comes down and pays a visit
Won't he be astound at such human feats?



71. கனவுகள் பல!

1. நாற்காலி ஒன்றேதான் பதவிப் பித்தர்
நாளெல்லாம் காணுகின்ற கனவு! பேத
வேற்றுமையே துளிஇல்லாச் சமுதா யந்தான்
விழிதிறந்த பெரியாரின் கனவு! தன்னை
ஏற்பாளா அவள்?என்றே எண்ணி எண்ணி
ஏங்குவதே காதலனின் கனவு! நல்லோர்
போற்றுகின்ற 'திருக்குற'ளை உலகுக் கெல்லாம்
பொதுச்சட்டம் ஆக்குதல்நம் கனவே என்பேன்!

2. கார்மேகத் தேரோட்டம் ஒன்றே என்றும்
கழனியில்வாழ் ஏர்உழவர் கனவு! கல்வித்
தேர்வினிலே முதல்மதிப்பெண் பெறுதல் ஒன்றே
சிறப்பான மாணவனின் கனவு! ஈங்கே
ஊர்ஆள்வோர் நேர்வழியில் ஆள்வ தொன்றே
உத்தமர்கள் காணுகின்ற கனவு! 'சங்கச்
சீர்த்தமிழின் நூல்களினை உலகம் நாடித்
தேடிவந்து கற்பது'நம் கனவே என்பேன்!



71. Numerous Are The Dreams

1. Occupying the chair is the only dream
   of those who clamour for power!
   Establishing a casteless and creedless society
   was the pet dream of **Periyar!**
   Pining for the love of his pet maid
   is the dream of a love-lorn lad!
   Making **Tirukkuṟaḷ** the moral code of the world
   is our dream, I can swear!


2. The pet dream of a farmer is
   the shower-yielding black clouds!
   Securing high marks and the first rank
   is the dream of a bright student!
   Just rule is the dream and ambition
   of all the exhalted minds!
   The world eager to learn our hoary Tamil
   is the aspiration of us all!



72. இளந்தளிரே!

1. எதிர்காலக் கனவுகளே! தளிர்க ளே!எம்
இதயவான் விடிவெள்ளி நீங்கள் அன்றோ?
புதிரான,புதிதான செயல்க ளாலே
புத்துலகம் உருவாக்கும் சிற்பி நீங்கள்!
ஒதிமரத்தால் உலகோர்க்கே நலந்தான் உண்டா?
உதவுகின்ற தென்னையைப்போல் வாழ வேண்டும்!
மதிநலத்தால்,பொதுத்தொண்டால் பிறந்த மண்ணின்
மதிப்புலகில் ஓங்குதற்கே உழைக்க வேண்டும்!

2. படிப்பறிவே மூலதனம்! குறள்நூல் கூறும்
பண்புகளே உமைக்காக்கும் கேட யங்கள்!
துடிப்புமிகு சிந்தனைதான் வாழ்க்கை ஓடத்
துடுப்பென்பேன்! அன்பொன்றே கடவுள்! பாழும்
குடி,சூது, பொய்,களவு பொறாமை என்னும்
கொடும்பேய்கள் உமைநாட விடக்கூ டாது!
நெடியபுகழ் இமயத்தின் முகட்டில் ஏற
நிலையான பேருழைப்பே ஏணி தானே!



72. O The Tenders!

1. O the dreams of the future! O the tender kids!
    Are you not the morning stars of human hopes?
You are sculptors to chisel a New World
    Through your novel and riddle-like deeds!
A tree is of no use simply because it is huge!
    We should be useful to others like the coconut trees!
Through our brain and service!
    We have to develop the binth land!

2. Education is the capital! The guidelines of '**Kural**'
    Are your shields so precious!
Progressive through is like a rudder for a raft!
    Love alone is god and nothing else!
Drinking, gambling, jealosy and hypocrisy,
    Keep all these ghosts at bay!
For attaining fame like the **Himālayan** Mount,
    Tireless toil is the only means!



73. மழலைகளே! மழலைகளே!

1. மழலைகளே! மழலைகளே! மனிதச் சோலை
மண்ணரங்கில் பூத்தமலர் நீங்கள் அன்றோ?
'குழலினிதா? யாழினிதா?' என்றால் உங்கள்
குரல்இனிதே எனச்சொன்னார் குறளார் அன்றே!
மழைகண்டால் பயிர்சிரிக்கும்; நீங்கள் வந்து
மடிதவழும் இல்லமொன்றே மகிழ்வைக் காணும்!
அழுகையுடன் பிறக்கின்றீர்! ஓ, ஓ! நாட்டின்
அவலங்கள் கண்டதனால் அழுகின் றீரா?

2. நேருமகன் தான்பிறந்த பெருநாள் தன்னை
நிலையாகக் குழந்தைகளின் திருநாள் என்றார்!
வேரோடிச் சமுதாயம் தழைப்ப தற்கே
விதைகளென வந்தீரோ பூமிப் பந்தில்?
பாரோடு சேராத வானத் தூறல்
பளிங்கைப்போல் தூய்மையுடன் காணும்; நீங்கள்
யாரோடும்,ஊரோடும் சேரா முன்னர்
எவ்வளவு துல்லியமாய் நகைக்கின் றீர்கள்?

3. எதிர்கால விடியல்களே! வரலாற் றேட்டில்
இணைகின்ற புதுவரிகள் நீங்கள் அன்றோ?
புதிரான புதிதான செயல்க ளாலே
பொன்னுலகைச் சமைக்கின்ற 'ஆக்கம்' நீங்கள்!
கதிர்தோன்றி நிலாதோன்றி விண்மீன் தோன்றி,
கண்டங்கள் தோன்றிவிட்டால் முழுமை உண்டா?
மதியாலே மாறிநிற்கும் புதுமைக் கோளம்
மனிதகுலக் கைவண்ணப் படைப்பே யன்றோ?

73. O Lisping Kids!

1. O lisping kids! Are you not the flowers
which've bloomed in the garden of mankind?
The author of Kural declared long ago
that *Kuzhal* and *Yazh* are no match for your lisp!
Rain fall makes the plants gleeful! Your emergence
gives happiness in the domestic life!
During birth you cry! Oh! Are you crying
on seeing the various agonies of the world?

2. Pandit Nehru declared that his day of birth
should be celebrated as the day of kiddies!
Have you come as roots for the growth
of human race in the global earth?
Until the drops of rain reach the earth
they are as pure as crystal!
Until you begin to mingle with the world
how pure your sunny smile is!

3. O the hope of future! Are you not the new lines
written in the pages of history?
You've been created for creating a Golden Era!
Your acts really elude our thoughts!
Is the act of creation fully complete
with the sun, the moons, the stars and the earth?
Is not the New Age of the earth
a creation of human brains and arms?

4. மூளையெனும் மூலதனம் பெற்ற நீங்கள்
   முழுநீள அளவினிலே பிறக்கின் றீர்கள்!
நாளைஎன்ற விடிவானம் தோன்று தற்கு
   நற்செய்தி தரும்வெள்ளி மீனாய் வந்தீர்!
காளைகளாய் கன்னியராய் வளர்கின் றீர்கள்!
   காதலிலும் மோதலிலும் மூழ்கு கின்றீர்!
வேளைஎன்ற இறப்புவந்து கொத்தும் முன்னர்
   வியனுலகில் நம்பெயரைச் செதுக்க வேண்டும்.

5. அன்னையென்றும் தந்தையென்றும் இருவர் சேர்ந்தே
   அல்லிரவில் எழுதிவைத்த கவிதை நீங்கள்!
பின்னர்வரும் உலகத்தார் உமைப்ப டிக்கப்
   பெருமைமிகு காவியமாய் வளர வேண்டும்!
தன்னாலே வளர்வதுதான் உடலம் ஆனால்
   சலியாத படிப்பாலே ,உழைப்பி; னாலே
பொன்னான மூளைவளம் பெருக்க வேண்டும்!
   புவிநூல்கள் அத்தனையும் படிக்க வேண்டும்!

6. விட்டி லைப்போல் வாழ்வதுவோ அற்ப வாழ்வு!
   வெறுங்கவர்ச்சி நமையழிக்கும்! அதுவும் வாழ்வா?
சிட்டினைப்போல் வாழ்வதுவோ தன்ன லத்துச்
   சிறுவாழ்வு;அவ்வாழ்வால் சிறப்பே இல்லை!
நட்டுவைத்த தென்னையைப்போல் உலகம் வாழ
   நல்லிளநீர் தரும்வாழ்வு வாழ வேண்டும்!
தொட்டிலிலே அழுகையுடன் பிறந்தீர்; உம்மைத்
   சூழ்ந்துள்ளோர் மகிழ்ந்திடநீர் உழைக்க வேண்டும்!

7. மீன்குஞ்சாய் நீங்களெல்லாம் பிறந்தி ருந்தால்
   வெறிமுதலை வயிற்றுக்குள் போயி ருப்பீர்!
மான்குட்டி யாய்நீங்கள் பிறந்திட் டாலும்
   வரிப்புலிக்கே இரையாகச் சென்றி ருப்பீர்!
தேனீக்க ளாய்நீங்கள் பிறந்தி ருந்தால்
   தினம்சேர்த்து வைத்துவிட்டு மாண்டி ருப்பீர்!
ஏனென்று பகுத்தறியும் மரபில் வந்தீர்!
   எழுகின்ற நடுகல்லால் நிலைக்க வேண்டும்!



4. Endowed with the capital of brain
you've born as charming children!
You are the morning star that heralds
the dawn of the next day!
You grow as youth and virgins in the world!
You delve in love and confrontations!
Ere the mighty arms of death snatch our lives
we should engrave our fame in the earth!

5. You are the verses jointly composed
by your parents during a dead night!
You should grow like the episodes of epics
worthy of being read by future generations!
The human body grows on its own accord;
But the human brain gets enriched
By voracious reading and tireless toil alone!
You've to study all the literature of the world!

6. The insect that is lured by the burning lamp
meets instant death! Lure causes disaster! It's sure!
Living the life a sparrow is nothing but
Selfishness! No aroma to that sort also!
Like a coconut tree we should grow tall
And be useful to others like its tender coconuts!
Born you are with cries and put in the cradle!
For helping others you should even toil!

7. If you were born as any variety of fish
you would have now become a prey to a crocadile!
If you were born in the womb of a doe
You would have now become a prey to a tiger!
If you were born as honey bees
You would have stored honey and gone!
You are born of humans with reasoning prowess!
Attaining fame should be the ambition of your lives!



74. இளைஞர்களே, விழிமின்!

1. இளைஞர்களே! இளைஞர்களே! நாளை ஏட்டை
எழுதவந்த கனவுகளே! குலுங்கப் போகும்
விளைச்சலுக்கே நாற்றங்கால் நீங்கள்! நல்ல
விஞ்ஞான விடியலுக்கே வெள்ளி நீங்கள்!
களைபோன்றே கிளைத்திருக்கும் சாதி பேதக்
கசடுகளை எரிக்கவந்த பிழம்பே நீங்கள்!
தளையறுத்துக் கிளம்புங்கள்! புதுமை பூத்த
சமத்துவச்சீர்ச் சமுதாயம் படைத்தி டுங்கள்!

2. இதோஇங்கே நீங்கள்நிற்கும் பூமிக் கோளம்
எப்போதும் ஓய்வின்றிச் சுழலா விட்டால்
அதோஅங்கே இரவேது? பகல்தான் உண்டா?
அண்டத்தின் உயிர்களுக்கே வாழ்க்கை உண்டா?
இதோஇங்கே மலையருவி ஆறாய் வந்தே
இளைப்பாற நேரமின்றி நடக்கா விட்டால்
அதோஅங்கே வயற்பயிர்கள் சிரிப்ப தெங்கே?
அன்றாடம் நம்வயிறு நிறைவ தெங்கே?

3. பாட்டனுக்கும் முப்பாட்டன் விமான மேறிப்
பறந்தானா? ஒலி,ஒளிகள் காற்றில் வந்து,
பாட்டாக, வண்ணவண்ணப் படங்க ளாகப்
பரவசத்தைக் குவிக்குமென்று நினைத்திட் டானா?
காட்டினிலே விலங்கோடு விலங்காய் வாழ்ந்தோன்
கடும்உழைப்பால் சிந்தனையால் உயர்ந்தான்! நாமும்
நாட்டினிலே எடிசனைப்போல் கியூரியைப்போல்
நல்லபல புதுமைகளைக் காண வேண்டும்!

74. Oh, Youth! Awake!


1. O Youth full of sweet dreams!
    You are to draw the future course of this land!
You are the tender plants for transplantation!
    You're the morning star heralding the dawn of science!
You are the burning flames that have emerged
    To do away the ills like castes and creeds!
Get out of all the shackles and of evil society!
    Create a New Age

2. See, unless the earth on which you stand
    constantly revolves around
Can there be day and night?
    Can any life exist on it?
Unless the river endlessly flows
    from the mountain without any rest
Can we think of plants in our fields?
    How can we fill our bellies?

3. Did your ancestors board planes and fly?
    Did they ever dream in their lives
That sound and waves would carry the scenes
    And music and fill him in pleasure?
Those who dwelt in the woods along with beasts,
    By their toil and thinking made strides!
We should follow the examples of edison and Curie
    And cause numerous advancements of science!

4. பறக்கின்ற சிட்டுகளோ,கடலின் மீனோ
பசியாலே செத்ததென்றே சேதி உண்டா?
இறக்கின்றான் உணவின்றி மனிதன் மட்டும்!
ஏன்இன்னும் இழிநிலைமை? மண்ணின் மீது
திறத்தோடும் உரத்தோடும் பாடு பட்டுச்
செம்மாந்த வாழ்க்கைநலம் பெறுதல் வேண்டும்!
வெறிப்பேத சாதிமத மடமைப் பேயை
வெடிவைத்துப் பொடிப்பொடியாய்த் தகர்க்க வேண்டும்!

5. சிந்தனையைப் போற்றுங்கள்! அறிவுப் போக்கின்
திசைக்குவிழி மாற்றுங்கள்! சோம்பித் தூங்கும்
மந்தநிலை தூற்றுங்கள்! சிலிர்த்தெ ழுந்தே
மாப்பணிகள் ஆற்றுங்கள்! பாசம் என்னும்
பந்தநன்னீர் ஊற்றுங்கள்! நலிந்து தேய்ந்தோர்
துயர்துடைத்துத் தேற்றுங்கள்! படைப்பில் எல்லாம்
சொந்தமென்றே சாற்றுங்கள்! வெற்றி யூரின்
சுடர்க்கொடியை ஏற்றுங்கள்! எழுக இன்றே!



4. Do we hear that any flying sparrow
  or fish in the ocean died of hunger?
Man alone dies for want of food!
  Should this state of affairs continue?
He should toil tirelessly and hard
  And live with all the pleasures of life!
The ghosts of blood-thirsty castes and creeds
  We should chase away from our minds!

5. Nurture reasoning! Turn your eyes
  towards the path of rational thoughts!
Shun of your laziness! Sharpen your mind!
  Arise and render your lofty service!
Shower compassion and wipe out
  The tears of the weak and the down-trodden!
Declare all equal! Unfurl
  The flag of victory! Arise, right now.




75. ஏக்கப் பெருமூச்சு!

1. கன்னிமாரா நூலகத்துள் நுழைகின் றேன்நான்;
கவர்ந்தீர்க்கும் நூற்குவியல் க
ாணு கின்றேன்!
என்னென்ன துறையிலெல்லாம் அறிஞர் கூட்டம்
எத்தனைஎத் தனைநூல்கள் படைத்தார் என்றே
உன்னிப்பாய் நோக்குகிறேன்; மலைபோல் காணும்
உயர்நூல்கள் அத்தனையும் புரட்டிப் பார்க்க
என்ஆயுள் போதாதே என்றே எண்ணி
ஏக்கத்தால் மனமுடைந்து போகின் றேன்நான்!

2. எதிர்இருக்கும் சுழற்கோள உருண்டை தன்னை
ஏறெடுத்தே ஒருசுற்று சுற்று கின்றேன்!
புதிர்ப்படைப்பில் கடல்களினால் பிரித்துப் போட்ட
பூமியதன் கண்டமெலாம், அவற்றில் உள்ள
நதியோடும் நாடெல்லாம் கூர்ந்து நோக்கி
நாம்என்றோ இவற்றையெலாம் பார்ப்போம் என்றே
கதிகலங்கிப் போகின்றேன்! வாழ்நா ளுக்குள்
காண்போமா என்றெண்ணிக் கவலு கின்றேன்!

3. கடலோரம் நடக்கின்றேன்; அலைகள் வந்து
கைதட்டி அழைக்கின்ற ஆழிக் குள்ளே
நடமாடும் வண்ணவண்ண மீன்கள் தம்மை,
நண்டுகளை,முதலைகளைத் திமிங்க லத்தைப்
படங்களிலே பார்ப்பதுபோல் நேரில் காணப்
பாரகத்தின் ஆழ்கடல்கள் வயிற்றில் மூழ்கி
நெடுங்காலம் உலவிவர எண்ணு கின்றேன்;
நீள்ஆயுள் இலையென்றே நொறுங்கு கின்றேன்!



75. A Despondent Sigh

1. I happened to enter connemara Libray;
    There I found a collection of attract me!
How many scholars of erudition have written
    On how many subjects! I made a survey!
Books were there piled like a hefty mount!
    E'en to make a cursory glance of those works
I felt my entire life won't be sufficient!
    Hence I heaved a sigh and grew despondent!

2. Then I noticed a globe kept on my table!
    Casually I made it rotate!
I noticed all the continents of the world
    All miraculously divided by deen seas!
I noticed numerous nations and their rivers;
    Anxious I was to see them all!
When I realized that my desire can't be fulfilled
    I grew depressed and grief-stricken!

3. I walked alone the seashore!
    Crabs,crocodiles and whales
And countless varieties of attractive fish
    That dance in the ocean full of waves
All these I wanted to survey as if in a screen!
    I wanted to enter nook and corner
Of the boundless seas and enjoy the sight!
    But, lo my life is not sufficient!



76. கண்ணீர்

1. **கண்ணீர்**போல் மண்மீதோர் ஆயுத த்தைக்
கண்டதுண்டா? புகார்ப்பிறந்த கற்புச் செல்வி
கண்ணகியின் கண்ணீர்தான் மதுரை தன்னைக்
கனல்நெருப்பில் பொசுக்கியது! பசித்த மக்கள்
கண்ணீரால் **ஃபிரான்சினிலே கிலெட்டின்** தோன்றிக்
காட்டாறாய்க் குருதிவெள்ளம் பெருக்கக் கண்டோம்!
கண்ணீர்தான் **புரட்சித்தீ** பரவு வதற்குக்
கண்ணிவெடித் திரிஎன்பேன்! மறுப்போர் உண்டா?

2. விண்மேகக் கண்ணீரால் மண்ணின் மீது
விளைபயிர்கள் சிரித்திருக்கும்; தேனீக் கூட்டம்
உண்ணாமல் சேர்க்கும்அடைக் கண்ணீர் தானே
உயர்தேனாய் மாறிவந்தே இனிப்பை ஊட்டும்!
வண்ணமலர் **ரோசாவின்** கண்ணீர் அன்றோ
வாசமிகும் **அத்தர்**என மணத்தைக் கூட்டும்!
கண்ணீரின் சுவை உப்பா? பொய்,பொய் மேலே
காண்கின்ற கருத்தெல்லாம் தப்பா? சொல்வீர்!

3. கண்ணீரே வெந்நீர்தான்! அதன்வெப்பத்தால்
கருகுவது மகிழ்ச்சியன்றோ? பூமி ஊறும்
மண்ணீரால் ஊர்செழிக்கும்; கண்ணில் ஊறும்
மழைவிழிநீர் இன்பத்தை அழிக்கு மன்றோ?
கண்ணீரில் இரண்டுவகை உண்டாம்! ஒன்று
கதறிஅழும் பொழுதீங்கே பொழியும்; இன்றேல்
விண்ணதிரச் சிரிப்பதனால் வழியும்! பொங்கி
வீழட்டும் **ஆனந்தக் கண்ணீர்** எங்கும்!



76. Tears

1. Is there any foridable weapon in the world
Comparable with tears? **Pugar** –born woman
Kannagi was the symbol of chastity!
Her tears charred the entire city of **Madurai**!
Guilletin was the creation of hungry masses
Of France and it caused the human blood
Flow like a river! I assert that tears are
The detonators of Revolution! Can anyone deny?

2. The tears of clouds make the plants
On the earth dance in joy!
The sweet honey is nothing but
The stored-up tears of honey-bees!
The tears of alluring and fragrant rose
Becomes Athar,a sweet-smelling perfume!
Saline taste is attribute to tears!
No, no! Are my above assertions false?

3. Tears are always hot! Is not the happiness
Charred at the heat of tears!
The water spring make the soil fertile!
But tears make happiness disappear?
Two are the categories of tears!
One is caused when we are in agony!
Loud laughter also causes tears roll down!
Let this sort of tears spring everywhere!




77. சினத் தீ

1. நெடுஞ்செழியப் பாண்டியனின் கடும்சி னத்தால்
நீதியின்றிக் கோவலனும் வெட்டப் பட்டான்!
துடித்தெழுந்த கண்ணகியின் கொடும்சி னத்தால்
சுடர்நெருப்பில் மதுரைநகர் எரிந்த தாங்கே!
இடிவீழ்ந்தால் உடல்மட்டும் கருகும்; கோப
எரிகுழம்பால் குடிமுழுதும் தீய்ந்தே போகும்!
அடங்காத சினமேஓர் அரவம்; ஈங்கே
அதன்நச்சால் அழிந்தவர்கள் கோடி, கோடி!

2. சினமென்னும் தீயரக்கன் இல்லா விட்டால்,
தினம்கொலைஏன்? சிறைகள்ஏன்? மனிதர் நெஞ்சில்
சினமென்னும் பாழும்பேய் தோன்றா விட்டால்
தித்திக்கும் இல்லறத்தில் சிக்கல் ஏது?
சினந்தானே சிரிப்புக்கே எதிரி! அந்தச்
சினந்தானே உளநோய்க்கே கடைக்கால்! தீய
சினம்ஒன்றே உறவறுக்கும் அரிவாள்! என்றும்
சினம்ஒன்றே பகைவளர்க்கும் உரந்தான் என்பேன்!

3. தீபத்தைத் தீண்டுகிற விட்டிற் பூச்சி
தீக்கிரையாய் ஆகிவிடும்; அதுபோல் நாமும்
கோபமென்னும் பாபவலை சிக்கி டாமல்
கொஞ்சமிங்கே தப்பிவிட்டால் இன்பம் மிஞ்சும்!
சாபத்துள் நாம்பெற்ற கொடிய சாபம்
சண்டாளக் கோபந்தான் என்றே சொல்வேன்!
ஆபத்தின் ஊற்றுக்கண் கோபத் தீயை
அன்பென்னும் நீரால்தான் அணைக்க வேண்டும்!



77. The Flame Of Fury

1. By the flame of Pāṇṭiyaṉ Neṭuñceḻiyaṉ's fury
   Kōvalaṉ was unjustly beheaded!
   By the flame of the rudely shocked Kaṇṇaki's fury
   The entire city of Maturai was be charred!
   At the thunder stroke, body alone would be charred!
   At the flame of fury, the entire clan would perish!
   Uncontrollable anger is like a deadly snake!
   Its venomous sting has killed millons of lives!

2. But for the existence of fury,the monster,
   Why murders every day? Why so many prisons?
   If the ghost fury doesn't enter the hearts of humans
   Would there be any problem in the sweet family life?
   Anger is the avowed enemy of laughter!
   It is the root cause for the loss of mental balance!
   Anger is the sword that severs human bondage!
   It is the breeding ground of enmity, I say!


3. The locust attracted by the flame of a lamp
   Is sure to become a prey to the fire!
   If alone we escape the net baneful fury,
   Can we have happiness in our lives!
   Of all the curses suffered by human beings
   Fury is the deadliest,I dare say!
   The flame of fury, the hot-bed of all dangers,
   Should be put out by pouring the water of love!



78. கண்ணாடி

1. கதிரவனின் கண்ணாடி ஆழி! ஓடும்
காலத்தின் கண்ணாடி வரலாற் றேடு!
சதிர்த்தென்றல் கண்ணாடி பூக்கள்! தூய
தமிழ்க்கற்பின் கண்ணாடி சிலம்பு! நல்ல
நதிப்பேச்சின் கண்ணாடி கரங்கள் ஓசை!
நாகரிகக் கண்ணாடி உடைகள் தோற்றம்!
எதிர்காலக் கண்ணாடி வளர்விஞ் ஞானம்
எழிற்சட்டக் கண்ணாடி குறளே என்பேன்!

2. தாமரையின் கண்ணாடி பரிதி! ஆழ்ந்த
தத்துவத்தின் கண்ணாடி தெளிவு! பேசா
ஊமைக்குக் கண்ணாடி சைகை! காதல்
உறவுக்குக் கண்ணாடி மழலை! ஆடும்
பூமலரின் கண்ணாடி வண்டு! நந்தம்
பொற்காலக் கண்ணாடி சோழர் ஆட்சி!
சாமத்தின் கண்ணாடி உடுக்கள்! சாகாத்
தமிழுக்குக் கண்ணாடி சங்க நூல்கள்!



78. Mirror

1. Occan is a mirror of the sun!
    History is the mirror of the hastening time!
   Flowers are the mirrors of dancing breeze!
    Silappatikram reflects the chastity of a Tamil woman!
   Appluse is the reflection of a brook-like speech!
    Dress is the reflection of the style of future!
   Growing science is the mirror of our advanement!
    Kural reflects a perfect legal system!

2. The sun is the mirror of lotus flower!
    Clarity is the hall-mark of a philosophy!
   Dumb persons perceive things through signals!
    Lisping child is the proof of Love!
   Bees reflect the blossom of flowers!
    Chola rule is the symbol of the Golden Age of Tamils!
   Shining stars indicate midnight!
    Sagam works reflect the ever-lasting Tamil!



79. சிரிப்புப்பூ

1. முகவயலின் அழகுப்பூ சிரிப்புப் பூதான்!
    முழுநிலவோ வான்தோட்ட ஒளிப்பூ! நந்தம்
அகம்திகழும் துயரஇருள் ஓட வேண்டின்
    அற்புதப்பூ சிரிப்புப்பூ மலர வேண்டும்!
பகைவரையும் வகைப்படுத்தி ஈர்ப்ப தற்குப்
    பாலத்தை அமைக்கும்பூ இப்பூ வொன்றே!
நகைளெலாம் விலைமிகுதி; உதட்டில் பூத்து
    நலம்விளைக்கும் புன்னகைப்பூ மலிவே யன்றோ?

2. நெருப்புப்பூ அழற்பிழம்பால் உயிர்க ளெல்லாம்
    நீறாகும்; கருகிவிடும்! தாமே பூக்கும்
எருக்கம்பூ நெருஞ்சிப்பூ இலைக ளாலே
    என்னபயன்? ஏதுபயன்? இரவு மங்கை
விரிக்கும்பூ உடுக்களெனும் விளக்குப் பூக்கள்
    விடியல்வந்தால் அணைந்துவிடும்! ஆனால் வாயின்
சிரிப்புப்பூச் சிறப்பெல்லாம் ஒன்றி ரண்டா?
    சிரிப்பதற்கும் வஞ்சம்ஏன்? கஞ்சம் ஏன்?ஏன்?

3. சிரிப்பொன்றே நோய்விரட்டும் மாம ருந்து!
    சிரிப்பொன்றே ஒயில்கூட்டும் தேன்வி ருந்து!
சிரிப்பொன்றே மரணத்தைத் தள்ளிப் போடும்!
    சிரிப்பொன்றே உறவுகளின் உரமாய் மாறும்!
இருக்கின்ற மாடுகளும் ஆடும் ஈங்கே
    எழில்தவழச் சிரிப்பதுண்டா? மாந் தருக்கே
தரப்பட்ட பெருவரமே சிரிப்பு! அந்தச்
    தனிவரத்தைத் துய்ப்பதற்குத் தயக்கம் ஏன்?ஏன்?



79. The Flowers Of Laughter

1. Laughter is the flower blooming on the face, its land!
The moon is the flower in the garden of the sky!
If you want to chase away your inner darkness,
Laughter, the marvelous flower should blossom!
The gulf that exists between enemies
Should be set right only by laughter!
Gold-made jewel is costly; But the laughter
That blooms through our lips is not so!

2. Like the flame, laughter would burn things
And reduce them to ash!
What is the use of the flowers that blossom
In the poisonous shrub and thorny bush?
Stars are the flowers yielding light during night;
But they disappear at the dawn!
Numberless are the special features of laughter!
They why stringiness in display the laughter?

3. Laughter is a good panacea that chases away illness!
It is a dish very delicious like the honey!
Laughter is capable of even postponing death!
It is a unique fertilizer for human relationship!
Do the animals possess the boon of laughter?
Is it not an unique trait of human beings?
Is it not a boon enjoyed by them?
Then, why reluctance to display that laughter ? why?



80. வாழ்க மேநாள்

1. ஏதினி அடிமை வர்க்கம்?
 எனக்குரல் உயர்த்தி வந்த
மேதினம் வாழ்க! மண்ணில்
 மேட்டுரார் கீழு ராரை
ஆதிக்கம் செய்த பாழும்
 ஆணவம் அழிந்த தெந்நாள்?
மேதினி போற்றி வாழ்த்தும்
 மேநாளே அந்நாள் அன்றோ?

2. கழகாட்சி மேநாள் அன்று
 கட்டாய விடுமு றைக்கே
எழிலோடு சட்டம் செய்த
 ஏற்றத்தை மறப்போன் உண்டா?
விழலுக்கே நீரைப் பாய்ச்சும்
 வேதனை ஓட வேண்டும்!
உழைப்பவன் உயர வேண்டும்!
 ஒற்றுமை தழைக்க வேண்டும்!

3. பாட்டாளிக் கூட்டம் கூட்டி ,
 பதமாக நடித்துக் காட்டி ,
கூட்டாளி நீங்கள் என்றே
 கும்பியை வளர்ப்போன் உண்டு!
நாட்டினில், சமுதா யத்தில்
 நல்நீதி கிடைப்ப தற்குத்
தீட்டிடும் திட்டம் வேண்டும்!
 சிந்தனை மாறல் வேண்டும்!

80. May Day – Let Us Hail


1. "Slavery, no more in the world" -
This voice is raised aloud
And **May Day** comes! Let us hail!
The arrogance of the higher-ups
Denigrating those at the lower rung
has been shattered on that day!
Did it not take place in the **May Day**
which is hailed by the entire world?

2. The government of the **DMK** declared
May Day a declared holiday!
Can anyone forget this declaration,
a milestone in the annals of our land?
Let us no more waste our precious time
in any good-for-nothing deed!
Those who toil should get elevated!
Unity should flourish everywhere!

3. By organizing some rallies of labourers
and deftly enacting a grand drama
Some pose to be their real comrades
and thus earn their livelihood!
A number of plans have to be chalked out
to ensure the welfare of the people
And justice and fairplay in the society!
Our mode of thought should undergo a change!

4. **வியர்வையின் துளிக** ளே!உம்
விழாநாளே மேநாள்! தோளின்
உயர்வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்!
அயர்வின்றி உழைப்போ னுக்கே
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான **மேல்நாள் மேநாள்!**
ஒப்பிலா அந்நாள் வாழ்க!

5. தீதில்லா உழவனுக்கோ **தைநாளே** திருநாள்!
சிறைவாடும் கைதிக்கோ **விடுதலைநாள்** திருநாள்!
மாதவளின் வாழ்க்கையிலோ **மணநாளே** திருநாள்!
மாங்காட்டின் குயிலுக்கோ **வேனில்நாள்** திருநாள்!
நாதியற்ற பயிருக்கோ **மழைநாளே** திருநாள்!
நடனமிடும் மயிலுக்கோ **கார்நாளே** திருநாள்!
மேதினியில் உழைப்பாளர் உரிமைகளை ஈன்ற
மேன்மைதவழ் தொழிலாளர் திருநாளே **மேநாள்!**



4. O the drops of sweat! **May Day**
is a Festivel Day of yours!
May Day is a matchless day
that loudly heralds your upsurge!
May Day is the Hey Day
that wrested thousands of rights
To those who tirelessly work hard!
Let that Day be hailed by all!

5. For the farmer, *Pongal* is the Festival Day! -
For the prisoner, the day of his release is so!
For a lady, her Wedding Day is the Festival Day!
For the cuckoo, summer is most pleasant!
For the plants, rainy day is the Festival Day!
Clouds alone can enthuse the dancing peacocks!
May Day is the day of the toiling masses,
when all their rights are fully asserted!



81. கவிவேந்தர் வேழவேந்தனைப் பற்றி

வெற்றித் திருமகன் வேழ வேந்தன்
அன்றுநம் நாட்டின் அமைச்சரா யிருந்தவர்.
அளந்து பேசும் அரசியல் வாதி;
சிறந்தவழக் கறிஞர், சிறந்த கவிஞர்.
உப்புச் சுவையினால் உடலெலும்பு வளரும்
இனிப்புச் சுவையினால் இந்திரியம் பெருகும்.
துவர்ப்புச் சுவையினால் இரத்தம் சுரக்கும்.
இவரது நூல்களை எடுத்துப் படித்தால்
கட்டுப் பாடும் கடமை உணர்ச்சியும்
வெட்டுப் படாத வீரமும் வளரும்.
உள்ள படிநான் உயர்வாக மதிக்கும்
கள்ளுண் ணாத கவிஞரை இங்கு
வருமா றழைக்கிறேன்.கவிதை
தருமா றழைக்கிறேன் சபையோர் மெச்சவே.

—உவமைக் கவிஞர் சுரதா




81. On Vezhavendan

Vezhavendan, a victorious son
Was once a minister in our state.
A politician very cautious in using his words!
An eminent lawyer, a well-known bard!
Calcium causes the growth of bones –
Semen is increased by the sweet stuffs!
Astringency causes the production of blood!
If we go through his works of literature
A sense of duty, a high degree of discipline
Dauntless valour – all of them we're sure to get!
This poet, a teetotaller out and out
I love and revere most.

By

Bard Suradha, a popular poet of our days and an adept in the art of handling similes and metaphors.





கவிவேந்தர் கா. வேழவேந்தன்

பிறந்த நாள்: 05.05.1936. பிறந்த மண்: காரணி. இந்த இனிய சிற்றூர் அன்றைய தொண்டை வள நாட்டின் செங்கை மாவட்டத்திற்கு உரியது; இன்றைய கும்மிடிப்பூண்டி வட்டத்து ஆரணி ஆற்றங்கரையில் அமைந்தது.

உயர் கல்விக்கு ஊரில் வழி இல்லாததால் இவர் சென்னைக்கு வந்து பயின்றார்; வழக்கறிஞரானார். மாணவப் பருவத்திலேயே அறிஞர் அண்ணாவின் **திராவிட நாடு**, கலைஞரின் **முரசொலி – முத்தாரம்** பாவேந்தரின் **குயில்** உவமைக்கவிஞர் சுரதாவின் **காவியம் – இலக்கியம்** முதலிய ஏடுகளில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் எழுதிப் புகழ் பெற்றவர். தொடர்ந்து, தரமான தமிழிலக்கிய இதழ்களில் எழுதிக் கொண்டிருப்பவர்.

கவிஞர் தாகூர் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசாகத் தங்கப் பதக்கம் வென்றவர்.

வேழவேந்தன் கவிதை நூலை, படிக்கும் பருவத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள், தலைநகரில் வெளியிட்டுப் பாராட்டியிருக்கிறார்.

மிகப்பலரும் மரபை மறந்த நிலையில்– பாவேந்தரின் கருத்து மணமும், சுரதாவின் உவமையழகும் மிளிர இயல்பாகப் பாடுவதில் இணையற்றுத் திகழும் வேழவேந்தன் உரைநடையிலும் வல்லவர். இதற்கு, இவருடைய கதை நூல்களும், கட்டுரை நூல்களும் சான்று சொல்லும். பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ள கவிவேந்தர், பத்துக்கும் மேற்பட்ட நூல்களுக்கு ஆசிரியர். தமிழ்மொழிக்காகவும், இனத்திற்காகவும் பல முறை சிறை சென்றவர்.

1964 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் ஆணையை ஏற்று அந்தமான்–நிக்கோபார் தீவுகளுக்குச் சென்று, வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ்த் தொழிலாளர் சமுதாயத்திற்காக வழக்கு மன்றத்தில் வாதாடி அவர்களுக்கு மறுவாழ்வு ஈட்டித் தந்தவர். இவர் பெயரில், அத்தீவுகளில் இன்றும் நற்பணி மன்றங்கள் இயங்குகின்றன.

கும்மிடிப்பூண்டித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்-பட்டவர். கலைஞர் அமைச்சரவையில் தொழிலாளர் நல அமைச்சராகப் பொறுப்பேற்று, புகழ்ப்பணி புரிந்தவர். ஜெனிவாவில் நடந்த உலகத் தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புற்றவர்.

தமிழ்த்தேன் என்ற தமிழியக்க உணர்வூட்டும் தனித்தமிழ் ஏட்டை நடத்தி இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர்.

வண்ணத்தோகை என்னும் கவிதைத் தொகுதிக்காக, தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றவர். தமிழக அரசின் **பாவேந்தர் விருது** பெற்றவர். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு தமிழ்ப் பாட நூல்களில் இவருடைய பாடல்கள் இடம்பெற்றுப் புகழ்மணம் வீசுகின்றன.

பாவேந்தர், முத்தமிழறிஞர், கவியரசர், உவமைக்கவிஞர் ஆகியோரின் தலைமையில் கவியரங்கேறியதுடன் தாமே நாடுமுழுதும் கவியரங்கத் தலைமை ஏற்றுக் கவிதை இலக்கியம் தழைத்திடச் செய்பவர்.

சிறந்த இயற்றமிழ்க் கவிஞர் என்பதற்காக, **தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்** “கலைமாமணி” விருது வழங்கியது.

முரசொலி அறக்கட்டளை தலைசிறந்த கவிஞராகத் தேர்ந்தெடுத்து பாராட்டுக் கேடயமும் ரூ. 1 இலட்சம் பரிசும் வழங்கியது.

இலண்டன் சுடர்ஒளி இலக்கியக் கழகம், உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி நடத்திய போது முதல் பரிசு பெற்றார். இவர் கவிதைகளை ஆய்வு செய்து பல மாணவர்கள் எம்.ஃபில், பிஎச்.டி பட்டம் பெற்றுள்ளனர்.

KAVIVENDAR KA. VEZHAVENDAN

Date of birth 05.05.1936. Place of birth Karani. This lovely little hamlet belongs to chingleput District, the erstwhile prosperous Thondai Nadu. This is on the banks of Arani, situated within Gummidipoondi.

Since there was no provision for pursuit of higher studies in the village, he came to chennai. After studies, he became a lawyer. Even during student days, he attained fame by writing poems, articles short stories in the publications such as Arignar Anna's *Dravida Nadu,* Kalaignar's *Murasoli, Mutharam,* Pavendar's *Kuyil* and Suradha's *kaviyam, Ilakkiyam.*

During Poet Tagore's centenary celebration, he participated in the poetry competition held all over Tamil Nadu and won gold medal as the first prize.

While he was yet a student, his book '*Vezhavendan Kavithaigal*' was released in the capital city by Arignar Anna with acclamation.

While many forget traditions – here was vezhavendan who was equally proficient in prose as he was naturally inclined towards composition of poems with the flavor of Pavendar and the beauty of Suradha's similes. His storybooks and the compilation of his articles would bear witness to these. He is the author of over ten books and recipient of several prizes and awards. He went to jail for the sake of Tamil and the Tamilians.

He had been to Andaman Nicobar Islands at the behest of Arignar Anna in the year 1964 and argued in the court of law on behalf of Tamil workers who were dismissed from service. He helped them to restart their life. There are many welfare units in these islands that bear his name.

He was elected to the State Assembly as member **twice** from Gummidipoondi constituency. In **Kalaignar**'s cabinet, he took up the responsibility as the **Minister of worker's welfare** as performed glorious service. He participated in the World Conference for workers in Geneva.

He was the one who encouraged young writers by his publication 'Tamil' then, a unique Tamil tradition that ignites the feelings for Tamil movement.

He received a prize from Tamil Development Department for his composition of poems entitled 'VannaThogai'. He received the ***Pavendar* award from Tamil Nadu Government**. His poem finds a place in the textbooks prescribed for the school and college students. These poems are fragrantly famous.

He himself had gone all over the state presiding over the arena where poems are rendered besides participating in such events presided over by erudite poets of the day.

For being a poet, excellent in Tamil compositions, he was given the title **Kalaimamani by Tamil Nadu Iyal Isai Nadaga Mandram** (A well known forum for literature, Music & Drama)

Murasoli Trust had given a shield and a cash prize for Rs.1 lakh selecting him to be a **Poet par excellence**.

He won the first prize in the World Tamil Poetry Competition conducted by **London Sudar Oli Kazhagam**. Many students have done their research on his poetry and have received M.Phil and Ph.D, degrees.

சுவைத்தீர்களா?

கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின்
தேன்சுவை பிலிற்றும் தெவிட்டாத படைப்புகள்

1. ‘தமிழா! எங்கே போகிறாய்?’
(பரிசும் விருதும் ஈட்டிய கவிதைத் தொகுதி) ரூ. 60.00
2. ‘வேழவேந்தன் சிறுகதைகள்’
(அருவி நடை இலக்கியக் கட்டுரைத் தொகுதி) ரூ. 60.00
3. ‘தமிழா? அமிழ்தா?
(அருவி நடை இலக்கியக் கட்டுரைத் தொகுதி) ரூ. 60.00
4. ‘ஏக்கங்களின் தாக்கங்கள்’
(கல்லூரிப் பாடநூற் கவிதைத் தொகுதி) ரூ. 60.00
5. ‘தெரிய....தெளிய....’
(வாழ்வியல் மேம்பாட்டுக் கட்டுரைத் தொகுதி) ரூ. 60.00
6. ‘தூறலும் சாரலும்’
(வரலாற்றை உணர்த்தும் வண்ணக் கவிதைத் தொகுதி) ரூ. 60.00
7. ‘மனக்காட்டுத் தேனடைகள்’
(கவிநயம் கமழும் கட்டுரைகள் – தொகுப்பு) ரூ. 60.00
8. ‘வண்ணத் தோகை’
(தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற கவிதைத் தொகுதி) ரூ. 60.00
9. ‘வேழவேந்தன் கவிதைகள்’
(அறிஞர் அண்ணா வெளியிட்டுப் பாராட்டிய கவிதைத் தொகுதி) ரூ. 60.00
10. ‘வெற்றிக்கு ஒரு முற்றுகை’
(வாழ்வியல் மேம்பாட்டுக் கட்டுரை நூல்) ரூ. 60.00
11. அனல்மூச்சு
(எழுச்சி மிகு கவிதைத் தொகுதி) ரூ. 80.00

A System of Transliteration of Tamil

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	ī	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	ĀYTAM	
ஒ	o	ஓ	ō	ஃ	k̲

CONSONANTS

Hard		Soft		Medial	
க்	k	ங்	ṅ	ய்	y
ச்	c	ஞ்	ñ	ர்	r
ட்	ṭ	ண்	ṇ	ல்	l
த்	t	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	l̲
ற்	r̲	ன்	n̲	ள்	ḷ
ஸ்	s	ஷ்	ṣ	ஹ்	h
		ஜ்	j		

Our Publications

1.	இரட்சணிய யாத்திரிகம்	M. Mathiyalagan	1998	Rs.450.00	US $ 50
2.	Count-Down from Solomon or The Tamils Down the Ages Through Their Literature Vol.I	Hephzibah Jesudasan	1999	Rs.350.00	US $ 20
3.	Count-Down from Solomon or The Tamils Down the Ages Through Their Literature Vol.II	Hephzibah Jesudasan	1999	Rs.350.00	US $ 20
4.	Pāratitācan̲ – Pāṇṭiyan̲ Paricu in English	M.S. Venkatachalam	1999	Rs.200.00	US $ 40
5.	Kalittokai in English	V. Murugan	1999	Rs.700.00	US $ 40
6.	Contribution of Tamil Nadu to Sanskrit	C.S. Sundaram	1999	Rs.400.00	US $ 40
7.	ஷெல்லியும் பாரதியும் – ஒரு புதிய பார்வை	ஜி. ஜான் சாமுவேல்	2000	Rs.200.00	US $ 8
8.	Nālaṭiyār in English	M. Annamalai	2000	Rs.180.00	US $ 15
9.	Tolkāppiyam in English	V. Murugan	2000	Rs.600.00	US $ 40
10.	The Great Penance at Māmallapuram	Michael D. Rabe	2001	Rs.500.00	US $ 20
11.	Count-Down from Solomon or The Tamils Down the Ages Through Their Literature Vol.III	Hephzibah Jesudasan	2001	Rs.500.00	US $ 40
12.	Tamil Social History, Volume.III	N. Subrahmanian	2001	Rs.550.00	US $ 62
13.	A Kur̲avañji in Kuṭr̲ālam	David C Buck	2005	Rs.350.00	US $ 25
14.	The Story of Casting the Net	G. Selva lakshmi	2005	Rs.215.00	US $ 20
15.	Treatise on Mathematics – Part – II	P. Subramaniam, K. Sathyabama	2005	Rs.210.00	US $ 20
16.	The Misplaced Royal Romance	G. Uthiradam	2005	Rs.400.00	US $ 40
17.	A Kuravañji of Riṣivintam	M. Maruthamuthu	2006	Rs.335.00	US $ 35
18.	Akatticar Kalampakkam	R. Jayalakshmi	2006	Rs.200.00	US $ 20
19.	The Story of Kusalavan̲	G. Selva lakshmi, R. Jeyalakshmi	2006	Rs.160.00	US $ 20
20.	A Pool of Poison	R. Jeyalakshmi K.Panneer Selvam	2006	Rs.180.00	US $ 30
21.	Velavendan's Poems	P.Thiagarajan	2006	Rs.250.00	US $ 20
22.	Rama and Ravana at the Altar of Hanuman	T. Wignesan	2006	Rs.350.00	US $ 25
23.	Pan̲n̲iru Tirumur̲ai in English Vol.XIV Part –I	T.B.Siddhalingaiya	2006	Rs.800.00	US $ 40
24.	Tamil Saivism and the Transcending Message of Ramalinga Swamy	T. Dayanandan Francis	2006	Rs.150.00	US $ 15
25.	Lexicographic practice in Tamil: problems and prospects	V. Murugan	2006	Rs.300.00	US $ 25
26.	On Tamil Poems and Poets (Essays and Speeches)	G. John Samuel	2006	Rs.300.00	US $ 25